TNLA Debates:

No. 5

VII.

1980

DIGITIZED

C

1211,31 N80

N81.7.5

123094

வெளியீடு—13-1-1981] [Issued—13-1-1981

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1980 ஆகஸ்ட் 8 **Friday 8th August 1980**

தொகுதி VII—எண் 5 — **Volume VII—No. 5.**

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
**Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009**

விலை 3.15 காசுகள்] [Price 3.15 Paise

D
V2(1),31 N80
N81.7.5
123094

## உள்ளடக்கம்.

8-8-1980.


| | பக்கங்கள். |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 529–573 |
| 2 உரிமைப் பிரச்சினை— | |
| 'மக்கள் செய்தி', 'அண்ணா', 'முரசொலி' நாளேடுகள் மீது—தீர்ப்பு. | 573–575 |
| 3 அறிக்கை அளித்தல்— | |
| (அ) மணலி எண்ணை சுத்திகரிப்பு ஆலைக்கு வரும் குழாய்களிலிருந்து எண்ணை திருடுவது—அமைச்சரின் அறிக்கை .. | 575–578 |
| (ஆ) திருப்பத்தூர் காவல் நிலையத்தருகில் வெடிகுண்டினால் தாக்கப்பெற்று காவல் ஊர்தியில் இருந்தவர்கள் இறந்துள்ளது.. | 656–659 |
| அரசினர் தீர்மானம்— | |
| விதி 58-ஐத் தளர்த்தல் .. .. .. | 578 |
| 5 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) கோவை மாவட்டத்தில் மின்சார வாரிய ஊழியர்கள் இருவர் கொலை செய்யப்பெற்றுள்ளது. | 579–584 |
| (ஆ) சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி ஆசிரிய, மாணவர்களது போராட்டம் | 584–595 |

பக்கங்கள்.

6 அறிவிப்புகள்—

(அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர் தேர்தல் 595

(ஆ) ஆளுநர் இசைவு—நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்)—2 வது திருத்தச் சட்ட முன்வடிவு, 1980. 613

7 கவன ஈர்ப்புக்கள்—

(அ) தஞ்சையில் பூச்சிகள் தாக்கி குறுவை நடவு பாதிப்பு. 595–598

(ஆ) சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் சில குடியிருப்பில் உள்ளவர்களைக் காலி செய்தல். 598–605

(இ) கோவை வேளாண்மை பல்கலைக் கழகப் பணியாளர்கள் உண்ணாவிரதம். 605–607

(ஈ) கைத்தறித் துணிகள் தேக்கத்தினால் நெசவாளர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது. 607–608

8 அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980. 609

(ஆ) பல்கலைக் கழக கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவு, 1980. 609–611

(இ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1980. 611

(ஈ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1980. 612

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1980). 613–655

9 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 659–660


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வெள்ளிக்கிழமை, 1980, ஆகஸ்ட் 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.'

அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர், சொற்களின் வகை அறியாதவரே; அவர் சொல்ல வல்லதும் இல்லை.

### 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சாத்தான் குளத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகம்

* வினா எண். 128— திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு வணிகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தான் குளத்தில் இயங்கிவரும் சார்பு பதிவுத் துறை அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில், பொது மக்கள் பயன் கருதி இத்திட்டத்தைக் கைவிடும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமே இல்லை.

[1980 ஆகஸ்ட் 8

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே பிர்க்கா அடிப்படையில், எந்தெந்த பிர்க்கா நகரங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் இப்போது புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஏற்கனவே இல்லாத பிர்க்காக்களில் புதிதாக அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெளிவாக என்ன விவரம் கேட்கிறார்கள் என்பதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அதைக் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, சாத்தான் குளத்தில் பதிவுத் துறை அலுவலகம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது புதிதாக ஏதாவது ஆரம்பிக்கும் செயற் குறிப்பு இருக்கிறதா? அப்படியானால் அது எப்போது செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, சாத்தான் குளத்தில் சார் பதிவாளர் அலுவலகம் இல்லை என்பது உண்மையல்ல. சார் பதிவாளர் அலுவலகம் இன்றைக்கு அங்கே நிரந்தரமாகப்பணிபுரிந்துகொண்டு இருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாட்டில் எத்தனை சார் பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. புதிதாக எத்தனை இந்த ஆண்டு ஆரம்பிக்க இருக்கின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு உடன்பாடானது இல்லையென்றாலுங்கூட (குறுக்கீடு)...... தனிக் கேள்வி போட வேண்டும். என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்ட விழைகிறார்கள் என்பதால், மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே. தற்போது சாத்தான் குளத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. ஆகவே, அதற்குப் புதிதாக ஒரு கட்டிடத்தை பெரிய அளவில் கட்டித்தர அரசு முன்வருமா?



1980 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற தகவலில் இருந்து சற்று நான் வேறுபடுகிறேன். அந்தச் சாத்தான் குளம் சார் பதிவாளர் அலுவலகம் இன்றைக்கு அரசு கட்டிடத்தில் தான் இயங்கி வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சார் பதிவுத் துறை அலுவலகங்கள் நெல்லை மாவட்டத்திற்கு நான்கு சாங்ஷன் ஆகியிருக்கிறது. அது எப்போது துவங்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, விரைவில்—போர்க்காலத்தில் எப்படி பதைபதைப்புடன் செய்யப் படுமோ அப்படி இந்த அரசு அதைச் செய்யும்.

கொல்லிமலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

* வினா எண் 129—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையை மாவட்ட உலாத் தலமாக மேம்படுத்த, அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்தத் தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த இடங்களைத் சுற்றுலாத் தலங்களாக முன்னேற்றுவதற்கு அரசின் திட்டம் என்னென்ன? எவையெவை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சுற்றுலாத் தலங்கள் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்கின்றன. 1. உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலங்கள். 2. தேசிய முக்கியத்துவம் பெற்ற சுற்றுலாத் தலங்கள். 3 3. மாவட்ட அளவிலே சுற்றுலாத் தலங்கள். ஆகவே, இந்த அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு எத்தனை இடங்கள் என்று கணக்கிட்டு

[1980 ஆகஸ்ட் 8

எடுத்துக்கொள்வது இல்லை. ஆனால் இது போன்ற இடங்களை மாவட்டத்திற்கு 1—2 பகுதிகளையாவது சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்கு போக்குவரத்துக் கழகங்களின் துணையோடு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே இந்த கொல்லிமலைப் பகுதி ஒன்று.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதியை மாவட்ட அளவிலே உள்ள சுற்றுலா இடமாக அமைப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுவாகவே இந்தக் கொல்லிமலைப் பகுதி பல சர்ம நோய்களைத் தீர்க்கக்கூடிய இயற்கை அமைப்பைக்கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அதை மேம்படுத்த அரசு எந்த எந்த வகையிலே திட்டமிட்டிருக்கிறது? என்னென்ன வசதிகளை ஏற்படுத்த இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்தக் கொல்லிமலை என்பது கடல் மட்டத்திலிருந்து 1,400 மீட்டர் உயரத்தில் இருக்கிறது. மிக அழகிய சூழ்நிலைகளைக் கொண்ட ஒரு மலைவாசஸ்தலமாக இருந்து வருகிறது. 1,050 அடி உயரத்தில் அழகான நீர்வீழ்ச்சி ஒன்று இருக்கிறது. இதைத்தவிர அங்கே பழங்காலத்தில், 6-வது நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கருதப்படுகின்ற தொன்மை வாய்ந்த அருள்மிகு அரப்பளீஸ்வரர் கோவிலும் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளை மனதில் வைத்து, பயணிகள் தங்குவதற்கு ஏற்ற வகையில் பயணியர் ஓய்விடங்கள் கட்டுவதற்கும், சாலை வசதிகளை மேம்படுத்துவதற்கும், அந்த அருவியில் குளிப்பதற்கான வசதிகளைச் செய்வதற்கும், அந்த ஆலயத்தை பழுதுபார்த்து பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்ற முறையில் அமைப்பதற்குமான பல திட்டங்களை அரசு பரிசீலித்து வருகிறது.

## சுசீந்திரம் கோயில்.

*வினா எண் 130—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுசீந்திரம் கோயில் நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



1980 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) இந்த ஆலயத்தின் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் தெரியவந்தன. அரசு சமீபத்தில் கன்னியாகுமரி தேவஸ்வம்களுக்கு ஒரு அறங்காவலர் குழுவை நியமித்திருக்கிறது. குறைகளை விரைவில் நிவர்த்தி செய்து, கோயிலை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, சுசீந்திரம் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்தி பல வருஷங்கள் ஆகின்றன. கோவில் குளம் 30 ஆண்டுகளுக்கு மேலாக தூர் எடுக்கப்படவில்லை. கோவில் விளக்குகள் போதுமான அளவுக்கு இல்லாமையால் இருட்டாக இருக்கிறது. புராதன சிற்பங்கள் பராமரிக்கப்படவில்லை. இதுபற்றி விசாரித்ததில், திருவிதாங்கூர் கொச்சியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த போது கோவில் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட 13½ இலட்சம் ரூபாய்தான் இன்றும் ஒதுக்கப்பட்டு வருகிறது என்று கூறப்பட்டது. இது எந்த அளவுக்குப் போதும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா? இந்தத் தொகையை 25 இலட்சமாக உயர்த்த ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் அறநிலையத் துறைக்கு அனுப்பப்பட்டு, பரிசீலிக்கப்படும். இந்த ரூ. 13½ இலட்சத்தை ரூ. 25 இலட்சமாக உயர்த்த முடியுமா என்பதைப்பற்றி அரசு இப்போது பதில் அளிக்க முடியாது ; பரிசீலித்துதான் பதில் சொல்ல முடியும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, தமிழகத்திலே மிகச் சிறந்த சிற்பங்கள் சுசீந்திரம் கோவிலில் இருக்கின்றன. நம்முடைய அரசு அந்தச் சிற்பங்களை தன்னுடைய விளம்பரங்களில் பயன்படுத்தவில்லை. அவைகளைப் பயன்படுத்தினால் ஏராளமான சுற்றுலா பயணிகள் அங்கே வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கான முயற்சிகளை அமைச்சரவர்கள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுசீந்திரம் கோவிலில் இருக்கிற அற்புதமான சிலைகள் மட்டுமல்ல ; அதைப் போல இன்னும் பல கோவில்களில் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் தாரமங்கலத்தில் கூட அற்புதமான சிலைகள் இருக்கின்றன. அவைகள் இதுவரை நாட்டுக்கு அறிமுகப்

படுத்தப்படாத சிலைகள். அதைப்போல பல்வேறு கோவில்களில் இருக்கின்ற சிற்பங்களை எல்லாம் இந்த நாட்டுக்கும் வெளி நாடுகளுக்கும் அறிமுகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்தச் சுசீந்திரம் கோவிலை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்தக் கோவிலுக்குப் பல சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். கோவில் உள்ளே போகவேண்டுமென்றால் வேஷ்டி மட்டும்தான் உடுத்திக்கொண்டு போக வேண்டும்; மற்ற உடுப்புகளைக் களைந்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைக் கவனித்து, நல்லமுறையில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஆலயத்திற்குள் செல்லுகிறபோது மேலே சட்டைகள் அணியாமல் செல்லவேண்டும் என்ற ஒரு முறை கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருச்செந்தூர் திருக்கோவிலிலும் இப்போது அமுலில் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு முறை முன்னால் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருந்தது. இப்போது அது மாற்றப்பட்டிருக்கிறது. அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருச்செந்தூரிலும் பக்தர்கள் போய்வர இடையூறு ஏற்படாமல், அவர்களுடைய மனது புண்படாமல் இருக்க, இந்த முறையை மாற்ற முயற்சிகளை மேற்கொள்ளும்போது அந்தச் சமயத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஒப்புக்கொண்டால் பொதுமக்களுக்கு வசதியாக இன்னும் பல ஏற்பாடுகளைச் செய்யலாம். அதோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல சுசீந்திரம் கோவிலுக்குள்ளே அந்த அற்புதமான சிற்பங்களை எல்லாம் காண வருகின்றவர்களுக்கு இப்படிப்பட்ட சில நடைமுறைகள் தடையாக இருப்பதால் அதைப் போக்குகின்ற வகையில் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று பெரியவர்கள் முடிவு எடுத்து அரசுக்கு அறிவிப்பார்களானால் அரசு அதை வரவேற்று பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக் கணக்கான பெரியவர்கள் அந்தக் கோயிலுக்கு வருவதால் அவர்கள் தங்குவதற்கு வசதி செய்யக் கூடிய முறையில் சத்திரங்கள் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சுசீந்தரத்தை ஒட்டித்தான் கன்னியாகுமரி இருக்கின்றது. ஆகவே கன்னியாகுமரியிலே அப்படிப்பட்ட தங்கும் இடங்களை அதிகப்படுத்துவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் சுசீந்தரத்திலே அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவரவர்களே, சுசீந்தரம் கோயிலின் பணியாளர்கள் வருமானத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அது சமபந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல ஆரம்பித்தால் இது தொடர்பான வினாக்களும் விடைகளும் வேறு திசைக்கு திரும்பி விடக்கூடும். ஆகவே தனிக் கேள்வி போட வேண்டும். சுசீந்தரத்திலே இருக்கின்ற கோயில் மாத்திரமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து கோயில்களின் அலுவலர்களுக்கும் பொருத்தமான கேள்வியாகும் இது. இது குறித்து நான் மேலவையிலே கூட பதிலளிக்கப்போகிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டே சுசீந்தரம் கோயிலின் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா? சுவாமிக்குரிய தங்க நகைகள் அணிவிக்கப்படாமல் இருக்கின்றன. அவை பழுதுபட்ட நிலையிலே இருக்கின்றன. ஆகவே அந்தத் தங்க நகைகளைப் பழுது பார்த்து சுவாமிக்கு அணிவித்து பக்தர்களின் குறைகள் போக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டே கும்பாபிஷேகத்தை நடத்த முடியுமா என்பது குறித்து அரசு உறுதியளிக்க இயலாது. திருப்பணிகள் எல்லாம் நடத்தி முடிக்கப்பட்ட பிறகுதான் கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும். திருப்பணிகள் துவக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஆபரணங்கள் பற்றிய புகார் பொது மக்கள் தந்திருக்கின்ற புகார்களிலேயும் இருக்கின்றது. அந்தப் புகார்கள் சம்பந்தமாக விரிவான அறிக்கையை அனுப்புமாறு செயல் அலுவலரை துணை ஆணையர் கேட்டுள்ளார். ஆகவே அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு தான் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 8

## கால்நடை மருத்துவர் பயிற்சிக்கான தேர்வு.

* வினா எண். 131—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979 ஆம் ஆண்டுக்கு கால்நடை மருத்துவர் பயிற்சிக்காக எத்தனை பேர் தேர்வு செய்யப்பட்டார்கள் ?

(ஆ) இதில் பிற்பட்டவர்கள், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) 170 பேர்.

(ஆ) பிற்பட்டவர்கள்—98
அரிசன வகுப்பை சேர்ந்தவர்கள்—20

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டுக்கு மொத்தமாக 170 பேர்தான் கால்நடை மருத்துவர்கள் பயிற்சிக்கு எடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே பிற்படுத்தப்பட்டவர்கள் 98 பேர் என்றும் அரிசன வகுப்பினைச் சேர்ந்தவர்கள் 20 பேர் என்றும் சொன்னார்கள். ஆனால் தற்போது மனிதர்களுக்கு அதிகமான நோய் வருவதைப் போல் கால்நடைகளுக்கு அதிகமான நோய்கள் வருகின்ற காரணத்தால் இவ்வாறு 170 பேர் ஒரு ஆண்டுக்கு நியமிக்கப்படுவது என்பது போதாது. இந்த எண்ணிக்கை மிகக் குறைவானது. மேலும் கிராமங்களில் படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாயப்பு கொடுக்கின்ற வகையிலே இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுது படித்து முடித்து வந்திருப்பவர்களுக்கே வேலை வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதை முதலில் கவனித்து விட்டு சரி பார்த்துக் கொண்டு. பிறகு பார்க்கலாம்.



1980 ஆகஸ்ட் 8]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 170 பேர்களுக்கு 18 சதவீதம் என்று சொன்னால், ஏறக்குறைய 32 பேர்கள் வருகிறது. ஆனால் இதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று 20 எண்ணிக்கை தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏன் அப்படி ? அவர்கள் மனு செய்யவில்லையா ? அல்லது மனு செய்தவர்களைத் தகுதியில்லை என்று தள்ளுபடி செய்து விட்டீர்களா ?

நகர்ப்புறங்களிலே இருக்கிற பிள்ளைகளுக்கு அதிகமான அளவு படிக்க வசதி வாய்ப்புக்கள் உண்டு. கிராமப்புறங்களிலே அது கிடையாது. அதனால் கிராமப் பிள்ளைகள் மார்க்குகள் குறைவாகத்தான் வாங்குவார்கள். ஆனால் விவசாய குடும்பத்தைச் சேர்ந்த அந்தப் பிள்ளைகளுக்கு மாட்டைப் பற்றி அதிகமாகத் தெரியும். ஆகவே, கிராமப் புறங்களில், மார்க்கின் அடிப்படையில் இடம் ஒதுக்காமல், அவர்களுக்கு இருக்கிற திறமையை, அதாவது மாட்டைப் பற்றி அதிகமாகத் தெரிந்தவர்கள் என்ற நிலைமையில் அவர்களுக்கு அதிகமாக இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ? குறிப்பிட்ட சதவீதம் அந்தந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தந்திருக்கிற விகிதத்தின் அடிப்படையில்தான் அதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டன. கிராமப்புறங்கள் என்ற முறையில் இட ஒதுக்கீடு செய்யப்பட வில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று அரசு விதித்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அரசு விதிமுறைகளை மாற்றி அமைத்தால், கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, எந்த அளவிற்கு ஒதுக்கப்பட்டதோ, அந்த அளவிற்குத் தந்திருப்பதாகச் சொன்னார்கள். 100 க்கு 18 பேர்கள் என்றால் 170க்கு 20 பேர்கள் என்பது எப்படிச் சரியாகும்? ஆகையினால் மீண்டும் மறு பரிசீலனை செய்து 170க்குத் தரவேண்டிய சதவீதத்தை— அதாவது 32 பேர்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வந்த விண்ணப்பங்களின் அடிப்படையில்தான் பரிசீலனை செய்து அந்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். வந்த விண்ணப்பங்கள் குறித்த மொத்த தகவலும் என்னிடத்தில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருப்பவர்களுக்கே வேலை கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வது எல்லாம் பெரும்பாலான கால்நடை மருத்துவமனைகளில் டாக்டர்களே இல்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக திருச்சியில் இருக்கிற ஒரு கால்நடை ஆஸ்பத்திரியில் கூட டாக்டர் இல்லை என்கிற நிலை இருக்கிறது. ஆகவே அத்தகைய இடங்களுக்கு டாக்டர்களை நியமிக்க வேண்டும். கால்நடைகளைப் பாதுகாத்தால்தான் நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே, இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, இருக்கும் காலி இடங்களைப் பூர்த்தி செய்து இன்னும் அதிகமான அளவில் இடங்களை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கால்நடைகளையும் பாதுகாக்க வேண்டும், படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் பாதுகாக்க வேண்டும். இவ்விரண்டிற்கும் சிக்கல் ஏற்படாத முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற போது, அதற்கான ஒதுக்கீடுகள் சரியாகவே செய்யப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். மொத்தமாக பேக்வார்டு கிளாஸ், ஷெட்யூல்ட் கிளாஸ், பார்வார்டு கிளாஸ் என்ற முறையில் எத்தனை மனுக்கள் வரப்பட்டன? அவைகளில் எத்தனை தள்ளப்பட்டன? அப்படி தள்ளப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, என்னிடத்தில் தகவல் இல்லை.





## போளூர் நகரில் முன்சீப் நீதிமன்றம்.

* வினா எண் 132—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் நகருக்கு நீதித்துறை தனி நபர் ஆய்வுக்குழு ஏற்படுத்தி நீதிமன்றம் ஏற்படுத்த ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) இக்குழு பரிந்துரைப்படி முன்சீப் கோர்ட் ஏற்படுத்த அரசு திட்டமிட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) குழுவின் பரிவுரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். நன்றி. அந்த நீதி மன்றத்தை நடப்பு ஆண்டிலேயே அமைப்பதற்கான உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதை இவ்வாண்டிலியே நடைமுறைப்படுத்த அரசு உத்தரவு இடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆய்வுக்குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டதாகச் சொன்னார்கள். அந்தக் குழு எந்த ஆண்டு பரிந்துரை செய்தது ? அதை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஏன் காலதாமதம் ஏற்பட்டது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டில் அதை செய்து முடித்து விடுகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். பிறகு இந்தக் கேள்வி எல்லாம் தேவையற்றது.

(பதில் இல்லை)

[1980 ஆகஸ்ட் 8

(முற்பகல் 9—20)

திரு. கே. ஆர். சுந்தரம் : இதுபோன்று குடியாத்தம் தாலுக்காவில் குடியாத்தத்தில் ஒரு நீதி மன்றம் ஏற்படுத்த ஆய்வு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. அந்த ஆய்வு முடிவுற்றதா ? அங்கே அந்த நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது பேரூர் நகரில் நீதிமன்றம் பற்றிய குறிப்புகள்தான் இருக்கின்றன. ஆகவே இதற்கு தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

## உசிலம்பட்டி கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்

வினா எண். 133—திரு. இரா. முத்தையா, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) உசிலம்பட்டியில் இயங்கி வந்த கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

(இ) மீண்டும் உசிலம்பட்டிக்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) உசிலம்பட்டி கூட்டுறவு துணைப்பதிவாளரின் அலுவலகம் இயங்கிய கட்டடம் மிகவும் பழுதடைந்து இடிந்து போகக் கூடிய நிலையில் இருந்ததாலும், வேறு மாற்றுக் கட்டடம் அங்கு கிடைக்காததாலும், அந்த அலுவலகம் திருமங்கலத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டது.

(இ) தகுதியுள்ள மாற்றுக் கட்டடம் கிடைக்கும்போது இது குறித்துக் கருதப்படும்.

திரு. இரா. முத்தையா : உசிலம்பட்டியிலிருந்து திருமங்கலத்திற்கு இந்த அலுவலகம் மாற்றப்பட்டது அது இயங்கி வந்த கட்டடம் பழுதடைந்திருப்பதால் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உசிலம்பட்டியில் வேறு ஒரு கட்டடம் பார்க்க



1980 ஆகஸ்ட் 8]

முயற்சி செய்தார்களா? அந்த அலுவலகத்தை உசிலம்பட்டியிலிருந்து திருமங்கலத்திற்கு மாற்ற அடிப்படைக் காரணம் அது அல்ல என்று நான் கருதுகிறேன். திருமங்கலத்தில் மதுரை மாநகராட்சியில் கொடுக்கப்படுகிற நகர ஈட்டுப்படி, வாடகைப்படி இவை கிடைக்கின்றன. ஆனால் உசிலம்பட்டியில் இவை கிடைப்பதில்லை. ஆகவே, திருமங்கலத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்ற ஐயம் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் அனுமானத்தால் திருமங்கலம் உறுப்பினரை கேள்வி கேட்க வைக்கிறீர்கள்.

(பதில் இல்லை)

திரு. இரா. முத்தையா : நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி இவை திருமங்கலத்தில் கிடைக்கின்றன. உசிலம்பட்டியில் கிடைப்பதில்லை, ஆகவே, இந்த அலுவலகத்தை அங்கே மாற்றிவிட்டார்கள் என்று நானும் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுமானத்தின் அடிப்படையில் கூறுவது போல் அத்தகைய காரணங்களின் அடிப்படையில் அது மாற்றப்படவில்லை. கட்டடம் மிகவும் பழுதடைந்து விட்ட காரணத்தால் மாற்றப்பட்டது. மாற்றுக் கட்டடத்திற்கு கூட்டுறவுத் துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும்கூட முயற்சிகள் மேற் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட மாற்றுக் கட்டடம் ஒன்று கிடைக்க அதிகாரிகளுக்கு உதவுவார்களானால் இந்த அலுவலகம் உசிலம்பட்டிக்கு மீண்டும் மாற்றப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : உசிலம்பட்டி தாலுகா, திருமங்கலம் தாலுகா, நிலக்கோட்டை தாலுகா போன்றவைகளுக்கு இந்த அலுவலகம் உசிலம்பட்டியில் இயங்கினால்தான் அந்தக் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் பொது மக்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன அவர்களுக்கு ஆதரவு சொற்பொழிவா ? கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : உசிலம்பட்டியில் இந்த அலுவலகம் இருந்தால்தான் பொது மக்களுக்குப் பயன்படும். திருமங்கலத்தில் இந்த அலுவலகத்தை வைத்தால் அதிகாரிகளுக்குப் பயன்படும். திருமங்கலத்தில் இருந்து அடிக்கடி டவுன் பஸ் மதுரைக்குப் போகிறது. அதிகாரிகள் காஷுவல் லீவ் போட்டுவிட்டு மாட்டினி

ஷோவிற்குப் போகின்ற காரணத்தால் அந்த அலுவலகத்தை உடனடியாக உசிலம்பட்டியில் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? நானே கட்டடத்திற்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு ஒரு கட்டடம் கூட்டுறவுத் துறைக்கு வாடகைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தால் கண்டிப்பாக அதை வரவேற்போம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த அலுவலகம் திருமங்கலத்திற்கு உசிலம்படடியிலிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. திருமங்கலத்தில்தான் அது இருக்க வேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முத்தையா அவர்களும் திரு. தாமரைக்கனி அவர்களும் உசிலம்பட்டியில் இருப்பது பொதுமக்களுக்கு எளிதாக இருக்கும் என்று கூறினார்கள். திருமங்கலம் பகுதியில் அந்த அலுவலகம் இயங்குவதால் திருமங்கலம் பகுதியிலுள்ள அதிகமான சங்கங்களுக்கு உதவியாக இருப்பதால் அங்கு அந்த அலுவலகம் மாற்றப்பட்டதா? திருமங்கலத்திலேயே அந்த அலுவலகத்தை வைத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதைப் போல் இந்த அலுவலகத்தைத் திருமங்கலத்திலேயே வைப்பதற்கு அரசாங்கத்திற்கு எந்தவித எண்ணமும் இல்லை. அப்படி அரசாங்கம் செய்யாது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதுபட்டிருந்ததால் அது மாற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கூட கட்டடம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். விரைவில் உசிலம்பட்டிக்கு அது மாற்றப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த உசிலம்பட்டி திருமங்கலம் தகராறைப் பார்க்காமல், நான் பார்ப்பது, கட்டிடங்கள் பழுதானது என்பதற்காக 40 மைல் தூரம் இருக்கக்கூடிய ஊருக்கு மாற்றுவது என்பது ஒரு தவறான முன் உதாரணமாக ஆகிவிடாதா ? ஆகவே, இதை எப்படி வேறு இடத்திற்கு மாற்ற அரசு அதிகாரிகள் ஒப்புக் கொண்டார்கள் ? அரசு இனிமேல் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் தவிர்க்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தோடு நானும் ஒன்றுகிறேன். இது தவிர்க்கப்பட்டிருக்கலாம். இன்னும்கூட சற்று அதிக முயற்சியை மேற்கொண்டிருக்கலாம். இதுபற்றி நான் விசாரிக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உசிலம்பட்டி உறுப்பினருக்கும், திருமங்கலம் உறுப்பினருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தச் சிக்கலைத் தவிர்க்க திருமங்கலத்திலே இருக்கக்கூடிய அந்த அலுவலகத்தை மதுரைக்கு மாற்றுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மதுரைக்கு மாற்றினால், உசிலம்பட்டி, அதற்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு கிட்டக்கூடிய பலன் கிட்டாமல் போய்விடும். எனவே அந்த எண்ணம் அரசுக்கு அறவே இல்லை.

## திருவில்லிப்புத்தூரில் பென்னிங்டன் கமிட்டிக்குச் சொந்தமான கட்டிடங்கள்.

*வினா எண் 134.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிப்புத்தூர் பென்னிங்டன் கமிட்டிக்குச் சொந்தமான கட்டிடங்களை நகராட்சிக்குக் கையகப்படுத்துவதற்கு உள்ள செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசு விரைவில் முடிவெடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பென்னிங்டன் கமிட்டிக்குச் சொந்தமான சொத்துக்களை, கட்டிடங்களை நகராட்சிக்காக அரசு எடுத்துக்கொண்டதால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பயன்தருவதால், இந்த முயற்சியில் ஈடுபட்ட நமது முன்னாள் மாண்புமிகு அமைச்சர் திரு. கா. காளிமுத்து

[1980 ஆகஸ்ட் 8

அவர்களுக்கும் இந்நாள் மாண்புமிகு அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, இதிலே வருஷத்திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது? இது எப்போது முதல் செயலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொன்னதற்காக நானும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பென்னிங்டன் கமிட்டிக்குச் சொந்தமான அந்த அங்காடியின் மூலம், 160 கடைகள் அங்கே கட்டப்பட்டு, அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,30,428 கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதேபோல், திருநெல்வேலி நகராட்சியில் உள்ள இந்த பென்னிங்டன் கமிட்டி நடத்திவரும் அந்த அங்காடிகளையும் இன்று அரசு கையகப்படுத்தி, அந்த நகராட்சியிடம் ஒப்படைத்துள்ளது. அதேபோல், ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்தக் கமிட்டிக்குச் சொந்தமான அங்காடிகளைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளின் மூலமாக வருமானத்தை அந்த நகராட்சிகளுக்கு அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அப்படி வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், இவைகளைச் சீக்கிரம் வெகு வேகமாக செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பென்னிங்டன் கமிட்டிக்குத் தலைவராக கலெக்டர் இருக்கிறார். இது அரசாங்கத்தின் சொத்து. அரசாங்கத்தின் சொத்தை எடுப்பதற்கு அரசாங்கம் ஏன் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்? ஹைதராபாத் நைஜாம் அனுபவித்ததை எல்லாம், இந்தக் கமிட்டியின் தலைவராக உள்ள கலெக்டர், தவிர மற்றும் அரசாங்கத்திலே உள்ளவர்கள் அனுபவித்து வருகிறார்கள். எனவே, இதற்கு நஷ்ட ஈடு கொடுக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நைஜாம் மன்னர் எப்படி இருந்தார் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் படித்தவரையில், நைஜாம் மன்னரின் அந்தப்புரங்கள் அதிக அழகாக இருப்பதாகப் படித்திருக்கிறேன்.

The Harem contains all in Greeks to Chapman Chinese

என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. அதைப்போல் இருந்தார்கள். ஆனால், இந்த அங்காடிகளைப் பொறுத்தவரையில், தனிப்பட்டவரின் சொத்துக்கள் என்றுதான் குறிப்பு



1980 ஆகஸ்ட் 8]

கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதை கையகப்படுத்தும்போது, நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் அதனை எடுத்து, உடனடியாக வேகமாக செயல்படுவோம்.

## குளித்தலைப் பேருந்து நிலையம்.

*வினா எண் 135—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளித்தலை பேரூராட்சியில் தற்பொழுதுள்ள பேருந்து நிலையம் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

(ஆ) இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடம் யாருக்கு சொந்தம்?

(இ) பேரூராட்சியிலிருந்து இந்த இடத்திற்கு ஆரம்பத்தில் கொடுத்த வாடகை எவ்வளவு?

(ஈ) தற்சமயம் கொடுக்கப்படும் வாடகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) 1963 ஆம் ஆண்டு (1–4–1963 அன்று) அமைக்கப்பட்டது.

(ஆ) 0.15 சென்ட் பேரூராட்சிக்கும், மீதமுள்ள 1.17 ஏக்கர் விஸ்தீரணம் அருள்மிகு பேராள குந்தாளம்மன் தேவஸ்தானத்திற்கும் சொந்தமானது.

(இ) ரூ. 100.

(ஈ) ரூ. 350.

*வினா எண் 136.—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளித்தலை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் தினசரி வந்து செல்லும் பேருந்துகளின் உத்தேச எண்ணிக்கை என்ன?

(ஆ) இந்த பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதிகள் இல்லை என்பது உண்மையா ?

(இ) இந்த அடிப்படையான அவசியமான வசதிகளையும் பயணிகளுக்கு இதர வசதிகளையும் செய்வதற்கான திட்டம் ஏதுவும் உண்டா ?

(ஈ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) 60 பேருந்துகள்.

(ஆ) சிறுநீர் கழிப்பிடம் மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) உண்டு.

(ஈ) பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு உள்ள இடம் அருள்மிகு பேராள குந்தாளம்மன் ஆலயத்தைச் சேர்ந்தது. இந்த இடத்தை நீண்ட கால குத்தகைக்கு விடக் கோரப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரைக் கலந்தாலோசித்து இடம் பேரூராட்சி பெற்ற பின், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-30]

திரு. இரா. கருப்பையா : இந்த இடம் அருள்மிகு பேராள குந்தாள அம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த இடத்திலே அடிப்படையான வசதிகளைச் செய்ய திட்டம் உண்டு என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திலே என்ன வகைப்படுத்தப்பட்டிருக்கிறது ? இந்த இடம் பேரூராட்சிக்குச் சொந்தம் இல்லையென்ற காரணத்தால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, இந்த இடத்தை பேரூராட்சிக்கு நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிட வசதியைச் செய்து கொடுக்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதிகப் பேருந்துகள் வந்து நிற்க வசதிகள் செய்யலாம் என்ற





திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தைப் பொறுத்த வரை 15 செண்ட் நிலந்தான் நகராட்சிக்குச் சொந்தமானது. ஒரு ஏக்கர் 17 செண்ட் நிலம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாகும். குத்தகைக்கு அந்த இடத்தை எடுத்து கடந்த 1963-ல் இருந்து பேரூராட்சி பஸ் நிலையத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. 1963-ல் இதற்கு குத்தகைத் தொகை 100 ரூபாயாக இருந்தது 1968-ல் ரூ. 150ஆக உயர்ந்தது. 1969–70-ல் 200 ரூபாய் அளவுக்கு உயர்ந்தது. 1–4–1970 முதல் 350 ரூபாய் அளவுக்கு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அறநிலையத் துறை 99 ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் முதல் ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய் வரை குத்தகைத்தொகை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் 99 ஆண்டு காலத்திற்குக் கொடுப்பார்கள் என்பதும் நிச்சயம் இல்லாமல் இருக்கிறது. ஆனாலும் பேரூராட்சி பஸ் நிலையத்தை நல்ல முறையில் நடத்த அறநிலையத் துறையுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : இந்த இடத்திற்கு ஆரம்பத்தில் 100 ரூபாய் வாடகையாக இருந்தது தற்போது 350 ரூபாய் அளவுக்கு மூன்றரை மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென்றால் அறநிலையத்துறை 1,250 ரூபாய் வாடகை கோருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இடம் சம்பந்தமாக சப்-கலெக்டர் அவர்கள் வாடகையை நிர்ணயித்து அந்த அடிப்படையில் கேட்கலாம் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார்களா? அந்த அடிப்படையில் உடனடியாக அந்த இடத்தை நீண்டகாலக் குத்தகைக்கு எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சப் கலெக்டர் கொடுத்த குறிப்புக்கள் என்னிடத்தில் இல்லை. ஆனாலும் இந்த இடத்தை அதிகமான வருஷங்களுக்கு 99 ஆண்டுகளுக்குப் பெறக்கூடிய சூழ்நிலையில் குறிப்புக்கள் இருக்கின்றன. அதை விரைவுபடுத்தி செயல்படுத்த இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

திரு. மு. ஜான் வின்செண்ட் : சில பேரூராட்சி மன்றங்களில் சம்பந்தப்பட்ட பேருந்துகள் செப்பனிடப்பட முடியாத வகையில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பேருந்துகளைப் பற்றியது அல்ல.

[1980 ஆகஸ்ட் 8

திரு. சோ. அழகர்சாமி : இந்த குளித்தலை பேருந்து நிலையம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைச் சொன்னார்கள். 13 சென்ட் இடம்தான் பேரூராட்சிக்குச் சொந்தமானது ஒரு ஏக்கர் 17 சென்ட் அறநிலையத்திற்குச் சொந்தமானது என்று சொன்னார்கள். அறநிலையத்துறைக்குச் சொந்தமான நிலம் என்றால் பொதுமக்கள் நலனுக்காக உபயோகப்படுத்தக்கூடிய நிலந்தான். இப்படி குத்தகையாக 1963 லிருந்து 350, 400 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருப்பதைவிட அந்த இடத்தைக் கிரையத்திற்கு வாங்கி பேருந்து நிலையத்தில் கழிப்பிடங்கள், பிரயாணிகள் தங்கி இருக்க ஷெட்கள் எல்லாம் கட்ட முடியும். அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். இதிலே நேரடியாகப் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு யோசனை கூறியிருக்கிறார்கள் பேரூராட்சிக்கு வருமானம் அதிகம் இல்லையென்ற காரணத்தால் அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு நஷ்டஈடு கொடுக்க வழியில்லை. ஆகவே அறநிலையத்துறை அந்த நிலத்தை இனாமாகக் கொடுக்கலாம். என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை கூறியிருந்தால் வரவேற்றிருப்பேன். அந்த நிலத்தை அறநிலையத்துறையிலிருந்து பேரூராட்சிக்குப் பெறுவதற்குண்டான நிலைமைகளை சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் நிலத்தை கையகப்படுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பேரூராட்சிகளுக்கு அரசே நிதி உதவிசெய்து அதை வாங்குவதற்கான உதவியைச் செய்யுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து அரசு உதவி செய்யும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, அந்த பேருந்து நிலையத்தைப் புதுப்பிப்பதற்கான இடம் அறநிலையத்துக்குச் சொந்தமாக இருப்பதால் அறநிலையத்துறை அதை நன்கொடையாகக் கொடுத்தாலும், கொடுக்கவில்லையென்றாலும் அரசே அதற்கான நட்டஈட்டைக் கொடுத்து அந்தப் பேருந்து நிலையத்தை புதுப்பிக்குமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியைப் பொறுத்தவரையில் அந்த பேருந்து நிலையம் அவசியமானது. ஆகவே அரசு சீக்கிரமான நடவடிக்கை



1980 ஆகஸ்ட் 8]

எடுத்து அறநிலையத்துறை ஆணையாளருடன் பேச்சு வார்த்தை நடத்தி உடனடியாக முடிப்பதற்கான செயற் குறிப்புக்கள் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுத்து எவ்வளவு சீராக செம்மையாக செய்ய முடியுமோ அதைச் செய்யும்.

## சிறுவாணி குடிநீர்த்திட்டத்தின் கீழ் மேல்நிலைத் தொட்டிகள்

*வினா எண். 137— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரத்தில் சிறுவாணி குடிநீர்த்திட்ட விநியோகத்தை சீராக நடத்த நகரத்தில் பெரிய மேல் நிலைத் தொட்டிகளைக் கட்டும் வேலைகள் பூர்த்தியாகிவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அத்தொட்டிகளிலிருந்து நீர் விநியோகம் எப்பொழுதிலிருந்து ஆரம்பிக்கப்படும்?

(இ) அத்திட்டத்திற்கான மொத்த செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 9 மேல்நிலைத் தொட்டிகளில், 5 தொட்டிகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 4 தொட்டிகளில் வேலை டிசம்பர் 1980-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) டிசம்பர் 1980-ல் ஆரம்பிக்கப்படும்.

(இ) ரூ. 1616 இலட்சங்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த மேல்நிலைத் தொட்டிகள் கோவை மாநகரத்தில் குடிநீர் பல இடங்களில் வேகமாகக் கிடைக்கும்படியாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்படுகின்ற திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன. கட்டி முடிக்கப்படக்கூடிய 5 பெரிய தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி உடனடியாக விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி விநியோகம் செய்யும் பொழுது, கோவை மாநகராட்சியோடு சிங்காநல்லூர் முனிசிபாலிட்டியும் சேர்ந்துவிட்டதால் அங்கேயும் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே என்னிடத்தில் இருக்கின்ற குறிப்புப்படி டிசம்பர் 1980-ல் தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்று தரப்பட்டிருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 8

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சிறுவாணியிலே 16 கோடி ரூபாய் செலவில் தண்ணீர் எடுக்கிற திட்டம் போடப்பட்டு அந்த அடிப்படையிலே இந்த மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்படுகின்றன. இந்த பெரிய தொட்டிகளைக் கட்டி முடிக்கும் வேலை முடிந்துவிட்டால் அவற்றை நிரப்புவதற்குத் தேவையான தண்ணீர் முழுவதும் கிடைக்கக்கூடிய நிலையில் அங்கேயும் வேலை முடிந்து விட்டதா? இல்லையென்றால் அது எப்போது முடியும்? இந்தத் தொட்டி வேலைகள் முடிந்து விட்டாலும் அவற்றை நிரப்புவதற்கு தண்ணீர் வராமல் இருக்கிற நிலைமை ஏற்படக் கூடாது. ஆகவே அந்த வேலை எந்த நிலையில் உள்ளது. உடனே தொட்டிகளை நிரப்பி தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டில் தண்ணீர் கொடுக்கப்படும் என்று தான் இதிலே இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். ஒரு அமைச்சர் கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்திலே அதன் கீழ் வருகின்ற சப்ளிமெண்டரி கேள்விகள், உப கேள்விகள், துணைக் கேள்விகள் என்ற முறையிலே 1, 2, 3 கேள்விகளுக்கும் பதில் சொல்லக்கூடிய தயாரிப்புடன் தான் அவைக்கு வரவேண்டும் ஆனால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேல்நிலைத் தொட்டிகளைப்பற்றித்தான் கேள்வி இருக்கிறது. நீங்கள் அந்த அணைக் கட்டிற்குப் போய்விட்டீர்கள். எப்படி பதில் கிடைக்கும்?

திரு கு. ரமணி: அணையிலிருந்து தொட்டிகளுக்குத் தண்ணீர் கொடுக்காவிட்டால் எப்படி அதைப் பயன்படுத்த முடியும். அதைப்பற்றிக்கூட சமாச்சாரங்கள் இல்லையென்றால் என்ன செய்ய முடியும். அந்தத் துறையிலிருந்து இப்படிப்பட்ட சமாச்சாரங்கள் கொடுக்கப்படவில்லையா?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக— இடையிலே இல்லாமல் பிறகு ஒரு அப்பீல் பண்ண வேண்டுமென்று தான் விரும்பியிருந்தேன்—ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு கேள்விக்கு connected questions என்ன என்ன கேட்கலாம் என்பதைப் பொறுத்து அதற்காக டிபார்ட்மெண்டிலிருந்து connected matters பற்றியும் brief பண்ண வேண்டும். நான் பல நாட்கள் பார்த்திருக்கிறேன். brief இல்லை. என்று தெரிகிறது. அவை முன்னவர் ஒரு நாள் பதில் சொல்லுகிறபோது கூட இத்தனை கேஸ்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன, இத்தனை பேர்கள்



1980 ஆகஸ்ட் 8]

அரஸ்ட் செய்யப்பட்டார்கள் என்று சொல்ல போது இங்கேயிருந்து அந்த சைடிலிருந்து எத்தனைபேர்கள், இந்த சைடிலிருந்து எத்தனை பேர்கள் என்று கேள்வி அப்பொழுது கேட்கப்பட்டது.

[முற்பகல் 9–40]

அதற்கு என்னிடம் விவரம் இல்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடு) இப்பொழுது இங்கு இருக்கின்ற முன்னவர் அல்ல; இப்பொழுது மொரீஷியசுக்கு சென்றிருக்கிறாரே அவர். இப்படி பல அமைச்சர்களிடம் connected matters வராமல் இருப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே சர்க்கார் தரப்பிலே எல்லா connected matters இருக்கும்படியாக பார்த்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கேள்வி வருகிறபொழுதும் அதற்கான பதிலோடு, எந்தெந்தத் துணை வினாக்கள் கேட்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அந்தந்த துணை வினாக்களுக்கான குறிப்புகளையும் சேர்த்துத்தான் துறையால் தரப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் அதையும் மீறுகின்ற அளவிற்கு திறமையாளர்களாகவும், புத்திசாலிகளாகவும் சில நேரங்களில் இருந்து விடுகிறார்கள் என்பதுதானே தவிர, துறை தயாரித்து அனுப்புகின்ற குறிப்புகள் எந்தவிதத்திலும் குறைந்துவிடவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கெட்டிக்காரத்தனமாகத் திசை திருப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திறமையாளர்கள், புத்திசாலிகள் என்று சொன்னதற்குப் பிறகு என்ன ஆட்சேபணை! எல்லோரையும் ஆற்றல் மிக்கவர்கள் என்று ஒத்துக்கொண்டது எவ்வளவு பெரிய பெருமை நமக்கு.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, சில நேரங்களில் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தைக் குறிப்பிடுகிறார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவை நகரத்தில் சிறுவாணி குடிநீர் திட்ட வினியோகத்தைச் சீராக நடத்த 9 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன; அதில் 5 தொட்டிகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டால் கோவை நகராட்சியில் எந்தெந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் சப்ளை செய்யப்படும் ? கோவை நகராட்சிக்கு உட்பட்டிருக்கும் அனைத்து இடங்களுக்கும் இது அமல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் டிசம்பர் 1980-க்குள் தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். உள்ளூர்க்காரர்களாகிய எங்களுக்கு அப்படி முடியாது என்பது தெரியும். இருந்தாலும் எந்தெந்த ஊர்களுக்குக் கொடுக்கப்படும் என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. 1980 ஆகிய இந்த ஆண்டிலே இன்னும் தொட்டிகள் கட்டி முடிக்கப்படவில்லை. எனவே அமைச்சரவர்கள் விரைவில் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மேற்கொள்ளப்படும்.

## பெரணமல்லூர் கிராம குடிநீர் திட்டம்.

*வினா எண். 138—திரு. பி. எம். வெங்கடேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒருங்கிணைந்த கிராம குடிநீர்த் திட்டத்தின்கீழ், பெரணமல்லூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?





(ஆ) அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : மாமன்றத் தலைவரவர்களே, பெரணமல்லூர் நகரமும், பெரணமல்லூர் நகரத்திற்கு அருகிலுள்ள கிராமங்களும் குடிநீர் வசதி இல்லாமல் இருப்பதால், பெரணமல்லூருக்கு அருகிலுள்ள அணைக்கட்டு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வரவும், பெரணமல்லூர் நகரத்தில் ஐந்து இலட்சம் காலன் பிடிக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சி சுமார் 4,250 மக்கள் தொகை கொண்டதாகும். இது நல்ல நீர்நிலைகள் உள்ள கிராமம் என்ற தகவல் என்னிடத்தில் இருக்கிறது.

## குடகனாற்றில் நீர்த்தேக்கங்கள்.

*வினா எண். 139—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தாலுகாவில் லெட்சுமணம்பட்டி, கருக்காம்பட்டி ஆகிய இடங்களில் குடகனாற்றின் இடையே உள்ள நீர்த்தேக்கங்களின் சுவர்களை உயர்த்தி பாசன வசதி அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, லெட்சுமணம்பட்டி, கருக்கம்பட்டி ஆகிய இந்த இரண்டு இடங்களிலும் உள்ள நீர்த்தேக்கங்களில், இரண்டு நீர்த் தேக்கங்களிலிருந்து செல்லும் வாய்க்கால்கள் மூன்று ஊராட்சிப் பகுதிகளைக் கடந்து சென்றாலும் அங்கு பயன்படும் நீர் மிகவும் குறைவாக-100 ஏக்கருக்கும் குறைவாகத்தான் பயன்படும் நிலைமை இருக்கிறது. அதிலும்,

[1980 ஆகஸ்ட் 8

அந்த நீர்த்தேக்கங்களில் சுவர்கள் உயர்த்தப்படாமல் இருப்பதால் மழைக்காலங்களில் மட்டும்தான் பயன்படுகிறது. இரண்டு நீர்த்தேக்கங்களின் சுவர்களையும் குறைந்தபட்சம் ஐந்து அடியாவது உயர்த்துவதற்கு அரசு தீவிரமாகச் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தற்போது இருக்கும் உயரத்தை ஓரளவுக்கு உயரமாக அந்த அணையைக் கட்டிப் பார்க்கலாம் என்பது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் ஐந்து அடி உயர்த்த வேண்டுமென்று சொன்னால் குடகனாறு அணை எந்த நோக்கத்திற்காகக் கட்டப்பட்டதோ அந்த நோக்கமே நிறைவேறாமல் போய் விடும். எனவே ஐந்து அடி என்ற உத்தரவாதத் தக் கொடுக்க முடியாது. கூடுமான வரையில் அதிகப்படியான ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்க முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977-ல் ஏற்பட்ட புயலின் காரணமாக இரண்டு நீர்த்தேக்கங்களிலும் (ருந்து) வாய்க்கால் களில் மண் ஏற்பட்டிருக்கிறது. அந்த மண் மழைக்காலத்திற்கு முன்னால் அகற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, அந்த நீர்த்தேக்கங்களின் உயரத்தை அதிகரிக்க வேண்டுமென்ற கருத்துரு செயல்படும்போது இரண்டையும் இணைத்தே செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தக் குடகனாறு ஆற்றிலே இருக்கக்கூடிய பெரிய அணை 1977-லே மிகப் பெரிய அளவுக்கு உடைபட்டது—இன்று பயனில்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த நீர்த் தேக்கத்தை உடனடியாகக் கட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

திரு வி. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களை, அந்த உடைந்த அணையைப் புதுப்பிக்கும் பணிகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இன்னும் அது குறித்து அரசு முடிவு செய்யவில்லை.

## இடைப்பாடி பெரிய ஏரிக்கு மேட்டூர் வாய்க்காலிலிருந்து நீர் விடும் திட்டம்.

*வினா எண். 140— திரு. இ. கணேசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகர எல்லைக்கு உட்பட்ட இடைப்பாடி பெரிய ஏரிக்கு மிக அருகாமையில் (சுமார் இரண்டு கி. மீ.) செல்லும் மேட்டூர் கிழக்கு வாய்க்காலிலிருந்து நீர் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் இது வரை பரிசீலிக்கப்படவில்லை. ஆயினும், இத்திட்டத்தின் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு, தல அதிகாரிகளுக்கு, தலைமைப் பொறியாளர் அறிவுரை வழங்கியுள்ளார்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி நகர எல்லையில் சுமார் 344/1 என்ற இடத்திலிருந்து பெரிய ஏரி 295.5 ஏக்கர் பரப்புள்ள ஏரியாகும். அந்த ஏரிக்கு மேற்கு, கிழக்குக் கால்வாயிலிருந்து நீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றினால், 510 ஏக்கர் நிலம் நேரடியாகப் பாசன வசதி பெறும். இத்திட்டம், 3,000 ஏக்கர் கிணற்றுப் பாசன நீர் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பயன் அளிக்கும் என்பதால், அந்நிலங்கள் பொன் விளையும் பூமியாக ஆகும். அதோடு, மீன் வளமும் பெருகும், அதன் மூலம் மீனவர் குடும்பங்கள் நல்வாழ்வு பெற முடியும். ஆகவே, இத்திட்டத்தை அரசு செயல் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இத்திட்டத்தை அரசு ஆய்வுக்கோ, அல்லது பரிசீலனைக்கோ எடுத்துக் கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்திட்டத்தினுடைய தன்மைகளைப் பற்றி அதிகமாக எடுத்துரைத்ததற்குப் பின்பு, அதை ஆய்வு செய்ய வேண்டுமென்று இப்பொழுது அரசு உத்தேசித்திருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 8

## வடாற்காடு மாவட்டத்தில் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள்.

*வினா எண். 141—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) வடஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை, போளூர், செங்கம், வட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய பிரதேச மாக அறிவிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, 1979-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி முதல் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள போளூர், செங்கம் ஆகிய வட்டங்கள் மாநில அரசாலே தொழில் துறையால் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. திருவண்ணா மலை வட்டத்தைப் பொறுத்த வரை தற்பொழுது பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, போளூர், செங்கம் ஆகிய இரண்டு வட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் சொன்னார்கள். மாநில அரசாங்கம் அறிவித்ததற்குப் பிறகு, அங்கே தொழில் துவங்குவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அல்லது, அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், பின்தங்கிய வட்டங்களாக அறிவித்ததற்குப் பிறகு, அவ்வட்டங்களில் தொழில் துவங்கி னால் என்ன, என்ன சௌகரியங்கள் கிடைக்கும் என்று அந்த வட்டத்திலே உள்ள வியாபார மக்களை அழைத்துப் பேசினார் களா ? அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் 24 வட்டங்களில் தொழில்கள் துவங்குவதற்கு, தொழில் மூலதனத்தில் 15 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அப்படி அறிவிக்கப்பட்டது, தொழில் முனைவோருக்கு உதவுவதற்காகத்தானே தவிர, அரசின் சார்பில் தொழில் துவங்குவதற்காகப் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிப்பதில்லை. ஆக, தனியார்கள் தொழில் துவங்க, மூலதனத்தில் 15 சதவீதம் மானியம் அதிகபட்சம்



1980 ஆகஸ்ட் 8]

ரூ. 3 இலட்சம் வரைக்கும் தமிழக அரசால் உதவி செய்யப் படுகிறது. இது ஏற்கனவே பத்திரிக்கையிலே செய்தியாக வந் திருக்கிறது. உதவி கேட்கும் போது, அவர்களுக்கு உதவி மானியம் கொடுக்கப்படுகிறது, ஏற்கனவே கொடுக்கப்பட்டும் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவண்ணாமலை வட் டத்தை தற்போது பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கான திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் சொல்லி விட்டார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : அப்படி சொல்லவில்லை. சலுகை ஏதும் அறிவிக்கவில்லையென்ற பொருளில் சொன்னேன். திருவண்ணாமலையிலே கூட கட்டிடங்கள் கட்டப்பட்டு, தொழில்கள் துவங்கப்படாமல் இருக்கின்றன. அந்த வட்டத்தையே தொழிலிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலை வர் அவர்களே, ஏற்கனவே மைய அரசு 33 வட்டங்களைத் தொழில் துறையிலே பின் தங்கிய வட்டங்களாக அறிவித் திருக்கிறது. மாநில அரசு 24 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து அறிவித்திருக்கிறது. தமிழ் நாடு அரசு மேலும் பல வட்டங் களை தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி அறிவிப்பார்களா னால், அதற்குப் பின்னாலே, இன்னும் சில வட்டங்களை மாநில அரசு அறிவிக்கும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை பரிசிலிக்கப்படும்.

[முற்பகல் 9-50.]

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையைத் தவிர அனைத்துப் பகுதிகளும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி யாக இருக்கின்றன. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தின் ஓரப் பகுதியான திருப்பத்தூர் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் ஏற்கனவே மைய அரசு அறிவித்த 33 வட்டங்களிலே ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தகைய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும், மக்கள் தெரிந்து கொள்ளா விட்டாலும் உறுப்பினர்கள் தெரிந்துகொண்டால் நல்லது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த இரண்டு தாலுக்காக்களிலும் 5 பேர்களுக்கு மேல் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லை. மேலும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அந்தப் பகுதியிலே கருத்தரங்குகள் நடத்தி இன்னின்ன தொழில்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கின்ற வகையில், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு முன் வருமா? மேலும் 15 சதவீதம் சப்சிடி கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. எந்தெந்த நிலையில், எப்படி எப்படி மானியம் தருகிறோம் என்பதையும் விளக்குவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, தொழிலைத் துவங்குவதானாலும், அல்லது தொழிலை விரிவு படுத்த வேண்டும் என்றாலும், மூலதனத்தில், 15 சதவீதம் அரசு மானியமாக கொடுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மற்ற யோசனைகளை அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் முழுவதும் பின்தங்கிய மாவட்டமாகும். அதில் குறிப்பாக குடியாத்தம் தாலுகா தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால் அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, தற்போது அது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரிலே ஏற்கெனவே "சிட்கோ" என்னும் ஒரு தொழில் பேட்டை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இடத்தைக் கூட பார்த்துச் சென்றார்கள். அந்தத் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதையும், அது ஆரம்பிக்கப்படுமா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வடார்க்காடு மாவட்டத்திலே எத்தனை இடங்களை பின்தங்கிய பிரதேசம் என்று அறிவித்தது, மாநில அரசு எத்தனை இடங்களை அறிவித்திருக்கிறது. இதிலே செய்யார் வட்டத்தை வந்தவாசி, ஆரணி, செய்யாரை உள்ளடக்கிய—பின் தங்கிய பிரதேசம் என்று அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மத்திய அரசு, வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வாணியம்பாடி, வேலூர், வாலாஜாப்பேட்டை ஆகிய இடங்களை பின்தங்கிய பகுதியாக அறிவித்திருக்கிறது. மாநில அரசு அறிவித்திருக்கிற 24 இடங்களில், வடார்க்காடு மாவட்டத்தில் போளூர், செங்கம், வந்தவாசி, செய்யார் ஆகிய இடங்கள் அடங்கும்.

## கடையநல்லூர் கைத்தறி நெசவாளர்களுக்கான கூலி.

*வினா எண். 142— திரு. ஏ. காகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி—கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவில்லிப்புத்தூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கு கொடுக்கப்படும் கூலியை விட கடையநல்லூரில் இயங்கும் 123 மதுரை கூட்டுறவு கைத்தறி வளர்ச்சித் திட்டம் லிட்., நெசவாளர் சங்கத்தின் நெசவாளர்களுக்கு கூலி குறைவாக கொடுக்கப்படுவதை அரசு அறியுமா ?

கைத்தறி நெசவாளர் சங்கத்தில் இந்த ரகங்களுக்கு லுங்கி ஒன்றிற்கு முறையே ரூபாய் 6·25, 5·60, 3·40 என்று வழங்கப் படுகின்றது. ஆகையால் கடையநல்லூர் கிளையில் மேற்படி ரகங் களுக்கு லுங்கி ஒன்றுற்கு முறையே ரூபாய் 0·75, 0·80, 0·35 என்று வித்தியாசம் இருக்கிறது.

(ஆ) திருவில்லிபுத்தூர் சங்கத்தில் தயாரிக்கும் லுங்கி ரகங் கள் சிறு கட்டத்தை சார்ந்தவை. ஆனால் கடையநல்லூரில் பெரும் கட்ட ரக லுங்கிகள் தயாரிக்கப்படுகின்றன. சிறு கட்டங்கள் உள்ள ரகங்கள் உற்பத்தி செய்வதில் வேலைப்பாடு அதிகம் உள்ளதால், அந்த ரகங்களுக்கு சற்று அதிக கூலி வழங்கப்படுகின்றது. தவிர, கூட்டுறவு சங்கங்களுக்குள்ளேயே தமிழ்நாட்டில் ஒரே ரகத்திற்கு இடத்திற்கு இடம் உள்ளூர் நிலவரத்தைப் பொறுத்து கூலி வித்தியாசமாக கொடுக்கப்பட்டு உள்ளது. இது தவிர்க்க முடியாத உண்மையாகும். தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு சங்கங்களில் ஒரே ரகத்திற்கு ஒரே கூலி நிர்ணயம் செய்வது இயலாத காரியம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறியைப் பொறுத்தவரையில், திருவில்லி புத்தூர் கைத்தறி நெசவாளர் சங்கத் தொழிலாளர் களுக்கும் கடையநல்லூர் கைத்தறி நேசவாளர் சங்கத்தின் தொழிலாளர்களுக்கும் இடையே கூலி கொடுப்பதில் வித்தியாசம் இருப்பதால், கடையநல்லூர் தொழிலாளர்கள் கூலி உயர்வுக்கு போராடுகின்ற நிலை ஏற்படும் சூழ்நிலை இருப்பதால், அதைத் தவிர்க்க அரசு ஆவண செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கூலி நிர்ணயிப்பதில் ஏற்படும் வித்தியாசம் தவிர்க்க முடியாத ஒன்று ரகத்திற்குத் தக்கவாறும், கிராமம், நகரம் என்கிற வேறுபாட்டின் அடிப்படையிலும், அந்தக் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. இதில் போராடுவதற்கு எந்த ஒரு வழியும் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் துணி உற்பத்தியின் அடக்க விலை, தனியார் உற்பத்தி செய்யும் துணி உற்பத்தியின் அடக்க விலையைவிட அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், கைத்தறியின் துணி தரமாக இருக்கிறது. உபயோகிக்கும் சாயம் தரமாக இருக்கிறது. ஆகவே, பண்டிகை காலங்களில் தரப்படும் சிறப்புத்தள்ளுபடியை, எல்லாக் காலங்களிலும் தருவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?





மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் கொடுக்கப்படும் கூலியை விட, கூட்டுறவுச் சங்கங்களில் கூலி அதிகமாகக் கொடுக்கப் படுகின்றது. எல்லாக் காலங்களிலும் தள்ளுபடி கொடுக்க அரசு தயாராக இல்லை. விசேஷ காலங்களில் மட்டும் தான் சிறப்புத் தள்ளுபடி கொடுக்க முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லி புத்தூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தயாரிக்கப் படும் கைலிகள் அங்கேயிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அளவிற்கு இருக்கின்றது. அங்கேயுள்ள தொழிலாளர்கள் மூலதனம் போட்டு இருக்கிறார்கள். ஆனால், கடையநல்லூரில் தயாரிக்கப்படும் கைலிகள் திரு. சாகுல்ஹமீது போன்றவர்கள் கட்டும் தரத்திற்கு இருக்கிறது. அங்கேயுள்ள தொழிலாளர்களும் மூலதனம் போடவில்லை. இருப்பினும், மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் அனுமதித்துள்ள அளவிற்கு திருவில்லிபுத்தூரில் கூலி கொடுக்கப்படவில்லை. வேறு உதவி யும் செய்யப்படவில்லை. அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூரில் உற்பத்தி செய்யப்படும் கைலிக்கும் திருவில்லிப்புத்தூரில் உற்பத்தி செய்யப்படும் கைலிக்கும் பாகு பாடு இருப்பதாக, மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அதுவும், திருவில்லிபுத்தூரில் உற்பத்தி செய்யப்படுவதுதான் வெளிநாடுகளுக்கு அனுப்பும் தரம் வாய்ந்ததாக உள்ளதாகவும் கடையநல்லூரில் இருப்பது சாகுல் ஹமீது போன்றவர்கள் தான் உபயோகிக்கலாம் என்ற வகையிலும், தாழ்வான கருத்தோடு கூறினார்கள். இப்படிச் சொல்வது அந்த நெசவுத் தொழிலாளர் களை இழிவு படுத்துவது போலாகும்.

[முற்பகல் 10-00]

கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பாகுபாடு வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரவீந்திர நாணாக்கள் போல் இல்லாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேண்டுகோள்தான்; பதில் இல்லை.

அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

ஆங்காங்கே மீட்டிங் நடத்துவது மாதிரி சத்தம் வருகிறது. உறுப்பினர்கள் சத்தத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆங்காங்கே உறுப்பினர்கள் பேசுகின்ற சத்தம் வருவதால், கேள்வி கேட்கின்ற உறுப்பினர்களுக்கு அதை சரியாகப் புரிந்து கொண்டு பதில் சொல்ல அமைச்சர்களுக்கு சிரமமாக இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பல இலட்சக்கணக்கான மக்கள் வேலை செய்யக்கூடியது இந்த நெசவுத் தொழில். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் வித்தியாசமான கூலி வழங்கப்படுகிறது. இந்த இலடசக்கணக்கான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமானால் இன்னின்ன ரகங்களுக்கு இன்னின்ன கூலி கொடுக்க வேண்டும் என்ற ஒரு நியதியை ஏற்கெனவே இல்லாவிட்டாலும் இனிமேலாவது உருவாக்க வேண்டும். அந்த உருவாக்க இந்த ஆண்டிலாவது முயற்சி செய்து, ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு கிராமப்புறங்களிலும் நகரப் புறங்களிலும் அவர்களுடைய திறமையைப் பொறுத்த கூலி நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆகவே தமிழ்நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியாக கூலி நிர்ணயம் செய்வது சரியாக இருக்காது என்று அரசு கருதுகிறது.

கணபதிபாளையம் விவசாய சேவை கூட்டுறவுச் சங்க ஊழியர்கள்.

*கு. கா. வி. எண். [illegible] திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?



(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், கே. 720 கணபதிபாளையம் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த ஜனவரி முதல் ஆறுமாதகாலமாக சங்கத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமலிருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) நிதிப்பற்றாக்குறையால் கணபதிபாளையம் கூட்டுறவு சேவை சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க இயலவில்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய கூட்டுறவு வங்கியில் அந்த சங்கம் செய்திருக்கிற டெப்பாசிட்டிலிருந்தும் இதர முதலீடுகளிலிருந்தும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் சங்கம் வழங்கியிருக்கிற அநேக கடன்களில் சுமார் 5,37,327 ரூபாய் இதுவரை தவணை தவறிய கடனாக இருந்து வருகிறது. விவசாயக் சங்கத்தின் நடவடிக்கை காரணமாக கொடுக்கப்பட்ட பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. அதுமட்டுமல்ல. மத்திய கூட்டுறவு வங்கிக்கு 4,76,894 ரூபாய் இந்த சங்கம் தரவேண்டிய நிலையில் இருக்கிறது. இந்த நிலுவைகளை வசூல் செய்து, நிலைமையை சீராக்க அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 8

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த மாதிரியான கூட்டுறவு கடன் வசதி சங்கங்களில், மாநிலம் முழுவதிலும் பல நூற்றுக்கணக்கான சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று புகார் இருக்கிறது. அந்த ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து விசேஷ கடன் உதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அரசும் இதை உணர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில் மத்திய சங்கத்திலிருந்துவரும் டெப்பாசிட்டிலிருந்துகூட சம்பளம் தரப்படுகிறது. ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்குகிற பணம் ஒரு பக்கம் ; உறுப்பினர்களிடமிருந்து டெப்பாசிட்டாக வாங்குகிற பணம் ஒருபக்கம் இருக்கிறது. உறுப்பினர்களிடமிருந்து டெப்பாசிட்டாக வாங்குகிற பணத்திலிருந்து கூட சம்பளம் தந்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது பணியாற்றுகின்றவர்களுக்கு மட்டுமல்ல ; விவசாய உற்பத்திக்குக் கூட, தவணை தவறிய கடன் நிலுவை இருப்பதால், மீண்டும் கடன் வழங்க முடியவில்லை. எனவே வசதி படைத்த விவசாயிகளிடமிருந்து இந்த கடன்களை வசூல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பல கூட்டுறவு நாணயச் சங்கங்களில் சர்க்கரை விநியோகம் ஊழியர்கள் சம்பள்த்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அதுபற்றி தகவல் இல்லை.

## சென்னை நகரை அழகு படுத்துதல்.

'கு. கா. வி. எண் 63. திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரை அழகு படுத்த மாநகராட்சியில் திட்டங்கள் உள்ளனவா ?

(ஆ) சோடியம் வேப்பர் விளக்குகள் சென்னை நகர் முழுமையும் போடும் உத்தேசம் உள்ளதா ?



1980 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) தற்போது முக்கிய இடங்களில் மட்டும் போட்டும் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரை அழகு படுத்த என்னென்ன திட்டங்கள் உள்ளன அந்தத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ? எப்போது அந்தத் திட்டங்கள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சென்னை நகரை அழகுப்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 140 பூங்காக்கள் சென்னை நகரிலே இருக்கின்றன. இவ்வாண்டில் மட்டும் 28 பூங்காக்களை புதிதாக ஏற்படுத்தி அவற்றிலே புதிய நீர் ஊற்றுகளையும் ஏற்படுத்தி அழகை அதிகப்படுத்துவதற்குரிய வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம். அடுத்து சோடியம் வேப்பர் விளக்குகளைப் பல்வேறிடங்களிலே போடுவதற்காக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதையடுத்து மரம் நடும் திட்டத்தின் மூலமாக 10,000 புதிய மரங்களை நடுவதற்குரிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல் அண்ணாசாலையில் அண்ணாசிலை முதல் மீனம்பாக்கம் விமான நிலையம் வரையிலும் சுமார் 1 கோடி ரூபாய் செலவில் சோடியம் விளக்குகள் அமைப்பதற்குண்டான திட்டம் அரசினுடைய ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் மெரினா கடற்கரைப் பகுதியை அழகுபடுத்த தலைமைச்செயலாளரைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி அதன் மூலமாக மெரினா கடற்கரையை அழகு படுத்துவதற்குரிய திட்டத்தையும் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, அழகு படுத்தும் திட்டம் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அசுத்தம் அகற்றி சுத்தப்படுத்துவதற்குரிய திட்டம் உண்டா ? கூவம் மணக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மீண்டும் கூவம் மணக்குமா என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் அசுத்தத்தை அறவே ஒழிப்பதற்குரிய வழிகளிலே நாம் திட்டங்கள் தீட்டி நடவடிக்கை

களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக கால் நடைகளின் மூலமாக அசுத்தம் ஏற்படுகின்றது. அதாவது ஸ்ட்ரே கேட்டில் என்று சொல்லப்படுகின்ற தெருக்களிலே திரிந்துகொண்டிருக்கின்ற கால்நடைகளை எல்லாம் ஒரே இடத்திற்குக் கொண்டுபோய் நிறுத்தி அதன் மூலமாக அசுத்தம் மற்ற இடங்களிலே தேங்காமல் ஒரே இடத்திலே தேங்குகின்ற அளவுக்கு ஏற்படுத்தி பின்னர் அதை வெளியே எடுத்துக்கொண்டு போகக்கூடிய வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் பல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளின் மூலமாக தெருவிலே திரிகின்ற கால்நடைகளைப் பிடித்து வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய அளவிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அசுத்தம் தேங்காமல், சுத்தமாக வைத்துக்கொள்வதற்குரிய வழிகள் பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. செல்வராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்னையைச் சுத்தமாக வைத்திருக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கப் போவதாக அறிவித்தார்கள். ஆனால் சென்னை நகரிலே இருக்கின்ற வாட்டர் டேபிள்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றிலே சிறுநீர் தண்ணீரும், சாக்கடை நீரும் தேங்கி கொசுக்களும், ஈக்களும் உற்பத்தி ஆகின்றன. ஆகவே முதல் திட்டமாக சென்னையில் இருக்கின்ற எல்லா வாட்டர் டேபிள்களையும் சுத்தம் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா ?

அடுத்து பல இடங்களிலே சோடியம் விளக்கு பொருத்த இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் சென்னையிலே இருக்கின்ற விளக்குகளில் 100-க்கு 50 விளக்குகள் எரிவதில்லை. எனக்கு அதற்குரிய கணக்குகள் தெரியும். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளைக் கூட்டிக் கேட்டிருக்கிறேன். இப்போது 100-க்கு 50 விளக்குகள்தான் எரிகின்றன. ஆகவே உடனடியாக எல்லா விளக்குகளையும் எரிய வைக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா ? மெயின் ரோட்டிலே மட்டுமல்லாமல் இன்டீரியர் ரோடு என்று சொல்லப்படுகின்ற சிறிய தெருக்களிலும் உள்ள எல்லா விளக்குகளையும் எரிய வைக்க இந்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையிலும் சென்னை நகரில் அது பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்





கிறது. துறைமுகத் தொகுதி உறுப்பினரான மாண்புமிகு திரு. செல்வராசன் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். 7 இலட்சம் ஜனத்தொகை அடிப்படையிலே தயாரிக்கப்பட்டது கழிவுநீர்த் திட்டம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய ஜனத்தொகை 37 இலட்சமாகும். ஆகவே 37 இலட்சம் மக்களுக்குத் தேவையான அளவுக்கு கழிவு நீரகற்று திட்டங்களை பெரிய அளவிலே தீட்டி செயல்படுத்த வேண்டி இருக்கின்றது. அதாவது பல ஆண்டுகளுக்குரிய ஒரு பெரிய திட்டமாக செயல்படுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது.

அடுத்து தெரு விளக்குகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில் இப்போது ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு மேல் எரிந்துக்கொண்டிருக்கின்றன. எரியாத விளக்குகளை எரிய வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் மெர்குரி வேப்பர் விளக்குகள் இருக்கின்ற இடங்களிலே எல்லாம் சோடியம் வேப்பர் விளக்குகளை பொருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சோடியம் விளக்குகள் இரவு நேரங்களில் போக்குவரத்து தங்கு தடையில்லாமல் நடைபெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். மேலும் மெர்க்குரி விளக்குகள் 5 ஆயிரம் மணி நேரம் தான் எரியக்கூடியது. ஆனால் சோடியம் வேப்பர் விளக்குகள் 10 ஆயிரம் மணி நேரம் எரியக்கூடியது. சோடியம் வேப்பர் விளக்குகள் விலையும் குறைவாக இருக்கின்றது. ஆகவேதான் அந்த விளக்குகளை உபயோகப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே நாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 10—10]

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூழுக்கு உப்பு இல்லை என்று சிலர் சொல்கிறார்கள், ஆனால் பாலுக்கு சர்க்கரை இல்லை என்று சிலர் கேட்கிறார்கள். சென்னை நகரத்திலே இருக்கிற சாலை வசதிகள் இன்னும் சரியாக இல்லை. மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. குடிசை வாழ் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு சாலை வசதிகள் கொஞ்சம் கூட கிடையாது. ஆரம்ப சுகாதார வசதிகள் எவ்வளவோ செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி நிலைமை இருக்க அண்ணா சாலையிலிருந்து, இத்தகைய சோடியம் விளக்குகள் போட 30 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அத்தியாவசியத் தேவையான. நான் குறிப்பிட்ட

களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக கால்நடைகளின் மூலமாக அசுத்தம் ஏற்படுகின்றது. அதாவது ஸ்ட்ரே கேட்டில் என்று சொல்லப்படுகின்ற தெருக்களிலே திரிந்துகொண்டிருக்கின்ற கால்நடைகளை எல்லாம் ஒரே இடத்திற்குக் கொண்டுபோய் நிறுத்தி அதன் மூலமாக அசுத்தம் மற்ற இடங்களிலே தேங்காமல் ஒரே இடத்திலே தேங்குகின்ற அளவுக்கு ஏற்படுத்தி பின்னர் அதை வெளியே எடுத்துக்கொண்டு போகக்கூடிய வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் பல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளின் மூலமாக தெருவிலே திரிகின்ற கால்நடைகளைப் பிடித்து வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய அளவிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அசுத்தம் தேங்காமல் சுத்தமாக வைத்துக்கொள்வதற்குரிய வழிகள் பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. செல்வராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்னையைச் சுத்தமாக வைத்திருக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கப் போவதாக அறிவித்தார்கள். ஆனால் சென்னை நகரிலே இருக்கின்ற வாட்டர் டெபிள்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றிலே சிறுநீர் தண்ணீரும், சாக்கடை நீரும் தேங்கி கொசுக்களும், ஈக்களும் உற்பத்தி ஆகின்றன. ஆகவே முதல் திட்டமாக சென்னையில் இருக்கின்ற எல்லா வாட்டர் டெபிள்களையும் சுத்தம் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா ?

அடுத்து பல இடங்களிலே சோடியம் விளக்கு பொருத்த இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் சென்னையிலே இருக்கின்ற விளக்குகளில் 100-க்கு 50 விளக்குகள் எரிவதில்லை. எனக்கு அதற்குரிய கணக்குகள் தெரியும். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளைச் சந்தித்து கேட்டிருக்கிறேன். இப்போது 100-க்கு 50 விளக்குகள்தான் எரிகின்றன. ஆகவே உடனடியாக எல்லா விளக்குகளையும் எரிய வைக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா ? மெயின் ரோட்டிலே மட்டுமல்லாமல் இன்டீரியர் ரோடு என்று சொல்லப்படுகின்ற சிறிய தெருக்களிலும் உள்ள எல்லா விளக்குகளையும் எரிய வைக்க இந்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையிலும் சென்னை நகரில் அது பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்



கிறது. துறைமுகத் தொகுதி உறுப்பினரான மாண்புமிகு திரு. செல்வராசன் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். 7 இலட்சம் ஜனத்தொகை அடிப்படையிலே தயாரிக்கப்பட்டது கழிவுநீர்த் திட்டம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய ஜனத்தொகை 37 இலட்சமாகும். ஆகவே 37 இலட்சம் மக்களுக்குத் தேவையான அளவுக்கு கழிவு நீரகற்று திட்டங்களை பெரிய அளவிலே தீட்டி செயல்படுத்த வேண்டி இருக்கின்றது. அதாவது பல ஆண்டுகளுக்குரிய ஒரு பெரிய திட்டமாக செயல்படுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது.

அடுத்து தெரு விளக்குகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் இப்போது ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு மேல் எரிந்துக்கொண்டிருக்கின்றன. எரியாத விளக்குகளை எரிய வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் மெர்குரி வேப்பர் விளக்குகள் இருக்கின்ற இடங்களிலே எல்லாம் சோடியம் வேப்பர் விளக்குகளை பொருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சோடியம் விளக்குகள் இரவு நேரங்களில் போக்குவரத்து தங்கு தடையில்லாமல் நடைபெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். மேலும் மெர்க்குரி விளக்குகள் 5 ஆயிரம் மணி நேரம் தான் எரியக்கூடியது. ஆனால் சோடியம் வேப்பர் விளக்குகள் 10 ஆயிரம் மணி நேரம் எரியக்கூடியது. சோடியம் வேப்பர் விளக்குகள் விலையும் குறைவாக இருக்கின்றது. ஆகவேதான் அந்த விளக்குகளை உபயோகப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே நாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 10—10]

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூழுக்கு உப்பு இல்லை என்று சிலர் சொல்கிறார்கள், ஆனால் பாலுக்கு சர்க்கரை இல்லை என்று சிலர் கேட்கிறார்கள். சென்னை நகரத்திலே இருக்கிற சாலை வசதிகள் இன்னும் சரியாக இல்லை. மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. குடிசை வாழ் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு சாலை வசதிகள் கொஞ்சம் கூட கிடையாது. ஆரம்ப சுகாதார வசதிகள் எவ்வளவோ செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி நிலைமை இருக்க அண்ணா சாலையிலிருந்து, இத்தகைய சோடியம் விளக்குகள் போட 30 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அத்தியாவசியத் தேவையான. நான் குறிப்பிட்ட

காரியங்களை, ஆரம்பச் சுகாதார வசதிகளை சென்னை நகர மக்களுக்கு செய்து கொடுக்க முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கூழுக்கு உப்பு இல்லை, பாலுக்கு சர்க்கரை இல்லை என்று சொன்னார்கள். சர்க்கரையை கொடுக்க வேண்டியவர்கள் மத்திய சர்க்கார் தான், பாலுக்கு சர்க்கரை இல்லை என்றால் அவர்களைத்தான் கேட்க வேண்டும். சர்க்கரை ஏன் விலை ஏறியது, எப்படி ஏறியது என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்....

திரு. என். எஸ். வி. சித்தன். தலைவர் அவர்களே இது தேவையில்லாத பிரச்சினை. I object. This is irrelevent.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சனையை உருவாக்காதீர்கள். கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலுக்கு சர்க்கரை இல்லை என்று கேட்டதால்தான், சர்க்கரையைப் பற்றிச் சொல்லவேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டது. நான் ஏற்கனவே விவசாயத்துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். அதனால் எவ்வளவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன/ எவ்வளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. யார் உற்பத்தி செய்கிறார்கள், எப்படி வினியோகம் செய்யப்படுகிறது. என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். எப்படி சர்க்கரை கிடைக்காமல் போயிற்று என்ற தகவலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

(கூச்சல்-குழப்பம்).

(மணியடிக்கப் பெற்றது).

திரு. என்.எஸ்.வி. சித்தன் : தலைவர் அவர்களே, நான் கூழுக்கு உப்பு இல்லை பாலுக்கு சர்க்கரை இல்லை என்று உதாரணத்திற்காகத்தான் சொன்னேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது. கொடுத்து விட்டீர்கள். அந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இரண்டுமே கேள்வி நேரத்தில் தவிர்க்கப் பெற வேண்டும்.



திரு. என்.எஸ்.வி. சித்தன் : தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் அதை உதாரணத்திற்காக சொன்னேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரை குற்றம் சொல்வது போல் கேள்வி நேரத்தில் சொல்கிறார். நான் கேட்டதன் பொருள் வேறு. இவர் சொல்லும் சப்ஜெக்டே வேறு.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, 35 சதவீதத்தை கோவாப்ரேட்டிவ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. அது சரியாக நிறைவேற்றப்பட்டாலே கூட போதும் இந்த குறையை சரி செய்து விடலாம். சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனிடமும் குற்றம் இருக்கிறது என்று சொல்லத்தான் இதைச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் மாநகராட்சி சம்பந்தப்பட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கூழுக்கு உப்பு இல்லை என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உப்பு நிறைய நம் மாநிலத்தில் இருக்கிறது. அதிகமாகக் கூட கிடைக்கிறது. மாநகராட்சி சாலைகளைப் பொருத்தவரையில், 400-க்கும் மேற்பட்ட சாலைகள் தனியார்களுடைய பாதுகாப்பிலே இருந்துக் கொண்டிருக்கிறது. அந்தச் சாலைகளை சரிவர பராமரிக்காமல் வைத்திருக்கிறார்கள்.

அதனால்தான் இப்போது கூட அதற்காக ஒரு திட்டத்தைத்தீட்டி அந்த 400 சாலைகளையும் இந்த மாநகராட்சியே ஏற்று அதைப் போட்டு அதன்மூலமாக அதற்கு என்ன செலவாகிறதோ அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து திரும்பப் பெறவேண்டும் என்று இப்போதுதான் நோட்டீஸ்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அந்த 400 சாலைகளையும் போட திட்டமும் தீட்டப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் நல்லமுறையில் பராமரிப்புடன்தான் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கே உள்ள அண்ணா சாலை, காமராஜ் சாலை போன்ற சாலைகள் வெகு அழகாக தினமும் சுத்தப்படுத்தப்பட்டு நல்லமுறையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பழுதடைந்த சாலைகளைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு கூட ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் இதற்காகச் செலவிட இருக்கிறோம். இப்போது கூட அந்த வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருக்கக்கூடிய தெருவிளக்குகள்

பற்றி நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தெருவிளக்கள் கூடியசீக்கிரம் நூற்றுக்கு நூறு சதவிகிதம் எரிகிற சூழ்நிலையை ஏற்படுத்தித்தருவோம்.

திரு. ரா. உமாநாத் : கூவத்தின் நாற்றத்தை அடக்க முடியுமா என்று நான் சொல்லமுடியாது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று காலையில் ஜஸ்டிஸ் வி.ஆர். கிருஷ்ண ஐயர் ஜட்ஜ்மென்ட் ஒன்று வந்திருக்கிறது, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் ஒன்று வந்திருக்கிறது. ராட்லம் முனிசிபாலிட்டி இதுமாதிரி நாற்றம் பிடித்திருக்கிறது என்று அது சம்பந்தமாக ரெப்ரசென்ட் செய்தும் அதுகுறித்து அதிகாரிகள் அமைச்சர்கள் நடவடிக்கைகள் எதுவும் எடுக்காததால் கீழ்கோர்ட் டிஸிஷன்ஸ் வந்து பின்னர் அது சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்து இப்போது டிஸிஷன் வந்திருக்கிறது. நாற்றத்தை அடக்குவது என்பது முனிசிப்பாலிட்டியின் ஸ்டாச்சூட்டரி ஆப்ளிகேஷன், அதை மறைமுகமாகவோ அல்லது நேர்முகமாகவோ அவர்கள் ரிஜெக்ட் செய்யமுடியாது, ஸ்டாச்சூட்டரி ஆப்ளிகேஷன், அதை மீறுவது பனிஷபிள் என்று டிஸிஷன் வந்திருக்கிறது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் கேட்டுக்கொள்கிறேன். நாற்றத்தை போக்க முடியுமா என்று சொல்லமுடியாது என்று சொல்வது சுப்ரீம் கோர்ட் டிஸிஷனை மீறுவதாகும். நாற்றத்தைப் போக்காமல் அழகுபடுத்தினால்மட்டும் போதாது. ஆகவே துர்நாற்றத்தைக் களைய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு சொல்லவில்லை. மாநகராட்சியைப் பொறுத்தவரையில் கூவம் கால்வாய் மாநகராட்சியின் ஆணைக்கு உட்பட்டதல்ல என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் அது மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் ஸல்லேஜ் ஆன்ட் சூவரேஜ் போர்ட் கீழ் இருக்கக்கூடிய ஒன்று. பொதுப்பணித் துறைக்கும் இது பாத்தியதைப் பட்டது. ஆகவே இரண்டு துறைகளும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். மாநகராட்சி ஏற்கனவே கேட்டுக்கொண்டிருக்கிறது. தக்க நடவடிக்கைகளை அவர்களும் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. சு. பாலன் : இப்படி அழகுபடுத்துவதற்கு முன்னால், சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய நகரமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய வட்டங்களில் ஆங்காங்கே சிறிய சிறிய பூங்காக்கள் அமைத்தும் விளையாட்டு திடல்கள் அமைத்



தும் இருந்தது, ஏழைமக்களுக்கு வசதியாக இருந்தது. ஆனால் அந்த இடங்களில் எல்லாம் கக்கூஸ், கழிப்பிடங்கள் கட்ட அதிகாரிகள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அந்த இடங்களிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : புதிய கழிப்பிடங்கள், பே அன்ட் யூஸ் லட்ரீன்ஸ், அதிகமாகக் கட்டி அதன்மூலம் அசுத்தம் தேங்காமல் பார்த்துக் கொள்ள பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 100-க்கு மேல் கழிப்பிடங்கள் பலயிடங்களில் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. திரு. பாலன் அவர்கள் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் இவற்றில் கழிப்பிடங்கள் கட்டக்கூடாது என்று சொல்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனித்துப் பார்த்து செயல்படுவோம்.

## பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம்.

* கு. கா. வி. எண். 64—திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரின் மத்தியில் ஓடும் பக்கிங்காம் கால்வாய் சீர்படுத்தும் திட்டம் எந்த அளவுக்கு செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு மற்றும் திட்ட விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (அ) மற்றும் (ஆ): வடக்கு பக்கிங்காம் கால்வாய் சரக்குகள் எடுத்துச் செல்லும் படகு போக்குவரத்திற்கு பயன்படுகிறது. இதனை மத்திய அரசின் நிதி உதவியுடன் சீரமைக்க ரூ. 310 லட்சம் மதிப்பீடு கொண்ட ஒரு திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அவ்வரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, ஏற்கனவே வடற்கு பக்கிங்காம் கால்வாயில் 0/0 முதல் 10/0 வரை (எண்ணூறு தெற்கு வடக்குக்கு வரை) ரூ. i05 லட்சம் செலவில் சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தெற்கு பக்கிங்காம் கால்வாய் படகு போக்குவரத்து பயன்படுவதில்லை. ஆகவே முன்கூறிய திட்டத்தில் தெற்கு பக்கிங்காம் கால்வாய் இடம் பெறாது. ஆனபடு ஆண்டுதோறும் தெற்கு மற்றும் வடக்கு பக்கிங்காம் கால்வாய்களை சீராக பராமரிப்பதற்காக ரூ. 4. 5 இலட்சம் ஒதுக்கப்பட்கிறது.

[முற்பகல் 10–20]

திரு. எம். சின்னராஜ் : தலைவர் அவர்களே மத்திய அரசு அங்கீகாரத்தின் காரணமாக. இந்தத் திட்டம் ஏதாவது தடைப்பட்டால், அதை விரைவுபடுத்தி துரித நடவடிக்கை எடுக்கப்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்ட் 8

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, துரித நடவடிக்கைகளுக்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார்: 'சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம், என்று சொன்னதுபோல், இந்தக் கால்வாயில் தோணிகள் ஓட்டி, வியாபாரம் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தப் பாட்டை முழுமையாகச் சொன்னால் நன்றாக இருக்கும். 'சிந்து நதியின்மிசை நிலவினிலே' சேர நன்னாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்'. அவர்கள் குமரி மாவட்டத்திலே இருந்து வருவதால், இது பொருத்தமாக இருக்கும். ஆனால், இப்போதுள்ள சூழ்நிலையில், பாட்டுப் பாடிக்கொண்டே படகு ஓட்டினால் ஆபத்து வரும். எனவே, வியாபாரத்திற்கு இது பயன்படும் என்பதை அறிந்துதான், பேத்தகன்றுவரை 315 கிலோமீட்டர் நீளத்தில், இந்தக் கால்வாயில் போக்குவரத்தை நீட்டிப்பதற்கு மத்திய அரசிடம் இந்த அரசு கேட்டிருக்கிறது. அதற்காக 3கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒப்புதல் கிடைத்தவுடன், நிச்சயமாக இந்தக்கால்வாயை வியாபாரத்திற்காக பயன்படுத்தக்கூடிய அளவில் சீரமைப்புப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் அடிக்கடி ஏற்படும் சாலை விபத்துக்களை, சாலை நெரிசல்களை தவிர்க்க இந்தக் கால்வாயில் வாணிகப் படகுகளை விடுவதற்கான முயற்சிகளை உடனடியாக அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அபிவிருத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக 1 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உதவிக்காக இப்போது நாம் இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். 310 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசு நிதி உதவி செய்யவேண்டும் என்று, அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன், விரைவிலேயே இந்தப் பணிகள் துவக்கப்படும்.



1980 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை

### ''மக்கள் செய்தி'', ''அண்ணா'', ''முரசொலி'' நாளேடுகள் மீது தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 14—7—1980 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பினாமி நிலங்களை கையகப்படுத்துதல் குறித்த நிலச் சீர்திருத்தச் சட்ட முன்வடிவு ஒன்றினைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை எதிர்த்தார். பின்னர் வாக்கெடுப்பு நடத்தி, அச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றது.

இந்நிகழ்ச்சி குறித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. ''பினாமி நிலங்களை கைப்பற்றும் சட்டத்திற்கு தி.மு.க. எதிர்ப்பு—மெஜாரிட்டி ஆதரவுடன் சட்ட சபையில் மசோதா தாக்கல்'' என்ற தலைப்பில் 'மக்கள் செய்தி' 14—7—1980 நாளிதழில் வெளியிட்டுள்ளது. ''பினாமி நிலங்களைக் கைப்பற்ற கருணாநிதி கட்சி எதிர்ப்பு—நிலப் பிரபுக்களுக்கு வக்காலத்து'' என்ற தலைப்பிட்டு 14—7—80ல் 'அண்ணா' நாளிதழ் வெளியிட்டுள்ளது.

''பினாமி நிலங்கள் கைப்பற்றுவதை தி.மு. கழகம் ஆதரிக்கிறது. ஆனால் சட்ட முன்வடிவு சரியாக இல்லை. சட்டப் பேரவையில் வெ. கிருஷ்ணமூர்த்தி கருத்து'' என்று தலைப்புடன் சென்னை 15—7—1980 நாளிதழ் 'முரசொலி' வெளியிட்டுள்ளது.

தலைப்பிற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள செய்தியில் அதிக மாறுதல்கள் இல்லாமல், நடந்த நிகழ்ச்சிகளை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டுள்ளன.

''மக்கள் செய்தி'' பத்திரிகை மீதும், ''அண்ணா'' பத்திரிகை மீதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவை உரிமை மீறல் பிரச்சினையைப் பேரவையில் 18—7—1980அன்று எழுப்பினார். அதே நாளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி மாறன் அவர்கள் 'முரசொலி' பத்திரிகை மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையைப் பேரவையில் எழுப்பினார்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1980 ஆகஸ்ட் 8

பத்திரிகைகளிடம் விளக்கம் பெற்ற பின்னர் தீர்ப்பளிப்பதாகப் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

அதே நாளில் (18—7—1980) மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் 'முரசொலி' நாளிதழ் மீது மற்றொரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையையும் எழுப்பினார். அப் பத்திரிகை, தி.மு.க. உறுப்பினர்களது பேச்சுக்களை மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகிறது என்றும், அப்பேச்சுக் களில் வரும் குற்றச்சாட்டுக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் அளிக்கும் பதில்கள் வெளியிடப்படுவது இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்பிரச்சினை குறித்தும் பத்திரிகையிடம் விளக்கம் கேட்டுப் பின்னர் தீர்ப்பளிப்பதாகப் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

'அலை ஓசை' நாளிதழ் ஆசிரியர் அளித்துள்ள விளக்கத்தில் உறுப்பினர்களது பேச்சுக்கள் எதுவும் மாற்றப்பட வில்லை என்றும், தலைப்புக்கள் தமது சொந்த விமரிசனம் என்றும் குறிப் பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினையில் மற்ற இரு பத்திரிகை ஆசிரியர்களும் விளக்கம் அளிக்கவில்லை.

திரு. மணிமாறன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து 'முரசொலி' ஆசிரியர் அளித்துள்ள விளக்கத்தில் 'முரசொலி' ஒரு கட்சிப் பத்திரிகை என்றும், அதனால் அக்கட்சி உறுப்பினர் களது பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றும், தமிழ்நாட்டின் மற்ற எல்லாக் கட்சிப் பத்திரிகைகளும் இவ்வாறு தான் செய்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேரவைச் செய்திகளை வெளியிடுவதில், அவற்றை முழுமை யாக வெளியிட வேண்டுமென்றும், கூட்டியோ, குறைத்தோ வெளி யிடுவது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் இப்பேரவை யில் பலமுறை தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, பத் திரிகைகள், அவை கட்சிப் பத்திரிகையானாலும் சரி, வேறு எந்தவிதமான பத்திரிகையானாலும், சரி, இந்த விதிக்கு உட் பட்டுத்தான் பேரவை நடவடிக்கைகளைப் பிரசுரிக்க வேண்டும். அதே போல, தலைப்புக்கள் கொடுக்கும்போதும், உள்ளே கொடுக் கப்படும் செய்திகளுக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தோற்று விக்கும் தலைப்புக்களைக் கொடுக்கக்கூடாது என்றும் தீர்ப்புக்கள் உள்ளன.

எனவே, இங்கு எழுப்பப்பட்டுள்ள நான்கு பிரச்சினைகளிலும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் உரிமை மீறல் இருப்பதாகத் தான் முன்மாதிரிகளை வைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆயினும் பேரவை தனது பரந்த மனதுடன், இவைகளைப் பெரிதுபடுத்தாது தள்ளிடவும் செய்யலாம். எனவே, இவைகளை உரிமைக் குழுவிற்கு அனுப்பாது மேலே கூறியுள்ள அறிவுரையின்படி பத்திரிகைகள் இனிமேல் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் கண்காணித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் இப்பிரச்சினைகள் மீது வேறு எந்தவிதமான மேல் நடவடிக்கைகளும் தேவையில்லையெனக் கருதுகிறேன். பேரவை இதை ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்.

### (அ) மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு வரும் குழாய்களில் இருந்து எண்ணெய் திருடுவது—அமைச்சரின் அறிக்கை.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மணலி சுத்திகரிப்பு ஆலையிலிருந்து சென்னை துறைமுகத்திற்கு பெட்ரோலியம் பொருட்களை எடுத்துச் செல்லும்பொருட்டு ஏறத்தாழ 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு குழாய் வரிசைகள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தால் 1970ஆம் ஆண்டில் போடப்பட்டன. இந்த 9 கிலோ மீட்டர் நீளக் குழாயில் ஒரு பகுதி பூமிக்கு அடியிலும், தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ள ஒரு பகுதி பூமிக்கு மேலும் உள்ளது. பூமிக்கு அடியில் செல்லும் குழாய் கொருக்குப் பேட்டைக்கு அருகாமையில் உள்ளது. அந்த இடம் ரயில்வேக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தில் அனுமதியின்றி பலர் குடிசைகளைப் போட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தக் குழாயிலிருந்து எண்ணெய் கள்ளத்தனமாக எடுக்கப்படுவது பற்றிய புகார்கள் 1976ஆம் ஆண்டில் காவல் துறைக்கு வந்தன. அந்த ஆண்டு காவல் துறையினர் 25 குற்றங்களைக் கண்டு பிடித்தனர். அவற்றில் சம்பந்தப்பட்ட 34 குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். ரயில்வேக்குச் சொந்தமான இடத்தில் பலர் குடிசைகளைப் போட்டுக்கொண்டு, குடிசைக்குள்ளேயே நிலத்தைப் பறித்து குழாயிலிருந்து எண்ணெய் திருடுவது தெரிந்தது. ஆகவே, 1976ஆம் ஆண்டில் இந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற ரயில்வேத் துறையினர் நடவடிக்கை தொடங்கினர். வெளியேற்ற நோட்டீசும் கொடுக்கப்பட்டது. ஆனால் குடியரசுத் தலைவர் ஆட்சியின காலத்தில் இந்த ஆக்கிரமிப்பாளர்களின் முறையீட்டின் பேரில் அப்பொழுதிருந்த தமிழக ஆளுநர் வெளியேற்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க ஆணையிட்டார். அதன் விளைவாக மேல் நடவடிக்கை எடுக்க இயலாமல் போனது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 8

எனினும் இக்குற்றங்களைத் தடுக்கும் வகையில் 1977-ல்
இந்தக் குழாய்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தனிக் காவல்
அணி அமைக்கப்பட்டது. குடிசைக்குள் நுழைந்து இத்திருட்டுக்
களைக் கண்டு பிடிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை
யிலும் 1977ஆம் ஆண்டு 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு,
11 பேர் குற்றஞ்சாட்டப்பட்டு 9 பேர் தண்டனை பெற்றார்கள்.
1978ஆம் ஆண்டு 25 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 37
பேர் குற்றஞ் சாட்டப்பட்டு 22 பேர் தண்டனையுற்றனர்.
1979-ஆம் ஆண்டு 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 101 பேர்
குற்றச்சாட்டுக்களுக்க ளாகி 69 பேர் தண்டனை பெற்றுள்
ளனர். 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 56 வழக்குகள்
பதிவு செய்யப்பட்டு, 103 பேர் குற்றஞ் சுமத்தப்பட்டு, 24
பேர் தண்டனை பெற்றனர்.

இவ்வாண்டு ஆளுநர் ஆட்சியிருந்த ஏப்ரல், மே திங்களில்
முறையே 8, 9 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்
பதும், ஆனால் நமது ஆட்சி வந்த பிறகு ஜூன், ஜூலை மாதங்
களில் முறையே 10, 11 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன
என்பதும் குறிப்பிடத்தக்கது.

[முற்பகல் 10-30]

இக்குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மேலும் ஒரு சிக்கல்
என்னவென்றால், திருடு போய்விடும் எண்ணெயை தங்களு
டைய எண்ணெய் என்று எண்ணெய் கம்பெனியால் ஆதாரத்
தோடு சொல்ல முடிவதில்லை. ஆகவே மாநில அரசு இதில்
மெத்தனமாக நடந்துகொண்டது என்ற கூற்று சரியானதல்ல.
மேலும் மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் மத்திய
அரசு திருப்தியடையவில்லையென்றால் மாநில அரசின் கவனத்
திற்குக் முன்பே கொண்டு வந்திருக்கலாம். குறிப்பாக மத்திய
அமைச்சர், மாநில அமைச்சரவையின் கவனத்தை ஈர்த்திருக்
கலாம். அல்லது சென்னைக்கு அடிக்கடி வரும்போதெல்லாம்
மாநில அமைச்சர்களுடன் இது பற்றி பேசியிருக்கலாம். ஒரு
வேளை அவரது கவனத்திற்கே, நாடாளுமன்றத்தில் கவன
ஈர்ப்புத் தீர்மானம் வந்த பிறகுதான், விஷயங்கள் தெரிந்
ததோ என்னவோ நமக்குத் தெரியாது. இருப்பினும் மத்திய
அரசின் மூலம் நமது அரசுக்கு 1980ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்
களில் நமது ஆட்சியில்லாதபோது, ஆளுநர் ஆட்சிக் காலத்தில்
தான் இதுபற்றி ஒரு கடிதம் வந்தது. அதுவும் மத்திய அரசின்
இணைச் செயலாளர் இக்கடிதத்தை எழுதியுள்ளார். பின்னர்



1980 ஆகஸ்ட் 8] [திரு. ச. இராமச்சந்திரன்]

இவ்வாண்டு ஜூலை மாதம் 17-ந் தேதி, நமது அரசின் உள்
துறைச் செயலாளர் சென்னை சுத்திகரிப்பு ஆலையின் அதிகாரி
களையும் காவல்துறை அதிகாரிகளையும் அழைத்துப் பேசி
தீவிர நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

மத்திய அரசின், அரசு நிறுவனங்களின் உடைமைகளைக்
கண்கணிப்பது காப்பாற்றுவது மாநில அரசின் கடமை; ஆகவே
அதற்கான செலவை மாநில அரசு கேட்பது சரியல்ல என்ற
கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் உடைமை
களை மட்டுமல்ல, மக்களுடைய உடைமைகளையும் காப்
பாற்றவேண்டியதும் அரசின் கடமைதான். ஆனால் எங்கெங்கு
தீவிரமாக கண்காணிக்க தனிக் காவல் படை கோரப்படுகிறதோ
அங்கு மட்டும் அதற்கான செலவை அந்த நிறுவனம் ஏற்
றுக் கொள்வது வாடிக்கை. அண்மைக்காலம் வரை, சென்னை
துறைமுகம் அத்தகைய செலவை ஏற்றுக் கொண்டது என்பதே
இதற்குச் சான்று. அதே போல, 1977-ஆம் ஆண்டு தனிக்
காவல் அணிக்கான செலவை ஏற்றுக்கொள்ள சென்னை எண்
ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒப்புக் கொண்டது. ஆயினும்
இதுவரை அரசுக்கு 5 லட்ச ரூபாய் சேரவேண்டியிருந்தும்.
எண்ணெய் நிறுவனம் பணம் கட்டவில்லை. இருப்பினும்
தொடர்ந்து காவல் பணி நடைபெற்று வருவதிலிருந்தே மாநில
அரசு காட்டிவரும் ஒத்துழைப்பை நன்கு புரிந்து கொள்ள
லாம்.

இவ்வாண்டு ஆகஸ்டு திங்கள் 6-ஆம் தேதி இந்தியன் ஆயில்
நிறுவனத் தலைமை இயக்குநரும் மத்திய அரசின் பெட்ரோ
லியம் துறை அதிகாரி ஒருவரும் தமிழக அதிகாரிகளைச் சந்
தித்துப் பேசியதுடன் முதலைமச்சர் அவர்களையும் சந்தித்துப்
பேசினார்கள்.

ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற ரவில்வேத்துறை
நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு தன் முழு உதவியையும்
ஒத்துழைப்பையும் தரும் என்று அவர்களுக்கு உறுதி கூறப்பட்
டுள்ளது. அதே சமயத்தில் இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு
வேறு இடத்தில் வீட்டு வசதி செய்வது மனிதாபிமான அடிப்
படையில் மிக இன்றியமையாதது என்பதால் வேறு இடத்தைக்
கையகப்படுத்துவதற்கும் அவர்கள் அங்கு குடிசைகள் போட்டுக்
கொள்ள உதவுவதற்கும் ஏற்படும் செலவுகளை மத்திய அரசு
ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தம் கருத்தை தமிழக
முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இக்குழாய்
களுக்கு இப்பொழுது அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்பை மேலும்
பலப்படுத்துவதற்கு சிறப்பாக ஒரு காவல் படையை அமைக்
கவும், அவர்களுக்குரிய வாகன வசதிகள் செய்து தரவும்

விசாரணைப் பிரிவு ஒன்று தனியாக அமைக்கவும் இப்பொழுது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த 9 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பகுதி முட்களும் புதர்களும் நிறைந்திருப்பதால் அங்கே நடமாட்டத்திற்கே தடங்கல் இருக்கிறது. இப்புதர்களை நீக்கிவிட்டு, சாலை இல்லாத பகுதியில் சாலை அமைக்கவும், சாலை இருக்கின்ற பகுதியில் அதைச் செப்பனிட்டுக் காவல் வாகனங்கள் எளிதில் செல்லக்கூடிய வகையில் அதைச் சீர்படுத்தவும், இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரிகளுக்கு யோசனை கூறப்பட்டது. இதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த திருட்டுகளின் பின்னணியில் செல்வமும் செல்வாக்கும் படைத்த ஒரு சிலர் மூல சக்திகளாக இருக்கக் கூடும் என்று ஐயப்பாடு இருப்பதால் அவர்களையும் இனம் கண்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

இந்த விவரங்களை மனதில் கொண்டு ஆராயும்போது சமூக விரோத சக்திகளைக் கண்டு பிடிக்கவும் தண்டிக்கவும் மாநில அரசு முழு பொறுப்பு ஏற்றுள்ளதுடன் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பையும் முழுமையாக நல்கியுள்ளது என்பது புலனாகும்.

## 4. அரசினர் தீர்மானம்.

### விதி 58-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து தீர்மானம் ஒன்றை அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, " நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—"

" 8—8—1980, 11—8—1980 மற்றும் 12—8—1980 ஆகிய நாட்களில் ஒத்திவைப்புத் தீர்மானங்களை இரண்டு பொருள்கள் குறித்து எடுத்துக் கொள்ள வசதியாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ஒரு நாளில் ஒரு பொருளுக்குமேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றுள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 58-ஐ தளர்த்த வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.





## 5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) கோவை மாவட்டத்தில் மின்சார வாரிய ஊழியர்கள் இருவர் கொலை செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை மாவட்டம் சோமையன பாளையத்தில் கடந்த 17—7—1980 மற்றும் 19—7—1980 அன்று மின்சார வாரிய ஊழியர்கள் இருவர் கொலை செய்யப்பட்டது பற்றியும், இதனால் பொது மக்கள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்." என்று கேட்டு திரு. கே. ரமணி, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ரமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம், கோவை தாலூகா, தடாகம் ரோடு கேரளா எல்லையைப் பார்த்துச் செல்லும் சாலையில் சோமையன் பாளையத்தில் மின் விநியோக நிலையம் உள்ளது. அந்தமின் நிலையத்தில் வேலை செய்யும் உதவியாளர், ஒரு தொழிலாளர் சிவசாமி என்பவர். அவரை அதே ரோட்டில் பக்கத்தில் உள்ள இந்துஸ்தான் ரப்பர் கம்பெனியிலுள்ள ஒரு சூப்பர்வைசர் அவர்களும், பிரபு என்ற தொழிலாளியும் ஆக இரண்டு பேர்களும் ஒரு மோட்டார் சைக்கிளில் மாலையில் வந்து அங்கே மின்னிணைப்பு தகராறு ஆக இருக்கிறது என்று சொல்லி அந்தத் தொழிலாளியைக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். ஆனால் அந்தத் தொழிலாளி மறுபடியும் திரும்பவில்லை. 19-ஆம் தேதி இது நடைபெறுகிறது. இரவிலே திரும்பி வரவில்லை. மறுநாள் விடியற்காலை அந்தக் கம்பெனிக்குச் சற்றுத் தூரத்தில் அந்தத் தொழிலாளியின் பிணம் ரோட்டிலே கிடந்தது. அவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கழுத்திலே சங்கிலையைப் போட்டு இறுக்கி இருப்பதற்கான அடையாளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கண் விழியிலிருந்து ரத்தம் கசியும் அளவிற்கு மிகவும் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.

இன்னும் அந்தவட்டாரத்து மக்கள் மத்தியிலேசொல்லப்பட்டு வருகின்ற இன்னொரு பயங்கரமான விஷ்யம் என்ன வென்றால், அந்த ரப்பர் கம்பெனியில் ஆறு, ஏழு பேர்கள் மட்டுமே வேலை செய்கிறார்கள். அங்கு என்ன நடக்கிறது என்று அந்த வட்டாரத்து மக்கள் யாருக்கும் தெரியவில்லை. அது உண்மையாக ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய கம்பெனி

[திரு. கு. ரமணி] [1980 ஆகஸ்ட் 8

யாகத்தான் செயல்படுகிறதா அல்லது வேறு ஏதாவது சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு, ஊழல் நடவடிக்கைகளுக்காக அந்த ஸ்தலம் பயன்படுத்தப்படுகிறதா என்ற பெரும் சந்தேகம், பயம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. அந்தத் தொழிலாளியை மின்னிணைப்புச் சரிப்படுத்த உள்ளே கூட்டிச் சென்றார்கள். அங்கே நடக்கின்ற நிலைமைகளை இந்தத் தொழிலாளி புரிந்து கொண்டுவிட்டதால் இவரை வெளியிலே விட்டால் இவை எல்லாம் வெளியே வந்து விடும் என்ற காரணத்தால் அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும், கழுத்தை நெறித்துக் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் மின்சாரத் தொழிலாளர்களின் மத்தியிலேயும், சோமையன்பாளைய மக்கள் மத்தியிலும் மிகப் பெரிய பயங்கரமான நிலையை உருவாக்கியிருக்கிறது.

அடுத்தபடியாக, மேட்டுப்பாளையம் நகரத்தில் மின்வாரிய காரியாலயத்தில் வேலை செய்யக்கூடிய காசாளர் பத்திரப்பன் என்பவர் 17 ஆம் தேதி மாலை தன்னுடைய வேலை முடிந்த பிறகு வீட்டுக்குச் சென்று சர்க்கரை வாங்குவதற்காகக் குடும்பக் கார்டை எடுத்துக் கொண்டு, பக்கத்தில் இருக்கும்படியான இந்தச் சர்க்கரை விநியோகிக்கும் இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அப்படிப் போகும் பொழுது தேக்கம்பட்டி என்ற கிராமத்திற்கும், பக்கத்தில் உள்ள மற்றொரு கிராமத்திற்கும் மத்தியிலே பெரிய ரோட்டிலே அவரும் கொலை செய்யப்பட்டு அவருடைய பிணமும் ரோட்டிலே போடப்பட்டிருக்கிறது.

அந்தக் காசாளர் ஒரு தொழிலாளி. அவர் சர்க்கரை வாங்குவதற்காக கார்டை எடுத்துக் கொண்டு போனவர் வீட்டுக்கு வரவில்லை. அவர் பிணத்தைத்தான் ரோட்டிலே பார்க்க முடிந்தது. 17 ஆம் தேதியும், இன்னொரு கொலை 19 ஆம் தேதியும் ஆக இரண்டு நாட்களில் இரண்டு கொலை நடந்தது என்ற செய்தி அந்தப் பக்கத்திலுள்ள மின் வாரியத் தொழில் லாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய வேதனையையும், பயத்தையும் உண்டாக்கி இருக்கிறது. மின்சாரத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஏற்கனவே அவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டாத இடத்திலே சென்று, மின் இணைப்பை டிஸ்கனெட் செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு அவர்களைப் போகச் சொன்ன இடத்தில் அடிக்கப்படுகிறார்கள், சங்கடங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று பிராதுகளை அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளார்கள். இந்த நிலையில் பாடுபடுகின்ற அந்த மின்சாரத் தொழிலாளிகள், தமிழ்நாடு முழுவதும் மின் ஒளியைப் பரப்பி மக்களுக்குச் சேவை செய்யும் தொழிலாளிகள் உயிருக்குப் பாதுகாப்பு அற்ற நிலை, படு மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.



1980 ஆகஸ்ட் 8] [திரு. கு. ரமணி]

[முற்பகல் 10-40].

இந்தக் கோர கொலைகளுக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய போலீசார் திறமையாக, துரிதமாகச் செயல்பட வேண்டியது அவசியம். விஷயம் என்ன வந்திருக்கிறதென்றால் அந்த ரப்பர் கம்பெனியைச் சேர்ந்த ஒன்றிரண்டு பேர்களைக் கைது செய்து கொண்டு போய், அவர்களை ஜாமீனில் விட்டு விட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது சம்பந்தமாக உண்மை என்ன என்று தெரியவில்லை. வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், கொலை செய்யப்பட்ட தொழிலாளி துரைசாமியினுடைய போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட், பல நாட்களாகியும் அங்கே இருக்கிற பைக்காரா எஸ். இ.க்கு இன்னும் கிடைக்காத காரணத்தால், அவர் அதன் மீது தீவிர நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருந்து வருகிறது என்று தொழிற்சங்கச் சார்பில், தொழிலாளர்களுக்காக நாங்கள் ரெப்ரசென்ட் செய்த நேரத்தில், பதில் வருகிறது. ஆகவே, நிலைமைகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது என்று, தலைவர் அவர்களே, இதிலிருந்து, நீங்கள் புரிந்து கொள்ளலாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தையே தொடங்கிவிட்டீர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கு. ரமணி : இரண்டு கொலை, தலைவர் அவர்களே, அந்தப் பாதுகாப்பற்ற நிலை, அதுவும் மின் வாரிய ஊழியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருப்பது, நம் அனைவரையும் பாதிக்கக்கூடிய மிகவும் அபாயமான விஷயம் என்ற நிலையில், மிகவும் கடுமையான முறையில் உத்தரவிட்டு, இந்த கேஸ்களை, போலீசார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ரப்பர் கம்பெனியில் என்னதான் இரகசியம் இருக்கிறது என்று தெரியவில்லை, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றும் தெரியவில்லை. கள்ள நோட்டு அடிக்கப்படுகிறது, சீமைச் சாராயம் விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதை எல்லாம் கண்டுபிடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலில் உயிர் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியம். உயிர் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்பதால், இது பற்றி விவரமாக விவாதித்து ஒரு சீரான தீர்வு காண்பதற்காக, அவையின் இன்றைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : இதே விஷயம் குறித்து, நானும் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அறிவிப்பு கொடுத்திருப்பது 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு, திரு. ரமணி, 55-வது விதியின் கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானத்துக்கு அறிவிப்பு கொடுத்து, நிறைய சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) பாய்ண்ட் ஒன்றும் பாக்கி இருப்பதாகத் தெரியவில்லை. 55-வது விதியின் கீழ் கொடுக்கப்படும் ஒத்தி வைப்புத் தீர்மானத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதால், 54-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டது எடுத்துக் கொள்ளப்படாமல், 55-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டது எடுத்துக் கொள்ளப்பட்டது. உங்களுக்கும் சேர்த்து அவர் பேசியிருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே, நீங்கள் தயவு செய்து அமருங்கள்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் சாய்பாபா காலனியில் தமிழ் நாடு மின் வாரியத்தின் உதவியாளராக—அதாவது ஹெல்ப்பராக சிவசாமி பணியாற்றி வந்தார். 10—7—1980 காலை—அவர் தேதியை மாற்றிச் சொன்னார் என்று கருதுகிறேன்—கோயம் புத்தூர் தடாகம் சாலையில் மின் கம்பத்தின்கீழ் சிவசாமியின் சடலம் சிராய்ப்புகளுடன் காணப்பட்டது. இது குறித்து, அன்று 12 மணி அளவில் சோமையன்பாளையம் கிராம மணியம் கே. பி. குமாரசாமி என்பவர் தொண்டாமுத்தூர் காவல் நிலையத்துக்கு புகார் மனு கொடுத்தார். அதன் அடிப்படையில் சந்தேகத்துக்குரிய சாவு என்று காவல் துறையினரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அதே 10—7—1980 அன்று பிரேத விசாரணை நடைபெற்று 11—7—1980 அன்று பிரேத விசாரணையும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி பேராசிரியரால் நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு அந்தக் காரணம் என்ன என்பதை ஆராய்வதற்காக கெமிக்கல் அனாலிசஸ்-க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த விவரங்கள் வந்த உடன் புரபசர் ஆப் பாரன்சிக் மெடிசன், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, அவர்கள் அவர்களுடைய கருத்தைத் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல 10—7—1980 அன்று காலை மின் கம்பத்தின் கீழே சிவசாமி சடலம் இருந்திருக்கிறது. 9—7—1980 அன்று அவர் இந்துஸ்தான் ரப்பர் நிறுவனத்திற்கு மின்சாரத் தடை பற்றி கவனிக்கச் சென்றார் எனத் தெரிகிறது என்றத் தகவலும் என்னிடத்திலே இருக்கின்றது.

1980 ஆகஸ்ட் 8] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆகவே அந்த இந்துஸ்தான் ரப்பர் கம்பெனியில்—இது ரப்பர் கம்பெனியா அல்லது வேறு கம்பெனியா என்பதைப் பற்றி நன்றாக ஆராய்வோம். இதிலே என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் பிரச்சி னையை எழுப்பியிருக்கிறார். நிச்சயமாக காவல் துறை நடவடிக்கை எடுக்கிற போது, இது குறித்து அது கவனம் செலுத்தும் என்று நான் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள் கிறேன். அப்படி சிவசாமி, ஹெல்ப்பர் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று அந்த பாரன்சிக் புரபசரிட மிருந்து ரிப்போர்ட்டு வந்த பிறகு, அதன் பிறகுதான் எத்தகைய சாவு என்பது முடிவு செய்ய முடியும். அப்படி முடிவு செய்யப்பட்டு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போலத்தான், ஆர். பாதிரியப்பன் என்பவர் காசாள ராக மின் வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். 18–8–1980 அன்று தாசாம்பாளையம்–தெக்கம்பட்டி சாலை நெல்லி மலை அடிவாரத்தில் பாதிரியப்பனுடைய சடலம் கிடந்தது. அதை 9-30 மணி அளவில் திரு. கரையான் என்ற அந்த ஊரைச் சேர்ந்த அவரது சகோதரர் காவல் நிலையத்துக்குத் தகவல் தந்தார். காரமடைக் காவல் நிலையம் இது சம்பந்தமாக சந்தேகக் கொலை வழக்கு என்று பதிவு செய்தது. 18–7–1980 அன்று அதே நாள் அன்று பிரேத விசாரணை நடைபெற்றது. 19–7–1980 அன்று பிரேத பரிசோதனை மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை அதிகாரியால் நடத்தப் பட்டது. அந்தப் பரிசோதனை அறிக்கையில் இறந்த ஆர். பாதிரி யப்பன் கழுத்து நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்ப தாகத் தெரிவித்துள்ளார். ஆகையினாலே சந்தேகக் கொலை வழக்கு என்பது கொலை வழக்கு என்று ஆக்கப்பட்டு 21–7–1980 அன்று நஞ்சுண்டப்பன், பாதிரியப்பன், வெள்ளி யங்கிரி ஆகிய மூவரையும் காசம்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளார்கள்.

இந்த இரண்டு வழக்குகளும் தீவிரமாகப் புலன் விசாரணை யில் இருக்கின்றன. குற்றவாளிகளை தப்பவிடமாட்டோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு மின்சார வாரியத்தைச் சேர்ந்த தோழர்கள், தங்கள் கடமையைச் செய்கிறபோது அனைத்துப் பாதுகாப்பும் அரசால் தரப்படும் என்று நான் தெரிவித்துக் கொண்டு இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் இந்த அவையை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று பேரவைத் தலைவ அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10-50]

(ஆ) சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி ஆசிரிய, மாணவர்களது போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், சில கோரிக்கைகளை வலியுறுத்தி 26-7-1980 முதல் தொடர் உண்ணா விரதம் இருப்பதாலும் அதற்கு ஆதரவு தெரிவித்து வைஷ்ணவா, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து இருப்பதாலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு திருவாளர்கள் அ. இரகுமான்கான், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், கு. ரமணி, என். வரதராஜன், என்.எஸ்.வி. சித்தன், எம். அப்பாதுரை, எம். ஆறுமுகம், சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, என்.ஏ. பூங்காவனம், ப. நெடுமாறன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு அ. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அண்ணா நகரத்தில் இருக்கக்கூடிய கந்தசாமி நாயுடு கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் கடந்த 15 நாட்களாக உண்ணா விரதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதுவும் பல்கலைக்கழக மண்டபத்திற்கு முன்பாகவே அந்தத் தொடர் போராட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தருகின்ற வகையில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும் அந்தப் போராட்டத்தில் ஈடுட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப் போராட்டத்தை ஆதரித்து, சென்னை நகரத்தில் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட இருக்கிறார்கள். அனைத்துக் கல்லூரிகளும் சென்னை நகரத்தில் மூடப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இது காட்டுத்தீ போல் தமிழகத்தின் தலை நகரத்தில் மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் பரவி, தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் பரவி, அத்தனை கல்லூரிகளும் மூடப்படும் சூழ்நிலை இருக்கிறது.



1980 ஆகஸ்ட் 8] [திரு. அ. ரகுமான்கான்]

கந்தசாமி நாயுடு அறக்கட்டளை சார்பாக அந்தக் கல்லூரி 1967-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு 17 ஆண்டுகள் ஆகிவிட்டது. முதன் முதலில் அந்தக் கல்லூரி பச்சையப்பன் கல்லூரி கட்டிடத்தில் தான் துவக்கப்பட்டது. 1971-ம் ஆண்டுக்குப் பிறகு, அது அண்ணா நகருக்கு மாற்றப்பட்டது. அந்த அறக்கட்டளைக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. அது மட்டுமல்லாமல் அங்கே இருக்கும் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் நன்கொடை வசூல் செய்து, ஏறத்தாழ 31/2 லட்ச ரூபாய் அந்த அறக்கட்டளையிடத்தில் ஒப்படைத்து இருக்கிறார்கள். இத்தகைய நிலைமை இருந்தும், அந்தப் கல்லூரிக்கு என்று சொந்தமான கட்டிடம் கிடையாது. அந்தக் கல்லூரி தற்காலிகமாகக் கட்டப்பட்டுள்ள ஷெட்டில் தான் இயங்கிவருகிறது. கீற்றுக்கொட்டகைகளில் தான் வகுப்பறைகள் நடக்கின்றன. எந்த நேரத்தில் சரிந்து விழுமோ என்கிற வகையில் உள்ளன. விரிசல் விட்ட சுவர்கள், ஓட்டுப்போட்ட ஜன்னல்கள், முறிக்கப்பட்டு இருக்கிற கதவுகள், எந்த நேரத்தில் இரும்புக் கம்பிகள் விழுமோ என்கிற அபாய நிலை, இப்படிப்பட்ட பரிதாபத்திற்குரிய நிலையில் அந்தக் கந்தசாமி நாயுடு கல்லூரியின் கட்டிட அமைப்பு இருக்கிறது.

சொந்த நிலம், கட்டிடம் இருந்தால் தான் பல்கலைக் கழகம் ஒரு கல்லூரிக்கு பர்மனென்ட் அஃபிலியேஷன் வழங்கும். ஆனால் கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு பல நிபந்தனைகளின் பேரில் பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியிருக்கிறது. பல்கலைக் கழகம் போட்டு இருக்கும் அந்த சில நிபந்தனைகள் என்னவென்றால், 10 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கவேண்டும், பெரிய கட்டிடம், பக்கா பில்டிங் இருக்கவேண்டும், சோதனைக் கூடம் இருக்கவேண்டும், நூல் நிலையம் இருக்கவேண்டும், இவைகளெல்லாம் இருந்தால் தான், பல்கலைக்கழகம், அந்தக் கல்லூரிக்கு நிரந்தர அனுமதி கொடுக்கும். ஆனால், அந்த அறக்கட்டளை அந்த நிபந்தனைகளில் எதையுமே நிறைவேற்றவில்லை. இன்றைக்குள்ள நிலைமை என்ன என்று கேட்டால், அந்த அண்ணா நகரில் இருக்கக்கூடிய அந்த 10 ஏக்கர் 24 சென்ட் நிலம் அவுசிங் போர்டுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தை அந்தக் கல்லூரி மாத வாடகை 1,500-க்கு எடுத்துள்ளது. ஆகவே, தற்காலிக கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது.

ஒரு பக்கம், கல்லூரிக்கு நிரந்தர அங்கீகாரம் வேண்டும் என்று சொன்னால், 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து இருக்க வேண்டும் என்று பல்கலைக்கழகம் சொல்கிறது. எந்தப் பல்கலைக்கழகம் நம்முடைய பல்கலைக்கழகம். அதே நேரத்

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஆகஸ்ட் 8

தில் இந்தச் சர்க்காரின் கன்ட்ரோலில் இருக்கிற அவுசிங் போர்ட் அந்த 10 ஏக்கர் 24 சென்ட் நிலத்தில் 4 ஏக்கரை தனிப்பட்ட நபருக்கு விற்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிகச் சுருக்கமாக பேச வேண்டும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்தக் கல்லூரி சம்பந்தமாக பேசுவதை விட்டு, அவுசிங் போர்ட் விவகாரம் பேச ஆரம்பித்து விட்டீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தொடர்புடையதாகத்தான் சொல்கிறேன். அந்த நிலத்தை விற்கக்கூடாது என்று கந்தசாமி நாயுடு கல்லூரி அப்ஜெக்ஷன் செய்து இருக்கிறது. அது எங்களுக்கு வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அப்படியிருந்தும், அவுசிங் போர்ட் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், அந்த கல்லூரி அறக்கட்டளையையும் கலந்துபேசாமல் விற்பனை செய்து இருக்கிறது. இதிலே நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு அந்தக் கல்லூரி மூடப்படவேண்டிய நிலையில் இருக்கிறது; நடத்த முடியவில்லை. இன்னொன்று, அந்தக் கல்லூரிக்கு 10 ஏக்கர் 24 சென்ட் நிலம் இருந்து, பக்கா பில்டிங் இருந்தால்தான் பல்கலைக்கழகம் கல்லூரிக்கு அனுமதி வழங்க முடியும். ஆனால் அவுசிங் போர்டு, அனுமதி பெறாமல் அந்த நிலத்தை தனி நபருக்கு விற்றுவிட்டதால் சர்க்கார் இன்றைக்கு அந்த கல்லூரியை மூடக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதனால் இன்றைக்கு அந்த கல்லூரி ஆசிரியர்களும் வேலைக்குப்போக முடியவில்லை; மாணவர்களும் கல்லூரிக்குப் போகமுடியவில்லை; மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. இன்றைக்கு அந்த கல்லூரிக்கு 31/2 இலடசம் ரூபாய் ஆசிரியர்களும் மாணவர்களும் நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். அது என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரம் முடித்துக் கொண்டால் நான் பதில் சொல்லி விட்டு, மேலவைக்குச் செல்ல முடியும். அங்கே ஒரு கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, சீக்கிரமாக முடித்துக்கொண்டால் நல்லது.



980 ஆகஸ்ட் 8]

திரு. அ. ரகுமான்கான்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். (மணியடிக்கப்பட்டது). எப்படி சிக் இன்டஸ்ட்ரிசை சர்க்கார் எடுத்து நடத்துகிறதோ அதைப்போல இந்த கந்தசாமி நாயுடு அறக்கட்டளை கல்லூரியையும் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். (மணியடிக்கப்பட்டது) சிவகங்கையிலே ஒரு கல்லூரி இருக்கிறது. இது மாணவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் பிரச்சினையாக இருப்பதால் சர்க்கார் உடனடியாக இதிலே ஒரு முடிவுக்கு வரவேண்டியது பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையில் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்த கல்லூரி விவகாரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்லிய அத்தனைக் கருத்துக்களையும் நானும் சொன்னதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் நேரம் இல்லாததுதான். அவர் சொல்ல விட்டுப்போன ஒன்றிரண்டைப்பற்றி மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அமைச்சரும் மேலவவைக்குச் செல்ல அவசரமாக இருக்கிறார்கள்; நான் சுருக்கமாகச் சொல்லி, அமைச்சரையும் சீக்கிரமாக மேலவைக்கு அனுப்பிவிடலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு அந்தக் கல்லூரி நடத்த முடியாமல் போய்விட்டது. ஏற்கெனவே டெம்பரரியாக அனுமதி கொடுக்கப்பட்டது; இப்போது பெர்மனன்டாக கொடுப்பதில் சிக்கல் வந்திருக்கிறது. அதன் காரணமாக இன்று கல்லூரிக்கு மூடுவிழா வந்திருக்கிறது. அதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் நம்முடைய விதிகளுக்கு அப்பாற்பட்டு, நன்கொடை வசூல் செய்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது இந்தக் கல்லூரியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், ஆசிரியர்கள் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பல்வேறு கல்லூரிகளும் ஆதரவு தெரிவிக்க முடிவு எடுத்திருக்கின்றன. ஆகையால் அந்தக் கல்லூரிகளுக்கும் மூடுவிழா; மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். வெளியே இந்த மாதிரியான சூழ்நிலை இருப்பதால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பதட்டநிலை; அதனால் எங்களுக்கு பதட்ட நிலை; அதனால் அவைத்தலைவருக்கும் பதட்ட நிலை: அமைச்சருக்கும் பதட்ட நிலை வந்திருக்கிறது. அமைச்சர் மேலவைக்கு

செல்லவேண்டிய அவசரத்தில் இருப்பதால், இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி விவாதிக்க இதர அலுவல்களை ஒத்திவைத்து விட்டு போனால், அவருடைய பதட்ட நிலை முடிந்து வந்து பதில் சொல்ல வசதியாக இருக்கும். இதுபற்றி விவாதிக்க இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, வெளியூர்களிலே இருந்து வருகின்றவர்கள் இதுவரை சென்னையில் பார்க்க வேண்டிய இடங்கள் கலங்கரை விளக்கம், மிருக காட்சி சாலை, மியூசியம்—இப்படித்தான் இருந்தது. ஆனால் இப்போது சென்னை மாநகரில் அண்ணா நகரில் இருக்கிற கந்தசாமி நாயுடு கல்லூரியையும் பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் வேறு எங்கும் இந்த கந்தசாமி நாயுடு கல்லூரி மாதிரி இயங்கவில்லை. இந்தக் கல்லூரி இயங்கவில்லை, நடுங்கிக் கொண்டிருக்கிறது. 13 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இது தொடங்கப்பட்டும்கூட, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்ட மாதிரி சொந்த நிலம் இல்லை. சொந்தக் கட்டிடம் இல்லை. சொந்த நிலம் வாங்குவதற்கு முடியாமல் இருப்பதற்கான காரணம் பக்கத்திலே இருப்பது அரசாங்க நிலமாக இருந்து வருகிறது. இன்றைய தினம் இந்து பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தலைவரவர்களே, உங்கள் மூலமாக இதை அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். (பத்திரிகையை விரித்து காட்டினார்) இங்கே 4 குடிசைகள் உடைய படங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலே ஓராசிரியர் ஈராசிரியர் பள்ளிக்கூடத்திற்குக்கூட லாயக்கு இல்லாத கட்டிடங்களாக அவை இருக்கின்றன. ஒரு குடிசையில் ஓடு இருக்கிறது. இன்னும் இரண்டு குடிசைகளில் ஓடுகளே கிடையாது.

[முற்பகல் 11-00]

4-வது கட்டிடம் இடிந்து தரை மட்டமாக ஆகி இருக்கின்றது. ஆகவே அங்கே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களின் நிலை என்ன? மாணவர்களின் நிலை என்ன? எப்படி அரசாங்கம் இதை சகித்துக் கொண்டிருந்தது. கல்லூரிகளின் யூனிவர்சிட்டி கமிஷன் 1971-ம் ஆண்டு, 1973 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு, 1979 ஆம் ஆண்டு,1980 ஆம் ஆண்டு இப்படிப் பல முறை விஜயம் செய்திருந்தும் அந்தக் கல்லூரிக்கு எப்படி அனுமதி கொடுத்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கின்றது.

பேரவைத் தலைவரவர்களே, அந்த மாணவர்கள் இப்போது காற்றோட்ட வசதி கேட்கவில்லை. ஏர் கூலர் கேட்கவில்லை. ரேடியோ, டி.வி. கேட்கவில்லை. உட்காருவதற்கும் போதுமான பெஞ்சுகளும், ஒழுகாத கூரைகளும், இடியாத சுவர்களும்தான்





கேட்கிறார்கள். ஆரம்ப சுகாதார வசதிகள் கூட இல்லாமல் சென்னையிலே ஒரு கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் இது எப்படி அனுமதிக்கப்படுகின்றது என்பதைத் தாங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அங்கே பி. ஏ., பி.எஸ்ஸி., வகுப்புகள் தொடங்குவதற்கு அனுமதி கொடுத்த பிறகும் கட்டிடம் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. அந்தக் கல்லூரியை எப்படியாவது நடத்திவிடவேண்டும்என்பதற்காக மாணவர்களிடமிருந்து ஆசிரியர்கள் பல்வேறு சமயங்களில் நன்கொடை வசூலித்துக்கொடுத்திருக்கிறார்கள். ஒரு கல்லூரி தொடங்கவேண்டு என்றால் 20 ஏக்கர் நிலம் வேண்டும் என்றும், 5 இலட்சம் ரூபாய் நிதி வேண்டும் என்ற விதிகள் எல்லாம் இருந்தபோதிலும் அந்த கல்லூரி எப்படி அனுமதி பெற்றது, அது எப்படி இயங்கிகொண்டிருக்கின்றது என்பது ஆச்சரியமாக இருக்கின்றது.

மேலும் இன்றைக்கு இந்தப் பிரச்சினை கந்தசாமி நாயுடு கல்லூரி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று மட்டுமல்லாமல் சென்னையில் இருக்கின்ற ஜெயின் கல்லூரி, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி, விவேகானந்தர் கல்லூரி போன்ற கல்லூரிகளின் மாணவர்கள் எல்லாம் தொடர் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் அல்லாதவர்களும் பங்குபெற்றிருக்கிறார்கள். இவ்வாறு தொடர் உண்ணாவிரதம் இருக்கின்ற பிரச்சினை தமிழகம் பூராவும் பரவிவிடக்கூடாது. இங்கே இருக்கின்ற மாணவச் செல்வங்கள் எந்த விதமான பயமும் இல்லாமல் பாதுகாப்போடு படிக்கவேண்டும். கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும். ஆகவே இப்போது ஒரு பதட்டமான சூழ்நிலை அங்கே மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உருவாகக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தாலும் இதை விட வேறு முக்கியமான பிரச்சினை இந்தச் சபையிலே வேறு இருக்க முடியாது என்ற காரணத்தாலும் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்துவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் அவர்கள் கூறியது போன்று இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற கல்லூரிகள் அனைத்தும் மூடப்படக்கூடிய அளவுக்கு ஒரு மாபெரும் போராட்டம் வெடிக்கக்கூடிய அளவுக்கு கந்தசாமி நாயுடு கல்லூரி போராட்டம் நடந்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூறியதுபோன்று 1967-லே தொடங்கப்பட்டு 13 ஆண்டுக்காலமாக சொந்த இடம் கூட இல்லாமல் இந்தக் கல்லூரி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இந்தக் கல்லூரி நடப்பதற்குரிய உரிமையை வழங்கியவர்கள் யார் என்பதை நாம் அறியோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பல இலட்சக்கணக்கான

ரூபாய்களை நன்கொடையாக வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் படித்துக்கொடுக்கின்ற ஏறத்தாழ 60-க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் வேலைக்கு உத்தரவாதம் இல்லாத நிலை இருக்கின்றது. மேலும் படிக்கின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் படிப்பு பாதிக்கின்ற அளவுக்கு ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து இன்றைக்கு சென்னை நகரிலே இருக்கின்ற கல்லூரிகள் மட்டுமல்ல, சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இருக்கின்ற கல்லூரிகள் அனைத்திலும் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் போராடுவதற்குரிய திட்டத்தைத் தீட்டி இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிகிறேன். ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய பதட்டமான நிலையை விவாதிக்கவேண்டும் என்று சொன்னால் இந்தக் கல்லூரியைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் தான் உரிய நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இந்தக் கல்லூரிக்குச் சொந்தமான நிலங்கள், இந்தச் சென்னை நகரத்திலே பல இடங்களிலே இருக்கின்றன. இந்தக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்னால் பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டுக்கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கந்தசாமி நாயுடு கல்லூரி போராட்டம் பற்றிய பிரச்சினை. ஆகவே, * * * * * * * * * * பற்றிக் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன். அந்த நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னது மாதிரி, ஏதாவது வேண்டுமானால் பேசலாம். ஆனால் இதை எல்லாம் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, அதை ஒட்டி வருவதால் தான் அதைச் சுட்டிக் காட்டினேன். மேலும் இன்றைய தினம் கல்வி என்பது தமிழகம் முழுவதுமே ஒரு வியாபாரமாகத்தான் நடத்தப்படுகிறது. ஆகவே அதை தடுத்து நிறுத்தக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்கிற நேரத்தில், இந்த அரசு வெள்ளம் வருவதற்கு முன்னால் அணையிடக் கூடிய முறையில் செயல்பட வேண்டிய அரசாக இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில், இதைப் பற்றி மேலும் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமர்கிறேன். வணக்கம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா விவரங்களையும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த விவரங்களை நான் திருப்பிச் சொல்லவில்லை. ஆனாலும் சில விவரங்களை மாத்திரம் இந்த அவையின் முன்னாலே உங்கள் மூலமாக வைக்கிறேன்.

கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு ஏறத்தாழ 67 இலட்சம் ரூபாய்க்குச் சொத்து இருக்கிறது. இது பச்சையப்பாஸ் டிரஸ்ட் போர்டின் நிர்வாகத்திலே உள்ளது அந்த டிரஸ்டுக்கு 10 கோடி ரூபாய்க்குச் சொத்து இருக்கிறது. இவ்வளவு இருந்தும் கூட 1971-லே இருந்து இன்றைய தினம் 1980 வரை இந்த 10 ஆண்டு காலமாக, அந்தக் கல்லூரிக்கு ஒழுங்கான கட்டிடம் அல்லது இடம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

அது மட்டும் அல்ல, எனக்குத் தெரிந்த சில விவரங்களையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கல்லூரி இருக்கக்கூடிய இடம் ஹவுசிங் போர்டுக்குச் சொந்தமானது. அதைப்பற்றி எல்லாம் மற்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்களும், அதைப் போலவே அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும், கல்வி நிர்வாகத்தை அழைத்து, உட்கார்ந்து பேசி, அங்கு இருக்கக் கூடிய கட்டிடத்திற்கும், நிலத்திற்கும் மதிப்பு போட்டார்கள். 16 இலட்சம் பெறுமான நிலம், கட்டிடம் 2 இலட்சம் என்று கணக்கிட்டார்கள்.

இந்த 16 இலட்சம் ரூபாய்க்கு பதில் கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து 4 இலட்சம் ரூபாய் கொடுத்தால் கூட போதும் அந்த இடத்தை உங்களிடம் ஒப்படைக்கிறோம் என்று அரசாங்கத்தின் சார்பில் சொல்லி இருந்தும் கூட, அங்கே இருக்கக் கூடிய ஆசிரியர்களும், மாணவர்களும் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து, ஏறக்குறைய 3½ இலட்சம் ரூபாய் சேர்த்து நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். மேற்கொண்டு தேவை ½ இலட்சம் ரூபாய் தான். அதைக் கொடுத்து அந்த இடத்தையும், கட்டிடத்தையும் அந்த நிர்வாகம் தங்களுக்குச் சொந்தமாக்கியிருக்கலாம்.

ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனென்றால் அப்படிச் செய்யாமல் இருந்தால் தான், ஆசிரியர்களையும், மாணவர்களையும் வெளியே அனுப்பி பணம் வசூல் செய்ய முடியும் என்று எண்ணி சும்மா இருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்காக அந்த அறக்கட்டளையை பச்சையப்பன்

அவர்கள் ஏற்படுத்தினார்களோ அந்த நோக்கம் கொஞ்சமும் நிறைவேறவில்லை. இந்த ஒரு கல்லூரி மாத்திரம் அல்ல. அந்த நிர்வாகத்தில் இருக்கக்கூடிய மற்ற 5 கல்லூரிகளிலுமே இதே போன்ற நிலைமைதான் இருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. வள்ளல் பச்சையப்பன் அவர்கள் பெரிய தனவந்தர். அவருக்கு பிள்ளைகள் கிடையாது. அவர் இறக்கும்போது, தன்னுடைய சொத்தை அறக்கட்டளையாக ஆக்கி எழுதி வைத்தார்கள். ஆனால், சில ஸ்வீகாரப் புத்திரர்கள் கிளம்பி அந்த அறக்கட்டளையை எல்லாம் சீரழித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த டிரஸ்ட் பணத்தை எல்லாம் சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். டிரஸ்டைப் பற்றி எல்லாம் பேச வேண்டாம். மாணவர்களின் வேலை நிறுத்தத்தை நிறுத்த என்ன செய்யலாம் என்பதை மட்டும் பேசுங்கள். பச்சையப்பன் அவர்களுக்கு பிள்ளை இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஸ்வீகார புத்திரர்கள் நிறைய பேர்கள் வந்திருக்கிறார்கள். அதற்கு என்ன செய்வது ? (சிரிப்பு.)

* திரு. ப. நெடுமாறன் : நான் அதை ஒட்டித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நேற்று இந்த அவைக்கு வந்தபோது, '' அவையறிந்து '' என்று ஆரம்பிக்கப்பட்ட ஒரு குறளைச் சொன்னார்கள். அந்தக் குறளைத்தான் நான் இப்போது அவை முன் வைக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

இந்த கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு மட்டும் தனித்துப் பார்க்க வேண்டிய பிரச்னை அல்ல இது. அதனால் இந்த சீர்கேடுகளை நீக்க அந்த டிரஸ்டை அரசாங்கம் எடுத்துக் கொண்டால், அதை ஒரு ஒழுங்கின்கீழ் நிச்சயமாகக் கொண்டுவர முடியும் என்பதைச் சொல்லி, இந்த முக்கியமான பிரச்னையைப் பற்றி மேலும் விவாதிக்க இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோருகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் உள்ள சி. கந்தசாமி நாயுடு கல்லூரி சென்னை அண்ணா நகரில் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்தில்





1967-ல் இருந்து செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்டடமும் அதனைச் சேர்ந்த 10.24 ஏக்கர் நிலமும் இந்தக் கல்லூரியின் உபயோகத்தில் இருந்து வந்தது. அரசாங்கம் 1972-ல அந்த 10.24 ஏக்கர் நிலததை 14 இலட்சம் ரூபாய்க்கும், கட்டடங்களை 2 இலட்சம் ரூபாய்க்கும் பசசையப்பன் அறக்கட்டளைக்கு விற்க வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ஒரு ஆபர் செய்தது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது அரசாங்கம் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். 2—6—1972-லேயே பச்சையப்பன் அறக்கட்டளைக்கு அந்த நிலத்தை வாங்கிக் கொள்ளும்படி அரசு ஆபர் செய்தும் எந்தவிதமான ஒரு நடவடிக்கையும் பச்சையப்பன் அறக்கட்டளை மேற்கொள்ளவில்லை. அதிலும் அந்த 16 இலட்சம் ரூபாயில் 25 சதவீதம், அதாவது நான்கு இலட்சம் ரூபாய் மட்டும் முதலில் கட்டினால் போதும் என்றும், மீதியுள்ள 12 இலட்சம் ரூபாயை இருபது ஆண்டுக் காலத்தில் திருப்பித் தந்தால் போதும் என்ற சலுகையை வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அளித்தும்கூட அந்த இடத்தை வாங்குவதற்கு பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் உள்ள கந்தசாமி நாயுடு நிறுவனம் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பச்சையப்பன் அறக்கட்டளை, வீட்டுவசதி வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர வாட்கையைக்கூட முறையாகச் செலுத்தவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தின் கணக்குப்படி ரூ. 3,40,000 வாடகை 1978-ம் ஆண்டு மார்ச் திங்களில் நிலுவை இருந்ததாக தெரிய வந்துள்ளது. இது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றது. இதற்கிடையில் பச்சையப்பன் அறக்கட்டளை, கந்தசாமி நாயுடு கல்லூரிக்குத் தேவையான 10.24 ஏக்கர் நிலத்தை வாங்காத சூழ்நிலையில் இதில் சுமார் நான்கு ஏக்கர் நிலத்தை வள்ளியம்மாள் கல்வி நிறுவனம் என்னும் வேறு ஒரு கல்வி நிறுவனம் வீட்டுவசதி வாரியத்திடமிருந்து வாங்கியுள்ளது.

மேற்சொன்ன கந்தசாமி நாயுடு கல்லூரி பல்கலைக்கழக விதி முறைப்படி பத்து ஏக்கர் நிலத்தை 1967-ல் இருந்து இதுகாறும் வாங்காத காரணத்தால் சென்னைப் பல்கலைக் கழகம் இந்தக் கல்லூரியில் 1980—81 ஆம் ஆண்டில் முதல் பட்டப்படிப்பு வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டது. எனினும், மாணவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் அவர்கள் நலன் கருதி அரசு முயற்சியில் ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிக இணைப்பு தற்போது இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக்

கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரிக்கு நிரந்தர இணைப்பு அங்கீகாரம் தரவேண்டும் என்றும், நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகள் களையப்பட வேண்டுமென்றும் நிதி வசூல் கணக்கு, அதைப் பயன்படுத்தும் முறை ஆகியவை ஆயப்பட வேண்டும் என்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு தந்திருக்கிறார்கள். கிடைத்துள்ள தகவல்களின்படி பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத அனைவரும் கந்தசாமி நாயுடு கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகளுக்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையில் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

பச்சையப்பன் அறக்கட்டளை ஒரு தனியார் நிறுவனம். பச்சையப்பன் அறக்கட்டளையைச் சேர்ந்த ஆறு கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் அந்த அறக்கட்டளையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதிலுள்ள சட்டப் பிரச்னைகளை அரசு ஆராய்ந்து வருகிறது. சம்பந்தப்பட்ட கல்லூரி, மாணவர்கள், ஊழியர்கள் குறைகளை நிவர்த்தி செய்ய தொடர்ந்து நடவடிக்கைகளை அரசு எடுக்கும். ஆகவே, அவர்கள் போராட்டத்தை கைவிடுவார்கள் என்று அரசு நம்புகிறது. எனவே, இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவை இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: இந்த கந்தசாமி நாயுடு கல்லூரி டரஸ்ட், ஹௌசிங் போர்டு சம்மந்தமாக எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. அவர்கள் சொல்கிற மெயின் அப்ஜக்ஷன் என்னவென்றால், ஏற்கனவே பொஸஷன் என்ஜாய்மென்டில் உள்ளதை ஹௌசிங் போர்ட் இன்னொருநபருக்கு எப்படி விற்கலாம் என்று கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவர்கள் பொஸஷனில் இருக்கிறபோது வாடகை தரவேண்டும் என்று விதி இருக்கிறது. உடனடியாக அவர்கள் அதை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது இந்த அறக்கட்டளைக்கு லட்சக்கணக்கில் ரூபாய் இருக்கிறது என்று கூறினார்கள். லட்சக்கணக்கான ரூபாய் சொந்தக்காரர்களாக இருக்கிற அந்த அறக்கட்டளை அவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு, அந்த நிலத்தையும் வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு வாடகை தர மறுத்துக் கொண்டு, அதே நேரத்தில் நிலத்தை வாங்கவும் மறுத்துக் கொண்டு இருக்கும்போது உறுப்பினர் அவர்கள் அந்த அறக்



கட்டளைக்கு ஆதரவாகப் பேசுகிறார்களா? அந்த நிபந்தனையில் இருப்பதை மீறிய காரணத்தால் வாடகை தராமல் அனுபவித்துக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகிறபோது வீட்டு வசதி வாரியம் அந்த இழப்பை ஏற்காது என்ற காரணத்தால்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 6. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980–81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் ஒரு வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு, திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ள திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் இக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

## 7. கவன ஈர்ப்புகள்.

### (அ) தஞ்சையில் பூச்சிகள் தாக்கி குறுவை நடவு பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை நடவில் பூச்சி தாக்கி பயிர் அழிவது பற்றி, திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தஞ்சாவூர், மாவட்டத்தில் குறுவை நடவில் பூச்சி தாக்கி பயிர் அழிவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை'' மாண்புமிகு வேளாண்மைத்

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (1) குறுவை பயிர் நாற்றுப பரப்பு மற்றும் நடவு செய்த பரப்பு.—தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில், மொத்தம் 41,420 ஏக்கரில் குறுவை நாற்றங்கால் எழுப்பப்பட்டது. குறுவை நடவு துரிதமாக நடைபெற்று வருகின்றது. 31—7—1980 வரை 2,73,144 ஏக்கரில் நடவு முடிநதுள்ளது. மீதமுள்ள நாற்றங்காலைக் கொண்டு இன்னும் சுமார் 1,41,000 ஏக்கரில் நடவு செய்யலாம். இந்நடவு 15—8—1980-க்குள் முடிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) பூச்சி தாக்குதல்.—நாற்றங்காலிலும் குறுவை நடவு வயல்களிலும, ''பூசசி கண்காணிப்பு ஆய்வு முறை'' தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இம்முறையில பச்சை தத்துப் பூச்சி புகையான், இலைப்பேன் ஆகிய பூச்சிகள் மிகக் குறைந்த அளவில் காணப்பட்டது. ஒரு குறித்த நாற்றங்காலில் ஒரு சுழற்சி கணக்கில் 0-விலிருந்து ஐந்து பச்சை தத்துப் பூச்சி எண்ணிக்கை மட்டும்தான் காணப்பட்டது. நாவு வயலிலும், 20 குத்துக்கு சராசரியாக 1·1 முதல் 8·3 வரை பச்சை தத்துப்பூச்சிகள் காணப்பட்டன. சாதாரணமாக 20 குத்துக்கு 400 எண்ணிக்கை பச்சை தத்துப்பூச்சிகள் காணப்பட்டால்தான் தீங்கு விளைவிக்கக்கூடிய நிலை உள்ளது எனக் கொள்ளலாம். ஆகவே, ஆய்வு முறைக் கணக்குப்படி பச்சை தத்துப்பூச்சி மிகமிகக் குறைந்த அளவே உள்ளது. புகையான் பூச்சிகளின் எண்ணிக்கை சராசரியாக 20 குத்துக்கு 0·4 முதல் 0·5 வரைதான் காணப்பட்டது. சாதாரணமாக ஒரு குத்துக்கு 10 பூச்சிகள் இருந்தால்தான் பயிர்களுக்கு சேதம் விளைவிக்க வாய்ப்பு உண்டு. இலைப் பேன், குருத்துப் பூச்சி ஆகிய பூச்சிகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்த அளவாகவே காணப்பட்டது. தற்பொழுதுள்ள பருவ நிலையில் சாதாரணமாக தத்துப்பூச்சி, புகையான் ஆகிய பூச்சிகள் காணப்படுவது இயற்கையே. ஆனாலும், பூச்சி கண்காணிப்பு ஆய்வு கணக்குப்படி தற்சமயம் குறுவைப் பயிர் சேதம் அடையும் நிலையில் இல்லை.

(3) கையாளப்பட்ட தடுப்பு முறைகள்.—குறுவை நடவுக்கு முன்பே முறையான திட்டங்கள் தீட்டப்பட்டு கிராமங்களில் கருத்தரங்கு, கூட்டங்கள் நடத்தப்பட்டு பயிர் பாதுகாப்பு முறைகளின் அவசியத்தைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பல்





வேறு வகையான சுவரொட்டி, விளம்பர நோட்டீஸ் அடிக்கப் பட்டு மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்பட்டது. மேலும் அகில இந்திய வானொலி மூலமாகவும், செய்தித்தாள்களின் மூலமாகவும் அவ்வப்போழுது மேற்கொள்ளவேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து அறிவிப்புகள் வழங்கப்பட்டன. மேலும் விதை நேர்த்தி இயக்கங்கள் சிறப்பாக நடத்தப்பட்டு இது வரை 5·992 டன் விதை நேர்த்தி மருந்து விநியோகிக்கப் பட்டது. நாற்றங்காலில் அதிக அளவில் பூச்சி தாக்குதலை தவிர்க்க தக்க மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு குறித்த காலத்தில் மருந்து தெளிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டன. குருத்துப்பூச்சி, புகையான், இலை சுருட்டுப் புழு மற்றும் இதர பூச்சிகளை கட்டுப்படுத்த வழக்கமாக மேற் கொள்ளப்படும் ''பரந்த அளவில் ஒட்டுமொத்தமாக மருந்து தெளிக்கும் திட்டம்'' பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பொழுது நடப்பு ஆண்டிலும் விரிவாக செயல் படுத்தப்படும். பூச்சிகளின் தாக்குதலை சமாளிக்க தேவை யான பூச்சி மருந்துகள் விவசாய கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தஞ்சை மாவட்டத்தில் குறுவை நாற்றங்கால், மற்றும் குறுவை நடவு வயல்கள் நல்ல நிலையில் உள்ளன.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு ஆண்டு காலமாக கூட்டுறவு சங்கத்தின் மூலம் கடன் கொடுக்கவில்லை. இந்த ஆண்டு தண்ணீர் வந்தவுடன் குறுவை நாற்றை நட்டுவிட்டு, 30 நாட்கள், 40 நாட்கள், 25 நாட்கள் ஆகிவிட்டும், உரம் வாங்குவதற்கு கூட்டுறவு சங்கங்களிலே கடன் பெற முடியாத நிலையில், சிறு விவசாயிகள் நட்ட நடவுகள் எல்லாம், உரம் இல்லாமல் பூச்சி அடிக்கின்றன. இரண்டாவதாக, எலித் தொல்லைகள் அதிகமாக இருப்பதால், பயிர்கள் பாதிக்கப்படு கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கு இந்த பூச்சி மருந்துகளையெல்லாம் இனாமாக கொடுத்து, அந்தப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பரந்த அளவிலே பூச்சி மருந்துகள் தெளிப்பதற்கான திட்ட நடவடிக்கைகள் இருக்கின்றன. அதேபோல், விவசாய கிடங்குகளிலே உரம் வைக்கப்பட்டிருக்கிறது. நட்ட நாற்று கள் பாதுகாப்பாக இருக்கின்றன.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருந்துகள், உரங்கள் இருந்தாலும் சிறு விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கத்திலே கடன் கிடைக்காததால், அந்தப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு இந்த பூச்சி மருந்துகளை சிறு விவசாயிகளுக்கு இனாமாக வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது பயிர்கள் பாதுகாப்பாக இருக்கின்றன. அனைத்து நடவடிக்கைகளையும் ஒட்டுமொத்தமாக விவசாயத்துறை மேற்கொள்ளும்.

(முற்பகல் 11–20)

(ஆ) சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் சில குடியிருப்பில் உள்ளவர்களைக் காலி செய்தல்.

திரு. வெ. இராஜசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சேனியம்மன் கோயில் பகுதி குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் உள்ளவர்களைக் காலி செய்வதால் அவர்களிடையே நிலவும் அமைதியின்மை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் சென்னை நகரில்
பலஇடங்களில் குடியிருப்புக்கள் கட்டி குடிசைவாழ் மக்களைக் குடி
யமர்த்துகிறது. சேனியம்மன் கோவில் திட்டப்பகுதி டாக்டர்
இராதாகிருஷ்ண நகர் சட்ட மன்றத் தொகுதியில் அமைந்துள்ளது.
இப்பகுதியில் முதற்கட்டமாக 220 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக, 32
குடியிருப்புக்கள் கட்டப்பட்டு, குடிசைமாற்று வாரியத்தின் சட்ட
திட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கீடு ஆணைகள் வாரியத்தால் பிறப்
பிக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒதுக்கீட்டுதாரர்கள் குடியேறுவ
வதற்கு முன்னதாக, மழை, புயல் முதலான காரணங்களைக்
கொண்டு சில ஆக்கிரமிப்புதாரர்கள் இந்தக் குடியிருப்புக்களில்
தற்காலிகமாக புகுந்துகொண்டு வெளியேற மறுத்தனர். 1980
ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளன்று வாரியத்தின்
வெளியேற்றுப்பணி அலுவலர்கள் ( Enforcement wing )
அங்குச் சென்று ஆக்கிரமிப்பு செய்தவர்களை காலி செய்தனர்.





அவர்கள் மீண்டும் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளன்று குடியிருப்புகளுக்குள் புகுந்ததால் அவர்களை மீண்டும் வெளியேற்றி குடியிருப்புகளுக்குப் பூட்டுப்போட்டு சீல் வைக்கப் பட்டது. மேற்படி பூட்டுக்களை உடைத்தும் சீல்களை நீக்கியும் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2 ஆம் நாள் அன்று அவ்வாக்கிரமிப்புதாரர்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்தனர்.

2. முப்பத்திரண்டு (32) குடியிருப்புக்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களால் உள்ளே நுழைய முடியாமற் போயிற்று. நேரிடை முயற்சி பலனளிக்காமல் போனதால், 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 ஆம் நாள் அன்று காலை சுமார் 9 மணி அளவில் வாரியத்தின் ''வெளியேற்றுப் பணியினர்'' காவற்படையின் உதவியுடன் ஆக்கிரமிப்புத்தாரர்களை வெளியேற்றி, ஒதுக்கீடுதாரர்களின் வசம் குடியிருப்புக்களை ஒப்படைத்தனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

3. அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்தவர்களைக் குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றும் பணியில் ஈடுபட்ட அலுவலர்களது பணிக்கு ஊறு விளைவித்த திரு. இராஜசேகரன், எம். எல். ஏ., மற்றும் 34 நபர்களை எச். 3, தண்டையார்ப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 ஆம் நாள் அன்று காலை மணி 11–50க்கு கைது செய்து அவர்களை காவல் நிலையத்துக்கு அழைத்துச்சென்று, பிறகு பிற்பகல் 12–15க்கு ஜாமீனில் விடுதலை செய்தார். இ. பி. கோ. 143, 353 பிரிவுகளின்கீழ் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. தற்போது சேனியம்மன் கோவில் திட்டப்பகுதியில் அமைதி நிலவுவதாக குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அறியப்படுகிறது.

திரு. வெ. இராஜசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, சேனியம்மன் கோயில் திட்டப் பகுதியில் பத்து பிளாக்குகளில் 420 வீடுகள் இருக்கின்றன. மூன்று குடியிருப்புகள் தவிர, மற்றக் குடியிருப்புகளில் புயல், மழை, வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்கள் குடியேறியிருக்கிறார்கள். அதில் 32 குடியிருப்புகளில் உள்ளவர்களை குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் காவல் துறை அதிகாரிகளை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருப்பது போல் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் அன்று வாரியத்தின் என்போர்ஸ்மென்ட் விங் மூலம் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருப்பது போன்று அவர்கள் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் அன்று மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அதே போன்று 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2 ஆம் நாள் அன்று பூட்டுக்களை உடைத்து சீல்களை

நீக்கி அவர்கள் அந்தக் குடியிருப்புக்களுக்குள் புகவில்லை. அங்கே ஒரு ஏழை விதவை—ரோட்டில் காய்கறி விற்றுக் கொண்டிருப்பவர் ராணி அம்மாள்—உணவு அட்டையில் பெயர் இருக்கிறது. வாக்காளர் புத்தகத்தில் பெயர் இருக்கிறது. அதை போன்று கலப்புத் திருமணம் செய்து கொண்ட சந்திரன்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் விளக்கம் பெறும் வகையில் ஓரிரு கேள்விகளைக் கேட்கலாமே தவிர விவாதம் நடைபெறுவதுபோல் பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

திரு. வெ. இராஜசேகரன் : அவருடைய உணவு அட்டை எண். 055836. ஓட்டுச் சீட்டு எண். 6994 என்று இருக்கிறது. அவருக்கு அரிசன நலத் துறை சிபாரிசு செய்திருக்கிறது. அவரைக் கீழே இறக்கியிருக்கிறார்கள். தற்போது அரசு 32 பேர்களுக்கு அதை ஒதுக்கியிருக்கிறது. அந்த 32 பேர் பெயர்ப் பட்டியலை வெளியிடத் தயாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்த 32 பேர் பெயர்கள் வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு. வெ. இராஜசேகரன் : அந்த 32 பேரின் பெயர்ப் பட்டியலைத் தர மாட்டீர்கள் என்பது தரியும்மெ. ** ஏழைகள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்குக் கொடுப்பது பற்றி ஆட்சேபணை பண்ணத் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். இதிலே அலிகேஷன் கூடாது. கட்சியைக் குறிப்பிட்டுப் பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வெ. இராஜசேகரன் : அந்த வீடு கொடுக்கப்பட்டவர்களில் ஒருவர் பெஸ்ட் அண்டு கம்பெனியில் வேலை பார்க்கிறார், அவருடைய மனைவி இரயில்வே இலாகாவில் வேலை செய்கிறார். அவர்கள் வருமான வரி கட்டுகிறார்கள். ஜே. 23-ல் வீடு கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றிய விவரக் குறிப்புக்கள் எல்லாம் அமைச்சர் அவர்களிடத்தில் இருக்காது. டோர் நம்பர் எல்லாம் சொன்னால் அமைச்சர் அவர்களிடத்தில் விவரம் இருக்காது. ஆகவே, சுருக்கமாக கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டுமே தவிர நீண்ட உரையாகப் பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பட்டது.



123694

திரு. வெ. இராஜசேகரன் : குடிசை மாற்று வாரியத்தினுடைய உத்திரவிலே போடப்பட்டிருப்பு [illegible] நான் சொல்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : [illegible] அடுத்து 4ஆவது கவன ஈர்ப்பு, திரு. தாமரைக்கனி.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, கேள்வி கேட்கலாம் என்று விதி இருக்கிறது, ஆகவே, திரு. இராஜசேகரன் கேள்வி கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கேள்வி கேட்கவில்லை. விவாதத்தை ஆரம்பிக்கிறார். அதை ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். இப்போது தாங்கள் அதை அனுமதிக்கச் சொல்லி நான் அதற்கு யீல்ட் ஆவது என்றால் அது நன்றாக இல்லை. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக அரசின் மேலே குற்றச்சாட்டுக்களைச் சொல்ல அனுமதிக்க முடியாது. கேள்வி மட்டுமே கேட்கலாம்.

திரு. வெ. இராஜசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்விதான் கேட்கிறேன். டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலே குடிசை வாழ்வோர்களுக்கு டாக்டர் கலைஞர் ஆட்சிக்காலத்திலே புகைப்படம் கொடுக்கப்பட்டது, இப்போது ஏன் அது எடுக்கப்பட்டது ? அது மட்டுமல்ல...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால், ஜெனரல் டிஸ்கஷன் மாதிரி அதைப் பேசினால் அனுமதிக்க முடியாது, அமருங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் வெற்றி பெற்று வந்திருக்கிற இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியைப்பற்றியது. குடிசை மாற்று வாரியத்திலே உள்ள தகராறு பற்றிதான் கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஏற்கெனவே இருந்த கழக ஆட்சியிலே கொடுத்த புகைப்படங்கள் பற்றி கேட்டார்கள், அந்தப் புகைப்படங்கள் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அதை அனுமதிப்பதிலே தவறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலிலேயே அதைக் கேட்டிருந்தால் அனுமதித்திருக்கலாம். கேட்கவில்லை. அலிகேஷன், டிஸ்கஷன் செய்கிறார்.

[1980 ஆகஸ்ட் 8

திரு. ரா. உமாநாத் : தாங்கள் மறுபடியும் அவரை ஒரு கேள்வி போடுங்கள் என்று அனுமதித்தீர்கள். புகைப்படத்தை நீக்கியது உண்மையா என்று கேட்டார்கள். ஏன் நீக்கினீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, அந்தக் கேள்வியைத் தவிர, அவர் பேசிய மற்றவைகளை அவைக் குறிப் பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : திடீர் திடீரென்று எக்ஸ்பஞ்ச் செய்வது முறையல்ல. அன்றைக்குக்கூட அருமை நண்பர் திரு. மணிமாறன் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் நீண்ட நேரம் உரை யாற்றினார். அவைத் தலைவர் அப்போது இருந்தார்கள். அவரே கவனிக்காமல் இருந்துவிட்டு, என்ன, உரையே ஆற்று கிறீர்களே, கூடாது என்றார்கள். பிறகு கேள்வி கேட்கிறேன் என்று சொல்லி அவர் கேள்வி கேட்டார். நான் கூட குறுக் கிட்டுப் பேசினேன். கேள்வி கேட்டார். அதற்காக கேள்வியை மாத்திரம் வைத்துக்கொண்டு நண்பர் மணிமாறன் பேசியதையெல்லாம் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வில்லை. நீங்கள் இன்றைக்கு இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி உறுப்பினர் பேசியதை எடுத்துவிடுவது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அன்றைக்குப் பேசியதிலே அலிகேஷன் இருந்ததா ? இன்றைக்கு இதிலே அலி கேஷன் இருக்கிறது. திரும்பவும் சொல்கிறேன், அந்த கேள்வி மட்டும் இருக்கட்டும். மற்றவைகள் தேவையில்லை.

(முற்பகல் 11.30)

திரு. துரைமுருகன் : அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : அதை நீக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலே இருக்காது. இதை நான் மாற்ற மாட்டேன் ; மாற்ற வேண்டிய அவசியமில்லை. அதற்காகத்தான் முதலிலேயே விளக்கமாகச் சொன்னேன். அலிகேஷனைப்பற்றிப் பேசாதீர்கள், அதற்கு அமைச்சரிடம் மெட்டீரியல்ஸ் இருக்காது என்று சொன் னேன்.



1980 ஆகஸ்ட் 8]

திரு. அ. ரகுமான்கான் : அலிகேஷன் கேள்வியாகவும் இருக்கும். இரண்டு கேள்விகளிலே ஒன்று, அலிகேஷனாகவும் இருக்கலாம். உங்களை ஆதரித்தும் கேட்கலாம் ; குற்றச்சாட்டு சொல்லியும் கேட்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இராதாகிருஷ் ணன் நகர் தொகுதியிலே உள்ள குடிசை மாற்று வாரியம் குறித்து நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேள்வி கேட்கிற நேரத்திலே,—கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கடந்த சில நாட்க ளாக இங்கே அது சரியாகவோ, தவறாகவோ அனுமதித்துப் பழக்கப்பட்டுவிட்ட முறையில் ஒரு நீண்ட வாக்கியத் தொடரை அமைத்துக் கருத்துக்களைச் சொல்லி, குற்றச்சாட்டுக்களைக் கூறி கேள்வியைக் கேட்டு இவை இப்படி நடக்கலாமா என்று கேட் டார்கள். நம்முடைய துணைத் தலைவரவர்கள் கேள்வியை மட் டும் அனுமதித்துவிட்டு அவர் கூறிய மற்ற எல்லா வார்த்தைகளை யும் எக்ஸ்பஞ்ச் செய்துவிட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நானும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர் களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. உமா நாத் அவர்களும், மற்ற உறுப்பினர்களும், இதுவரையிலே அப்படி எக்ஸ்பஞ்ச் செய்யப்படவில்லை, எனவே, இதையும் அனுமதித்துவிட வேண்டுமென்ற முறையீட்டை அளித்திரு க்கிறோம். நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

THIRU A. RAHMANKHAN : These are not allegations, but questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குடிசை மாற்று வாரியம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதைப்பற்றிய தகவல் இருக்காது என்று துணை சபாநாயகர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அந்தக் கேள்வி யைத் தவிர மற்றவற்றை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று துணைத் தலைவரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் பேசும் பொழுது முழுவதையும் அனுமதித்து விட்டார். அப்பொழுது எக்ஸ்பஞ்ச் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கேள்வி கேட்க விடாமல் இருப்பது தப்பு என்று நான் சொன்ன பிறகு, கேள்வி

யைக் கேட்கச் சொல்லி, இந்த மாதிரி புகைப்படங்களை நீக்கியது சரியா என்ற கேள்வியை அவர் கேட்ட பிறகு, துணைத் தலைவரவர்கள் அந்தக் கேள்வியைத் தவிர பாக்கியை எல்லாம் நீக்கி விடுங்கள் என்று சொல்கிறார்கள்.

That means really cn merits அல்ல, கேள்வியைத் தவிர பாக்கியை எக்ஸ்பஞ்ச் செய்துவிடுங்கள் என்று சொல்வது அவருடைய Status—க்குச் சரியல்ல. பேசுவதற்கு அனுமதித்துவிட்டு விஷயம் வருகிற பொழுது, கேள்வியைத் தவிர பாக்கியை எல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்யச் சொல்கிறார்கள். So, that is not on merits அவ்வளவுதான்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவையிலே ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னது மாதிரி 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வருகின்றபொழுது, தெரிந்தோ, தெரியாமலோ, அவை அறிந்தோ அறியாமலோ அல்லது நான் அனுமதித்தோ எப்படியோ நீண்ட சொற்பொழிவாற்றுவதற்கு எல்லோரும் பழகி விட்டார்கள். எனவே, இப்பொழுது அதை நீக்க வேண்டிய தன்மை இல்லை என்பது மாதிரி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களின் பேச்சிலும், துணைத் தலைவரவர்கள் முதலில் அனுமதித்திருக்கிறார்கள்; அனுமதித்த பிறகு நீக்க வேண்டியது இல்லை என்ற கருத்துதான் தொனிக்கிறது. இதை அனுமதித்து விடுவதால் பெரிய ஆபத்து ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. அதனால் ஒன்றும் பிரச்சினை இல்லை. தெரிந்தோ, தெரியாமலோ, புரிந்தோ, புரியாமலோ, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இப்படி பேசுவது நடைமுறையிலே வந்திருக்கிறது. இனிமேல் இப்படி இருக்கக் கூடாது என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல், கேள்வியோடு விட்டு விடுங்கள். இப்பொழுது இருக்கிற பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல் குடிசை மாற்று வாரியத்தில், யார் யாருக்கு, அந்த 32 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன என்ற பட்டியலை, நான் அவருக்கு குடிசை மாற்று வாரியத்திலிருந்து பெற்றுத் தருகிறேன். அதற்குப் பிறகு ஏதாவது குறைபாடுகள் இருக்கிறதா என்பதைப் பார்த்து, என்னிடத்தில் வந்து விவாதித்தால், ஏதாவது குறைபாடுகள் இருந்தால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.





<u>திரு. வெ. இராஜசேகரன்</u> : ஒரே ஒரு கேள்வி ..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இரண்டு கேள்விகள்தான் அனுமதிக்கப்படும். நீங்கள் இரண்டு கேள்விகள் கேட்டு விட்டீர்கள். அதற்குமேல் அனுமதி கிடையாது.

## <u>(இ) கோவை வேளாண்மை பல்கலைக் கழக பணியாளர்கள் உண்ணாவிரதம்.</u>

<u>திரு. செ. இராமலிங்கம்</u> : தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகப் பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி காலவரம்பற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் கீழ்க்கண்ட ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பலவகைப் போராட்டத்தைத் துவக்குவதாக அப்பல்கலைக் கழக துணை வேந்தருக்கு அறிவித்துள்ளது.—

கோரிக்கை 1.—பணியாளர்களை நியமிக்கும் கொள்கையில் மாற்றம்.

கோரிக்கை 2.—வேளாண்மைப் பொறியியல் கல்லூரியில் பணி புரியும் இளநிலைப் பட்டம் பெற்ற உதவிப் பேராசிரியர்களுக்கு காலமுறை ஊதிய உயர்வு அளித்தல்.

கோரிக்கை 3.—வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 60 ஆக உயர்த்துதல்.

கோரிக்கை 4.—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆளுகைக் குழுவில் ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம்.

கோரிக்கை 5.—பதவி உயர்வு பெற்ற உதவிப் பேராசிரியர்கட்கு ரூ. 1,100ஐ அடிப்படை ஊதியமாக வழங்குதல்.

கோரிக்கை 6.— நூலகர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்கள்.

1980 ஆகஸ்ட் 8] [திரு. கா. காளிமுத்து]

கோரிக்கை 7.—டாக்டர் ( Ph.D. ) பட்டம் பெற்ற உதவிப் பேராசிரியர்களுக்கு ரூ. 100ஐ சிறப்பு ஊதியமாக தொடர்ந்து வழங்குதல்.

மேலே கூறப்பட்ட ஏழு கோரிக்கைகளில் முதல் நான்கு கோரிக்கைகளின் மீது, வேளாண்மைப் பல்கலைக் கழகம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே அக்கோரிக்கைகளின் மீது, அரசு தரப்பில் நடவடிக்கை ஏதும் எடுக்கத் தேவையில்லை. எஞ்சிய மூன்று கோரிக்கைகளும் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகளும் பின்வருமாறு :—

கோரிக்கை 5.—பதவி உயர்வு பெற்ற உதவிப் பேராசிரியர்களில் மொத்தம் 10 ஆண்டு காலம் பணியை முடித்தவர்களுக்கு ரூ. 700—40—1,100—50—1,600 என்ற பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதத்தில் ரூ. 1,100-ஐ 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் அடிப்படை ஊதியமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இத்துறை பரிசீலித்து வருகிறது.

கோரிக்கை 6.— நூலகர்களுக்கு பல்கலைக் கழக மானிய குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களை தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நூலகர்களுக்கும் 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் அமுலுக்குக் கொண்டு வருவதோடு அதனால் ஏற்படும் பண நன்மையை 1977-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இத்துறை பரிசீலித்து அதனை ஏற்றுக் கொண்டு அக்கோப்பினை கல்வித்துறையின் குறிப்புரைக்காக அனுப்பியது. அத்துறையின் நிர்வாகத்தின் கீழுள்ள பல்கலைக் கழகங்களான சென்னை, அண்ணாமலை மற்றும் மதுரை காமராஜ் முதலிய பல்கலைக் கழகங்களுடைய நூலகர்களின் ஊதியங்களை, பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களின் படி மாற்றி அமைக்கும் செயற் குறிப்பு அத்துறையினால் பரிசீலிக்கப்பட்டு அக்கருத்துருவின் மீது ஒரு நபர் ஊதியக் குழுவிற்கு பரிந்துரைத்து அனுப்பப்பட்டுள்ளது என்றும் அக்கருத்துருவின் மீது ஒரு நபர் குழு அளிக்கும் பரிந்துரையைப் பொறுத்து, அத்துறை முடிவெடுத்து வழங்கும் ஆணையே, தமிழ்நாடு வேளாண்மைப் பலகலைக் கழக நூலகர்களுக்கும் பொருந்தும் என்றும், கல்வித்துறை கூறியுள்ளது. ஆகவே, இக்கோரிக்கை மீது கல்வித்துறையினரால் எடுக்கப்படும் முடிவையும் பிறப்பிக்க இருக்கும் ஆணையையும், இத்துறை எதிர்நோக்கியுள்ளது.

கோரிக்கை 7.—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும், உதவிப் பேராசிரியர்களில் டாக்டர் ( Ph. D ) பட்டம் பெற்றவர்களுக்கு, மாதாந்திர சிறப்பு ஊதியமாக ரூ. 100ஐ வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இத்துறை பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் மேற்கூறிய கடைசி மூன்று கோரிக்கைகளும் இவ்வரசினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மீது கூடிய விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(ஈ) கைத்தறித் துணிகள் தேக்கத்தினால் நெசவாளர்கள் பாதிக்கப் பெற்றுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ''தமிழ் நாட்டில் ரூ. 32 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பது பற்றியும் அதனால் நெசவாளர்களிடையே ஏற்பட்டுள்ள வேலையின்மை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 1,052 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக கோ—ஆப்டெக்ஸ் எனப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகிறது. இது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக, 50 சதவிகிதத்தை கொள்முதல் செய்து தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் உள்ள 420 கிளை விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்து வருகிறது. சமீபத்தில் மத்திய அரசினால் கைத்தறித் துணிகளின் விற்பனையில் விழாக்காலங்களில் தள்ளுபடி அளிக்கும் முறை பின்வருமாறு மாற்றப்பட்டது. அதாவது கைத்தறித் துணிகளின் சில்லரை விற்பனை தள்ளுபடிக்கு பருத்தித் துணியைப் பொறுத்தவரை ஒரு பில்லுக்கு உச்சவரம்

பாக ரூ. 300 ஆகவும் படடுத் துணிகளுக்கு ரூ. 500 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தள்ளுபடிக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டதனால் கைத்தறித் துணிகளின் விற்பனை. தள்ளுபடி அளிக்கப்பட்ட விழாக்காலங்களில்கூட கடந்த ஆண்டில் இருந்ததைவிட இவ்வாண்டு குறைந்தது. கோ-ஆப்டெக்ஸ் 1978—79ஆம் ஆண்டில் ரூ. 27·51 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளையும் 1979—80ஆம் ஆண்டில் ரூ. 29·00 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளையும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலிருந்து கொள்முதல் செய்துள்ளது. அகில இந்திய கைத்தறி இருவார விழாவிற்குப்பின் தீபாவளி வரை உள்ள இடைப்பட்ட காலம் கைத்தறித் துணிகளின் விற்பனையில் ஒரு மந்த சீசன் என்று கூறலாம். இருப்பினும், பிரதம சங்கங்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசு, கோ-ஆப்டெக்சுக்கு வழிவகைக் கடனாக ரூ. 5 கோடி அளித்துள்ளது. இதைப் பயன்படுத்தி ரூ. 337·79 இலட்சம் அளவிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பாக்கியை பட்டுவாடா செய்துள்ளது. இதன் காரணமாக சங்கங்களின் பணப்புழக்கம் அதிகரித்து நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்க இயலும். பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சரக்கு இருப்பினைக் கொள்முதல் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சத்திற்கும் குறைவாக கைத்தறித் துணிகளை உற்பத்தி, செய்து விற்பனை செய்யும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து அவற்றின் முழு உற்பத்தியையும் மாநிலச் சங்கம் கொள்முதல் செய்து அச்சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதர பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வழக்கம்போல் 50 சதவீதம் உற்பத்தியை மாநிலச் சங்கம் கொள்முதல் செய்யும். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சரக்கு இருப்பு குறைவதனாலும் அவற்றுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை கிடைப்பதனாலும், அவை, அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பையும், ஊதியத்தையும் அளிக்க முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் துணிகள் தேங்கிக் கிடக்கும்போது, கூட்டுறவு சங்கங்களுக்குப் பண முடக்கம் ஏற்படுகிறது ; ஆதலால் நூல் எடுக்க முடியுவில்லை. ஆதலால், கூட்டுறவு சங்கங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளில், வியாபாரிகளுக்குக் கடன் கொடுப்பது மாதிரி, கூட்டுறவு சங்கங்களுக்கும் கோஆப்டெக்சிலிருந்து, கூட்டுறவு மில்களிலிருந்து, கடன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.





## 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) பல்கலைக்கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு பல்கலைக்கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் இன்ட்ரடக்ஷன் ஸ்டேஜிலேயே எதிர்க்கிறேன். பலமாக ஆட்சேபிக்கவும் செய்கிறேன். ஏனென்றால், தற்பொழுது தேர்வின்பொழுது, மாணவர்களை ஆசிரியர்கள் கண்காணிப்பது என்பது, ' வாலண்டரி ஆக்ட் '. ஆசிரியர்களிடத்தில் சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொண்டு செய்வார்கள். கண்காணிக்க வேண்டியதுதான், முறைப்படி செய்ய வேண்டியதுதான், அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அது வேண்டியதுதான், அவசியம். ஆனால், இன்று இந்தக் கண்காணிப்பு என்ற வேலை கட்டாயம் அல்ல —ஆசிரியருடைய பார்ட் ஆஃப் த ஜாப் அல்ல. ஆசிரியர்களுடைய சர்வீஸ் கண்டிஷன்ஸிலே அது

இல்லை. ஆனால், அது இந்தச் சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்படுகிறது—ஒருதலை பட்சமாக அது செய்யப்படுகிறது. தற்பொழுது, சட்டப்படி, கட்டாயமாகக் கிடையாது. ஒரு வாலண்டரி ஆக்டாக இருக்கக்கூடிய ஒன்றை, அந்த ரைட்டை, பறிக்கக்கூடிய நிலை இந்தச் சட்டத்தின் மூலம் வருகிறது. மறுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். வாலண்டரி ஆக்ட் ஆக இருப்பதால், மறுத்தால் நடவடிக்கை கிடையாது. சட்டத்தின் மூலம் என்று சொல்லும்போது, அது நடவடிக்கைக்கு உள்ளாகிறது.

[முற்பகல் 11-40]

It is serious. அதனாலே It is unconstitutional. ஒரு எக்சிஸ்டிங் ரைட்டைவாபஸ் வாங்குவதாகும்.

There cannot be two punishments for the same offence.

ஒரே குற்றத்திற்காக இரண்டு நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்று நம்முடைய கான்ஸ்டிடூஷனிலே சொல்லி இருக்கிறது. இந்தச் சட்டத்திலே, ஆசிரியர்கள் கண்காணிக்க மறுத்தால், 3 மாத சம்பளத்தைப் பிடிக்கலாம் என்று ஒரு தண்டனை இருக்கிறது. மற்றொன்று, இதன் தொடர்பாக மற்ற டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்கலாம். எனவே ஒரே குற்றத்திற்காக 2 நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்கிறபோது, இது பளிச்சென்று தெரியும் வகையில் அன்கான்ஸ்டிடூஷனாக இருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆக்டில் உள்ள ' ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சில் ' அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ''தங்களது குறைகள், கோரிக்கைகள் அல்லது ஏனைய காரணங்கள் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கத்தான் அவர்கள் மறுக்கிறார்கள் ''. அவர்களே குறைகள் இருக்கின்றன என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். அந்தக் குறைகளை களைவதற்குப் பதிலாக ஒரு மிஷினரியை உண்டாக்கி ஆசிரியர்களின் ஒற்றுமைக்கு அஸ்திவாரம் இல்லாமல் செய்வதற்கும், இருக்கிற ரைட்டை வாபஸ் வாங்குவதும் அன்கான்ஸ்டிடூஷனல் ஆகும். தற்போது ஆசிரியர்களின் உரிமைகளுக்காகப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இது அரசியல் நோக்கத்தோடு போடப்பட்ட சட்டம் என்கின்ற காரணத்தாலே இதை இன்ட்ரடூஸ் பண்ணக்கூடிய நேரத்திலேயே வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக வாபஸ் பெறுவார்கள் என்று நம்புகிறேன். ஆசிரியர்களின் மத்தியிலே இது கெட்ட எண்ணத்தை உண்டாக்கும் என்ற காரணத்திற்காக நான் இதை ஆட்சேபிக்கிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுபற்றி கன்சிடரேஷன் ஸ்டேஜிலே ஆராயலாம். தற்போது இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: '' 1980 ஆம் ஆண்டு பல்கலைக்கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, '' 1980 ஆம் ஆண்டு பல்கலைக் கழக கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்ட முன்வடிவை '' பேரவை மூன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1980 ஆகஸ்ட் 8

(ஈ) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இப்போது அறிமுகம் செய்யப்படும் இந்தச் சட்டம் உண்மையிலேயே பாராட்டத் தகுந்ததாகும். 14 வருடத்திற்கு லைப் சென்டன்ஸ் பெற்ற கைதிகள் 14 வருடம் முடிவதற்குள்ளாகவே அவர்களை விடுதலை செய்யக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டு டெசிஷன் இருக்கிறது. அது மத்திய அரசாங்கத்தின் டைரக்டிவ் ஆகத்தான் இருக்கும். ஆனால் 14 வருடம் முடிவதற்குள்ளாகவே அவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் அதிகாரம் மேற்கொள்வது நல்ல சட்டம். இதனால் ஏராளமான கைதிகள் ஹங்கர் ஸ்டிரைக்கில் இருக்கின்ற நிலை எல்லாம் இருக்கிறது. எனவே இந்த செஷனிலேயே தயவு செய்து அதை பாஸ் பண்ண வேண்டும். நாங்கள் வேண்டுமானாலும் எல்லாரும் ஒரு மணி நேரம், 2 மணி நேரம் எக்ஸ்டிராவாக இருக்கத்தயார். கைதிகள் கவலையோடு இருக்கிறார்கள். அதை இந்த செஷனிலேயே பாஸ் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



1980 ஆகஸ்ட் 8]

6. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் இசைவு – நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) 2 ஆவது திருத்தச் சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/80) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் — தொடர்ச்சி.

(உ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1980).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1980) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

Thiru V. KRISHNAMOORTHY : Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980 (L.A. Bill No. 26 of 1980) be referred to a Select Committee of the House consisting of 15 Members. (names of Members to be furnished later)".

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், இல. பலராமன் ஆகிய இருவரும்கொடுத்துள்ள திருத்தங்கள் ஏற்கனவே முன் மொழியப்பட்ட திருத்தம் போலவே இருப்பதால் எடுத்துக் கொள்ளப் பெறவில்லை.

*1980, ஜூலை 14-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதைப் பற்றி இந்த அவையில் இதற்கு முன்னாலே பல முறை சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றபட்டு இருக்கின்றன. இன்றைக்கு மீண்டும் இந்தமாமன்றத்தின்முன் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதைப் பற்றிய ஒரு சட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்து இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எத்தனை முறை அந்தச் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வந்தாலும், மக்களின் எண்ணங்களை மக்கள் மன்றங்களின் எண்ணங்களை அது நிறைவேற்றவில்லை என்ற காரணத்தால் தான் இன்றைக்கு மீண்டும் அதன் மீதான ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது, என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

முதல் முதலாகக் கொண்டு வருகிறபோது, 1960ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, 1961ஆம் ஆண்டில் அது நிறைவேற்றப் படுகிறபோது, எந்தச் சூழ்நிலையில் அதைக் கொண்டு வந்தார்கள். எந்தச் சூழ்நிலையில் அது நிறைவேறியது, மக்கள் மன்றம் அதை எவ்வாறு ஏற்றுக் கொண்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1960ஆம் ஆண்டில் கொண்டு வருகிறபோது, பிளானிங் கமிஷன் நிலச்சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிற போது, அப்போது இருந்த அரசு வெளியே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, 60ஆம் ஆண்டிலே கொண்டு வந்து, அதை 61ஆம் ஆண்டிலே நிறைவேற்றுகிறார்கள். என்று சொன்னால், 62-ல் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். 62-லே பொதுத் தேர்தல் வருகிறது. வெளியே பல வாக்குறுதிகளைக் கொடுத்து இருக்கிறோம். வாக்குறுதி கொடுத்த பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக அவசர அவசரமாக கொண்டு வந்த மாதிரி அந்தச் சட்டம் அன்றைக்கு வந்தது. அந்தச் சட்டத்தைப் பற்றி இன்னும் சொல்லவேண்டுமானால், நான் அடிக்கிறபடி அடிக்கிறேன், நீ அழுகிற மாதிரி நடி என்று சொல்வது மாதிரி இருந்தது. ஆனால் அடிக்கிறபோது வலிக்கவில்லை என்பதும், அடி அவர்களுக்கு விழாமல் இருந்தது என்பதும், அழுகிறபோது கண்ணீர், வரவில்லை என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவைகளை எண்ணிப் பார்த்துத்தான் அப்போது பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். பண்ணையார் பாதுகாப்புச் சட்டம் வந்தது. அதைப் படிக்கிறபோது அது மிராசுதார் பாதுகாப்புச் சட்டம் மாதிரி இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தோம்.





அந்த எண்ணத்தைக் கருத்தில் கொண்டு தான் இன்றைக்கு மக்கள் மன்றம் என்ன எண்ணிக் இருக்கிறது, மக்கள் மன்றத்தில் எப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரவேண்டும் என்று பார்த்து, இன்றைக்கு இருக்கும் அரசு, அண்ணாவின் அரசு, தீர யோசித்து இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்து இருக்கிறது என்பதை நான் உங்களிடத்தில் சொல்வேன். சென்ற மாதம் 16 ஆம் தேதி இந்தச் சட்டத்தை நான் முன்மொழிகிறபோது இங்கே ஒன்றைக் குறிப்பிட்டேன். நாங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது இன்றைக்கு இருக்கும் மக்களின் எண்ணத்தை அறிந்து அதற்கு ஏற்றவாறு சட்டமுன்வடிவு கொண்டு வந்து இருக்கிறோம்.

[முற்பகல் 11-50]

ஆனால் கொண்டு வந்திருக்கிற சட்டத்தில் இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறீர்கள் ; அப்போது நீங்கள் சொன்னால் அதில் ஏதாவது அவசர அவசியத் திருத்தம் தேவை என்றால் அதை மாற்றுவதற்கு சங்கடமாக இருக்கும். ஆனால் இங்கே இருக்கிற உறுப்பினர்கள்எல்லாருடைய எண்ணங்களையும் தெரிந்து கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது, நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன். தயாராக இருக்கிறேன் என்று சொன்னால் 234 உறுப்பினர்களும் வந்து பேசுவதற்கு முடியாது என்று சொல்லி, ஒவ்வொரு கட்சியிலிருந்தும் 3 பேர்கள் என்ற முறையில் வந்து உங்களுடைய கட்சியின் எண்ணங்களைச் சொல்லலாம். சட்டத்தில் குறைபாடு இருந்தால் திருத்திக் கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று 17–7–1980 அன்று இந்த அமைச்சரவையின் சார்பில் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அந்த வேண்டுகோளுக்கு இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் யாரும் இன்னின்ன குறைபாடு இருக்கிறது என்று சொல்லவில்லை. சொல்லவில்லை என்றால் அதற்குக் காரணம்.......

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே , 17–7–1980-ல் வேண்டுகோள் விடுத்தேன் ; 234 உறுப்பினர்களும் வந்து கருத்துக்களைச் சொல்ல இயலாது என்றும் கட்சிக்கு 3 பேர் வந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்றும் கூறினேன் ; அப்படி யாரும் அவர்களுடைய கருத்துக்களை அளிக்கவில்லை என்றும், வாதிக்கவில்லை என்றும் குறைபட்டுக் கொண்டார்கள். 17–7–1980 அன்றைக்கும் இன்றைக்கும் இடையே இவ்வளவு நாள் இருக்கும்போது அவர் அறிவித்த அந்த நேரத்திலேயே ஒரு கட்சிக்கு 3 பேர் கொண்ட குழுவைப் போட்டு, அந்தக் குழுவிற்கு அவரே தலைவராக இருந்து, அந்தக் குழுவிலே விவா

த்து, அங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின்தொகுப்பை வெளியிட்டிருக்கலாம் அல்லவா? அதை ஏன் செய்யவில்லை?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவரவர்களே, யாரும் வரவில்லை என்று குறையாக நான் சொல்லவில்லை வரவில்லை என்றால் அதிலே இரண்டு கருத்து இருக்கிறது. வந்து கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் இருக்கலாம் என்பது ஒன்று. இன்னொன்று, இந்த அரசு இப்போது செய்யப்பட்ட திருத்தத்தை நல்லமுறையில்தான் கொண்டு வந்திருக்கும் என்று அரசின் மீது அவர்களுக்கு இருக்கிற நம்பிக்கை. அது அல்லாமல் சொன்னால் எங்கே கேட்கப் போகிறார்கள் என்ற அலட்சியத்தால் வரவில்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னால் நிச்சயமாகக் கேட்போம் ; அலட்சியப்படுத்த மாட்டோம். சொன்னாலும், சொல்லா விட்டாலும் நல்லமுறையிலேதான் கொண்டு வந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் வராமல் இருந்திருக்கலாம். அவர்களுடைய அந்த நம்பிக்கைக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளத்தான் நான் விரும்புகிறேன்.

<u>டாக்டர் மு. கருணாநிதி :</u> நான் கேட்பதை மிகத் திறமையாக அமைச்சரவர்கள் திசை திருப்பி, வேறு ஒரு பதிலை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அறிவித்தது 17—7—1980 அன்று. கட்சிக்கு 3 பேர்களாக வந்து கருத்துக்களைச் சொல்லலாம் என்று குறிப்பிட்டீர்கள். இன்றைக்கு நீங்கள் எதிர்பார்ப்பதைப் போல கருத்து மாறுபாடு இல்லாமல் இல்லை. இந்த சட்டத்தினுடைய நோக்கத்தில், இந்த மசோதாவினுடைய நோக்கத்தில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இது நிறைவேற்றப்படுகிற நேரத்தில், நடைமுறைக்கு வருகிற நேரத்தில் இருக்கிற சிக்கலில் சில கருத்து மாறுபாடு இருக்கலாம். நான் கேட்பது இடையிலே 20 நாள் இருக்கிறது. 3, 3 பேர்களாக வந்து கருத்தைச் சொல்லுங்கள் என்று சொன்ன அமைச்சர் ஒரு குழுவை அமைத்து விவாதித்து இந்த 20 நாட்களில் ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கலாமே. அதை ஏன் செய்யவில்லை?

<u>மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :</u> நான் இந்த அவை முன்னால் அமைச்சரவையின் சார்பில் சொல்வது. இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கை வைத்து, நல்ல சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று நம்பிக்கை வைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் யாரையும் குறைகூறுவதற்காக அல்ல.

<u>திரு வி. கிருஷ்ணமூர்த்தி :</u> சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதை இந்த சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்த வேண்டும் ; விவாதிக்க



வேண்டும் ; பின்னர் நிறைவேற்றப்படும். அல்லது விவாதித்து நிறைவேற்றவில்லை என்றால் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அதுதான் இதுவரை நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இந்த மன்றத்தினுடைய உரிமையை அமைச்சருடைய அறையில் கொண்டு வைப்பது விரும்பத்தக்கதல்ல. நாம் ஒரு சட்டத்தின்மீது டிஸ்கஸ் பண்ண வேண்டுமானால் இந்த மன்றத்தில் பண்ணவேண்டும் ; இல்லை என்றால் கமிட்டியில் டிஸ்கஸ் பண்ண வேண்டும். ' காப்பி டேபிளில், விவாதிப்பது போல இந்த மன்றத்தினுடைய விவாதத்தை எந்த இடத்தில் வேண்டுமானாலும் நடத்தலாம் என்பது முடியாத ஒன்று. அமைச்சர் ஃப்ரன்ட்லியாகச் சொல்கிறார் என்றால் ஃப்ரன்ட்லியாக லாபியில் உட்கார்ந்து எவ்வளவோ சொல்கிறோம். But that cannot be the basis for discussion. They cannot form part of the proceedings of the House.

ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து இன்ட்ரட்யூஸ் பண்ணும் போது there are various sequences. கமிட்டிக்கு ரெஃபர் பண்ணலாம். வெளியிலே சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் மெம்பர்களுக்கு மட்டும் சர்குலேட் பண்ணுகிறோம். அப்படியல்லாமல் என்னிடம் தனியாக வந்து பேசுங்கள் என்பது தனிப்பட்ட ஒரு அறிக்கையை எடுத்துக்கொண்டு போவது மாதிரி அர்த்தமாகின்றது. அந்த முறை தவறு. ஆகவே எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி வேண்டுமானால் ஒரு கமிட்டி போட்டு அதிலே ஒவ்வொரு கட்சிக்காரர்களும் கலந்துகொண்டு டிஸ்கஸ் செய்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும். It will form part of the proceedings of the House. அப்படி அல்லாமல் மந்திரியின் அறையிலே வந்து டிஸ்கஸ் செய்வது என்பது That is not proceedings of the House. It cannot form part of the proceedings of the House.

இந்த அவையின் உரிமையைப் பறிக்கின்ற வகையிலே ஒரு அறிக்கையை எடுத்துக்கொண்டு அமைச்சரவையின் அறையிலே சென்று பேசுவது கூடாது. ஆகவே அருமை நண்பர் திரு. சோமசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி மற்ற அமைச்சர்களாவது அந்த முறையைப் பின்பற்றாமல் இப்பதற்குரிய வழியிலே தாங்கள் டைரக்ஷன்ஸ் கொடுக்கவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவரவர்களே. நான் சொன்னதை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்களோ என்று நான் கருதுகிறேன். இந்த அவையை அவமதிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு நல்ல எண்ணத்திலேதான் நான் இதைச் சொன்னேன். ஆகவே ஒரு நல்ல எண்ணத்தைச் சொல்கின்றபோது அதற்கு சட்டத்திலே.

விதிகளிலே இடம் இருக்கின்றதா என்று பார்க்கக்கூடாது. மேலும் நீங்கள் எல்லாம் சொல்லாதது எங்கள் மீது நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கை காரணமாகத்தானே வேறு காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>டாக்டர் மு. கருணாநிதி :</u> நாங்கள் எல்லாம் சொல்லாதது உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படை என்று தாங்கள் எண்ணிக்கொள்வது தவறு. எங்களை எல்லாம் சொல்ல வைப்பதற்கான ஒரு வாய்ப்பை நீங்கள் எங்களுக்கு உருவாக்கித் தரவில்லை. இடையிலே உள்ள 20 நாட்களில்—20 நாட்களும் அல்ல 2 நாளோ 3 நாளோ நீங்கள் கேபினட் ரூமிலேயோ அல்லது மாநாடு கூட்டுவதற்காக கட்டப்பட்டிருக்கின்ற இடத்திலேயோ எல்லா கட்சிகளிலிருந்தும் 3, 3 பேரை அழைத்து வைத்து அவ்வாறு அந்தக் குழுவின் மூலமாக விவாதித்திருக்கலாம். அப்படிப்பட்ட வாய்ப்பை நீங்கள் எங்களுக்கு அளிக்கவில்லை. என்பதுதான் எங்களுடைய குறை.

<u>மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவரவர்களே, இதை வேண்டுமென்றே செய்யவில்லை என்று சொல்லி என்னுடைய பேச்சைத் தொடரலாம் என்று நினைக்கிறேன்.

[நண்பகல் 12–00]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அவர்கள் சொல்கிறார்கள். நம் இலட்சியம் எல்லாம் இது ரவலாகப் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும். ஒரு கையில் இருக்கக்கூடாது என்பது தான் நம் லட்சியம். ஆகவே இதை முன்கூட்டியே தேதி போடவேண்டும். ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் போட வேண்டும் என்றெல்லாம் பலர் பேசினார்கள். நிலத்தை பிரிக்க வேண்டும். பிரித்தாகிவிட்டது. அதற்கு நாம் வருத்தப்படத் தேவையில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேறு ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். இந்த மசோதாவின் அடிப்படை நோக்கம்—இங்கேதான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்—ஒருவர் கையில் ஏராளமான நிலம் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது என்பது தான். ஒருவர் கையில் அதிகமான நிலம் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது தான், விற்றுவிட்டால் அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு பொறுப்பு குறைந்துவிட்டது. அதேநேரத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டுவருகிறது. மசோதா வருவதற்கு முன்னாலேயே விற்றுவிட்டால் அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு பொறுப்பு குறைந்துவிட்டது. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் எடுத்து காம்பன்சேஷன் கொடுக்கவேண்டிய ஒரு சங்கடமான நிலை அரசாங்கத்திற்கு உண்டாகும் என்று





நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த சாட்சியை நான் உங்களிடம் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த மசோதாவின் நோக்கம் நிலம் ஓரிடத்தில் குவிந்திருக்கக் கூடாது ; அதை எங்கே வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம், அதற்காக ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் போடவேண்டியதில்லை. என்று சொல்கிறபோது ஐந்தாண்டுகளுக்கு முன்னால் இது அமலுக்கு கொண்டு வருவது என்றால் அது அசாத்தியமான காரியம் என்று அப்போது சொன்னேன்.

இந்தச் சட்டத்தின் படி நிலத்தை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்பது முக்கிய நோக்கமல்ல. இந்தச் சட்டத்தால் நிலத்தை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்ற நோக்கமில்லை. இதன் முக்கியமான நோக்கம், concentration of land in a few hands —நிலத்தை எடுத்து எல்லோருக்கும் கொடுக்கவேண்டியதில்லை—ஆனால், இது ஒரேயிடத்தில் குவியக் கூடாது என்று தான் முன்னாள் முதல் அமைச்சர் திரு பக்தவச்சலம் அவர்களும் திரு மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

இதிலிருந்து முறையற்ற முறையில், தகுதியற்ற முறையில் நிலங்கள் மாறி இருக்கின்றன என்பதற்குச் சாட்சி அவர்களே என்பதற்கு சாட்சியங்களை உங்கள் முன் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.

அந்த நிலங்கள் எல்லாம் மாறியிருக்கிறது என்று நான் சொல்லிவிட்டு பலபேர்கள் அதை எடுத்துக்கொள்ளாமல் என்று சொல்லிவிட்ட பிறகு அப்படி நடந்ததா இல்லையா என்பதற்குக் கூட சாட்சியத்தை உங்கள் முன் கொண்டுவர நினைக்கிறேன்.

நிலங்கள் முறையற்ற முறையில் மாறியிருக்கிறது. அதற்கு இரண்டு சாட்சிகள். ஆனால் மாறியதை 'ஆம்' என்று ஏற்றுக்கொள்கிற அளவிற்கு ஒரு சாட்சி சொல்ல வேண்டுமானால் அப்போது இங்கே திரு வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இங்கே பேசுகிறபோது, கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் ஒன்றைச்சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையிலும் இந்த மசோதா சட்டமானால் எனக்கு கொஞ்சமும் பாதகம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய நிலமெல்லாம் உச்சவரம்பிற்குள்ளே ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் வந்துவிட்டது என்று

சொன்னார்கள். ஆனால் சொல்கிறார். முதலில் சொல்கிற போது திரு மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும் திரு பக்த வத்சலம் அவர்களும், நிலங்களை யார் வேண்டுமானாலும் பிரித் துக்கொள்ளலாம், அதை நாம் எடுத்துக்கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது நடந்ததா இல்லையா என்பதற்கு உதாரணம் திரு. வி. கே. ராமசாமி முதலியார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல் இன்னும் சொல்லவேண்டுமானால் இப்படி பிரித்துக் கொடுப்பது சரியா இல்லையா என்று இங்கே வாதம் வந்து அதற்குப் பிறகு இது செலக்ட் கமிட்டிக்குச் சென்று தஞ்சை செல்கிறபோது அங்கே கேள்வி கேட்டு அந்தக் கேள்விக் குப் பதில் சொல்கிறபோது சொல்லி யிருக்கிறார்கள். திரு கே ஆர். நல்லசிவம் கேள்வி கேட்கிறார். துரைசாமி ஐயர் சாட்சி சொல்கிறார். That the land had already been fragmented and hence, ceiling was not at all necessary. இதற்கு முன்பே நிலம் எல்லாம் எங்கேயோ போய்விட்டது. ஆகவே இதில் உச்சவரம்பு தேவை இல்லை என்று அவர்கள் அங்கே சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இன்னும் சொல்லியிருக்கிறார்கள். திரு வி. கே. ஆர். அவர்களைக் கேட்கிறபோது, திரு ரத்தினசபாபதி செட்டியார் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

"The Government had already published the news. Befoie fixing the celing limit on the agricultural lands. 94 %. of the laud and the property had already been adjusted to the celing limit.''

இந்த அரசு முன்பே சொல்லிவிட்ட காரணமாக, 100-க்கு 94 பங்கு முதலிலேயே சீலிங் லிமிட்டிற்கு வந்துவிட்டது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் அவர்கள் சொல்கிறபோது, நிலங்கள் எல்லாம் பிரித்துக் கொடுத்தாகி விட்டது என்பதை நான் ஏற்கனவே சொன்னேன். இம்மாதிரி நிலத்தைப் பிரித்துக் கொண்டவர்கள் இதைச் சொல்லி யிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி இந்தச் சட்டம் வருகின்றபோது, இப்படி யெல்லாம் பிரித்தாகி விட்டது. இந்தப் பிரிவு ஏன் என்பதைப் பற்றி சட்டமன்றத்தில் வருகிறபோது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை இங்கே சொல்லிவிட்டார்கள். அப்போது சட்டத்தை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு 5 ஆண்டுகள் பின்னாலே தள்ளவேண்டும், 1955-க்கு தள்ளவேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அப்போது பல பேர்கள் இதைப்பற்றி பேசி யிருக்கிறார்கள்.



அப்போது இந்தப் பேரவையிலே துணைத் தலைவராக இருந்த திரு அன்பழகன் அவர்கள் பேசியதைக் குறிப்பிட விரும்புகிறேன்; ''சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே வருகிற இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற விதிகளைப் பற்றி இந்த சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் தங்க ளுடைய கருத்துக்களை எடுத்து கூறியிருக்கிறார்கள். உண்மை யிலேயே உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டு மென்ற கருத்து ஏற்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டு காலமாகிறது. உச்சவரம்புச் சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம் என்ற அறிவிப்பு அறிவித்து 6 ஆண்டுக் காலமாகிறது. அதற்குப் பிறகு சட்ட மன்றத்தில் உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து ஒரு ஆண்டு காலத்திற்கு மேல் ஆகப் போகிறது. ஆனால் இந்த உச்சவரம்புச் சட்டத்திலே இருந்து தப்பித்துக் கொண்ட வர்கள் பல பேர்கள். ஆகவே, மிச்ச நிலங்கள் கிடைக்கப் போவது மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் என் கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று அப்போது தி.மு.கவின் துணைத் தலைவராக இருந்த பேராசி ரியர் அன்பழகன் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அதை மட்டுமா அவர் கேட்கிறார். மேலும், 'நான் கேட்க விரும்பு கிறேன்', என்று சொல்கிறார். நான் சொல்லவில்லை. அன் பழகன் அவர்கள் சொல்கிறார்கள். 'சட்டம் கொண்டு வந்து ஏமாந்தவர்கள் நிலங்களையெல்லாம் உச்சவரம்புக்கு கொண்டு வருவது முறையா அல்லது பொதுவாக எல்லா நிலங்களுக்குமே உச்சவரம்பா என்பதை அறிய விரும்புகிறேன் ஏமாளிகள் தவறி சிக்கிக்கொண்டால், இவர்களுடைய நிலத் திற்கு மட்டுந்தான் உச்சவரம்பா? இந்த சட்டம் வரும் என்று எதிர்பார்த்து, மாமனார் பெயரிலும், மாமியார் பெயரிலும், மருமகன் பெயரிலும், மருமகள் பெயரிலும், மேலும் உபரி நிலமிருந்தால் சமையற்காரன் பெயரிலும் சமையற்காரி பெயரிலும் எழுதி வைத்துவிட்டால் அவர்களுக்கு இந்த உச்சவரம்பு இல்லையா' என்று அவர்கள் கேட்டிருக் கிறார்கள்.

ஆகவே, அப்போது இந்த நிலங்கள் எல்லாம் மாறியிருக் கிறது என்பதற்காக தி.மு.க. எதிர்த்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் தான், இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு கல்யாணசுந்தரம் அவர்களும் பேசியிருக் கிறார்கள். 'நிலம் ஒருவன் கையில் குவிந்திருப்பதை எடுத்துப் பரவலாக பிரித்துக் கொடுக்கவேண்டும்' என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்போதே இப்படியெல்லாம் பேசப்பட்டி ருக்கிறது.

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஆகஸ்ட் 8

இந்தச் சட்டம் அமுலுக்கு வரவேண்டிய தேதி குறைந்த
பட்சம் 1955 ஆம் வருஷமாக இருக்கவேண்டும் என்று அவர்
சொல்லியிருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்கு காரணம்,
இன்றைக்கு நாம் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே தள்ளி
யிருக்கிறோம்—1958. ஆனால், அப்போது கேட்டது 5
ஆண்டுகள்—1955. 55-க்கு வரவேண்டுமென்று அப்போதே
கேட்டியிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். அப்படி கேட்கிறார்கள் என்றால் காரணம்
இருக்கிறது. இதற்கான காரணத்தை நான் முதலிலேயே
சொன்னேன். பிரித்துக் கொள்வதிலே பாதகம் இல்லை.
பிரித்துக் கொண்டோம் என்று சொல்லி விட்டார்கள். ஆனால்
இவைகளை யெல்லாம் பின்னாலே கொண்டு போவது ஏன்
என்பதற்கு இங்கே இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டேன்
ஆனால், ஏன் அவர்கள் 5 ஆண்டுகள் பின்னாலே தள்ளவேண்டும்
என்று சொன்னார்கள் என்று சொன்னால், 1955-ல் சென்னை
கவர்னராக இருந்த பிரகாசா அவர்கள் 1—8—1955-ல்
தமிழக சட்டமன்ற கூட்டுக் கூட்டத்திலே அவர் பேசுகின்ற
போது, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லி
யிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

அவர்கள் மூன்று விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள்—

(1) a Bill on the cultivating Tenants;

(2) a Bill on the fair rents;

(3) a Bill on the implementation of the fixation of ceiling;

என்ற மூன்று காரியங்களை அவர்கள் அப்போது கூறியிருக்
கிறார்கள்.

அன்று ஐந்தாண்டுகள் பின்னாலே தள்ள வேண்டுமென்று
சொன்னார்கள் என்றால் அதற்குக் காரணம் உண்டா?
இராமமூர்த்தி அவர்கள் இதே மன்றத்தில் பேசும்போது
1952-லேயே கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள்.
இரண்டு அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கே
எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் வரவேற்காமல் எதிர்த்
திருக்கிறார்கள். 1955 ஆம் ஆண்டில் இருந்து என்று சொன்ன
தற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காரணம் வைத்துத்தான்
சொல்லியிருக்கிறார்கள்.



1980 ஆகஸ்ட் 8] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அப்போது ஒரு வாரம் விவாதம் நடந்திருக்கிறது. 57
உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பேராசிரியர் அன்பழகன்
அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். திரு. கல்யாண
சுந்தரம் அவர்கள் வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள். இங்கே
இருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குச் சாதகமாக
இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்—அன்று திரு.
எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் வெளி நடப்புச் செய்
திருக்கிறார்கள். திரு. கே. ஆர். நல்லசிவம் அவர்கள் வெளி
நடப்புச் செய்திருக்கிறார்கள். திரு. கே. சட்டநாத கரையாளர்
அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நான் இதை
யெல்லாம் சொல்லக் காரணம் இதை எவ்வளவு தூரம் எதிர்த்
திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

முன்பு இருந்த சட்டமன்றப் உறுப்பினர்கள் 1955-க்கு
போகவேண்டுமென்று சொன்னார்களே, நீங்கள் 1958 என்று
போட்டியிருக்கிறீர்களே, இதற்கு என்ன காரணம் என்று
கேட்கக்கூடும். கேட்காவிட்டாலும் வெளியிலே பேசக்கூடும்.
அதற்குக் காரணம் சொல்லுகிறேன். முன்னாள் கவர்னராக
இருந்த மேத்தி அவர்கள் 8—2—1958-ல் தமிழக சட்டமன்றத்
தில் ஒரு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். அந்த உரையில்
குறிப்பிடும்போது 'பண்ணையாளர்கள் பாதுகாப்புச் சட்டம்
வந்து விட்டது; கூலி உயர்வுச் சட்டம் வந்து விட்டது;
மீதியிருப்பது நிலச் சீர்திருத்தச் சட்டந்தான். அது விரைவில்
வர இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். இது 8—2—1958-ல்.
ஆகவே, நாம் 1—1—1958 என்று போடாவிட்டால் மக்கள்
மன்றத்திற்குப் பதில் சொல்லவேண்டும், நீதிமன்றத்திற்குப்
பதில் சொல்ல வேண்டும். அன்றைக்கு கவர்னர் பேசியிருக்
கிறார்.

"The question of fixing a ceiling on the holdings is now under the active consideration of the Government."

கவர்ன்மெண்ட் இதைப்பற்றியெல்லாம் மிக ஆழ்ந்து யோசித்துக்
கொண்டிருக்கிறது விரைவிலே அதற்கு முடிவு எடுக்கும் என்
பதைத் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல,
அப்படிப் பேசியது சரி என்பதைப் போல் 31—3—1958-இல்
அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த மாணிக்க
வேல் அவர்கள் பேசுகின்றபோது பயிரிடும் குத்தகைதாரர்கள்
நிலத்திலிருந்து பிரபுதாரர்களால் வெளியேற்றப்படக்கூடாது
என்ற சட்டம் வந்துவிட்டது. நியாயவாரச் சட்டம் கொண்டு
வந்தாகிவிட்டது, கடைசியாக நில உச்ச வரம்புச் சட்டம்தான்

கொண்டுவரப்படும் கட்டத்தில் இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். கவர்னருடைய பேச்சையும் அதற்குப் பிறகு வருவாய்த் துறை அமைச்சர் பேசிய பேச்சையும் வைத்துக்கொண்டு 1—1—1958 என்று போடப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவையும் சொன்னதற்குப் பிறகு உங்களிடத்திலே சொல்வேன். இந்த அரசு இதைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்து கொண்டுவந்திருக்கிறது. கொண்டு வந்திருப்பது மாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன பேசினார்கள்,—இது நில உச்ச வரம்புச் சட்டம் அல்ல, இது மிச்ச வரம்புச் சட்டம் என்று பேசியிருக்கிறார்கள்——என்பதையெல்லாம் நான் இப்போது எடுத்து படித்துக் காண்பிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் -- தலைமை)

நான் முதலிலே சொன்னபடி நல்ல வழக்குக்கு நீண்ட ஒரு வாதம் தேவையில்லை, நல்ல ஒரு வழக்கறிஞர் தேவையில்லை. அது மட்டுமல்ல உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்திக்கு தெரியும் நீதிபதி கேட்கிறார். வழக்கறிஞர்கள் பேசுவதற்கு முன்னாலேயே சரி, எனக்குத் தெரியும் என்று நீதிபதி சொல்லுவார். புத்தகத்தை வைத்துக் கொண்டு கல்கத்தா ஹைகோர்ட், பாம்பே ஹைகோர்ட் என்று சொல்கிற போது நீதிபதி சரி எனக்குத் தெரியும் என்று சொல்லுவார். அதைப்போல இங்கே நீங்கள் சிறந்த நீதிபதிகள். நான் பல சாட்சிகளை உங்களிடம் சொல்லியிருக்கிறேன் நீங்கள் தீர்ப்பைக் கொடுக்கவேண்டும். அண்ணாவால் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்கள், அண்ணாவால் ஆளாக்கப்பட்டவர்கள் பலர் இரு பக்கமும் இருக்கிறோம். அண்ணா அவர்கள் சொன்னதை, அண்ணா அவர்கள் கொண்டுவரவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருப்பதை அண்ணாவின் அரசு, அண்ணாவின் தம்பி புரட்சித் தலைவர் முதல்வராக இருக்கிறபோது, அண்ணாவின் எண்ணங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அண்ணா இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் என்ன பேசினார்கள் என்பதற்கு நான் புத்தகம் வைத்திருக்கிறேன். அப்போது இதைப் பற்றி ஆதரித்து அவர்கள் பேசியிருக்கிறார்கள், அது மட்டுமல்ல நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது என்பது மட்டுமல்ல, வருகிறபோது எவ்வளவு நிலம் வரப்போகிறது, எவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது எல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. திரு வி. கே. ராமசாமி முதலியார் 1959 ஆம் ஆண்டிலே சட்டமன்றத்திலே பேசுகின்றபோது—இதற்கு சம்பந்தம் இல்லை. என்றாலும் வேறு ஒரு மசோதாவிலே பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள் உச்ச வரம்புச் சட்டம் வர இருக்கிறது என்று தெரிய வருகிறது. 30 ஸ்டாண்டர்டு [illegible] வரப்போவதாகவும் தெரிகிறது என்றெல்லாம் பேசி





யிருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை என்றால் மாண்புமிகு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களும் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள் பிரித்துக்கொண்ட நிலைமைகள் உண்டு என்று திரு ராமசாமி முதலியார் அவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள், நீங்கள் எல்லாம் சிறந்த நீதிபதிகள், இந்தச் சட்டத்திற்கு உங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லி—ஏனென்றால் நீதிபதிகள் யோசனையையும் சொல்லி, தீர்ப்பையும் சொல்வார்கள்.

(பிற்பகல் 12—20)

உங்கள் யோசனைகளையும் சொல்லி, நல்ல தீர்ப்பைக் கூற வேண்டும் கூற வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு திரு. சோமசுந்தரம் அவர்கள், வழக்காடும் நீதிமன்றத்திலே எப்படி வழக்கினை எடுத்து வைத்துப் பேசுவார்களோ அதுபோல வாதாடி இருக்கிறார்கள். அது தோற்றுப் போகின்ற வழக்கானாலும் சரி அல்லது வெற்றி பெறுகின்ற வழக்கானாலும் சரி, வழக்காடக்கூடிய வக்கீல்கள் அவர்களுடைய கட்சிக்காரர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில், வாங்கிய consideration-க்குப் பொருத்தமான வகையில் வாதாடத்தான் செய்கிறார்கள். அதுபோல் அமைச்சரவர்கள் வாதாடி விட்டார்கள். எங்களையெல்லாம் நீதிபதி என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் சொல்லுகின்ற அந்த நீதியை—அந்த முடிவை அவர்கள் மீறமாட்டார்கள்; அவர்கள் அதைப் பின்பற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஜட்ஜ்மென்ட் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கின்ற வகையிலே சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் இப்பொழுதே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நீதிபதிகள் 10 பேர், 5 பேர் என்று புல் பெஞ்ச்சாக இருக்கும் பொழுது மெஜாரிட்டி தீர்ப்பைத்தானே நாட்டினிலே ஏற்றுக் கொள்வார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, அதற்காகத் தான் நான் சொன்னேன், வாதாடுகின்ற வக்கீல்கள் கோர்ட்டில் உள்ள புல் பெஞ்ச்சைப் பார்த்து, இப்படித்தான் ஜட்ஜ்மென்ட் இருக்க வேண்டும் என்று சொல்வது முறை அல்ல; அதை நீதிபதிகளுக்கே விட்டுவிட வேண்டும். 4 பேர் ஒரு மாதிரியாகவும் ஒருவர் வேறொரு மாதிரியாகவும் சொல்வார்கள்.

[திரு வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 8

ஆகவே, எந்த நீதியும், சட்டமும் காலத்திற்கேற்றவாறு மாறக் கூடியது. ஒரு காலத்திலே சட்டத்திற்கு விரோதமான காரியமாக இருப்பது, இன்னொரு காலத்திலே சட்டத்திற்கு ஒப்புதலான காரியமாக இருக்கலாம். ஆகையினால், காலம் மாற மாற அந்த நீதியினுடைய போக்கும், அல்லது சட்டத்தினுடைய போக்கும் மாறத்தான் செய்யும்.

நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள், அண்ணா அவர்களுடைய பெரிய கருத்தினையெல்லாம் சொன்னார்கள். அண்ணா அவர்கள் மிகச் சிறந்த அறிஞர் ; பேரறிஞர். அவர்கள் ஒன்றே முக்கால் ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த காலத்தில், அவர் இதைச் செய்யமுடியும் என்றால் செய்திருக்க மாட்டார்களா ? அவர்கள் செய்யவில்லையே.

காரணம், இதைச் செய்வது சமுதாயத்திற்கு உதவி செய்யக் கூடிய காரியமாக இருந்தாலும், இங்கு சட்டத்தினுடைய ஆட்சி இருக்கின்ற காரணத்தினால், இப்படி அடிக்கடி சட்டத்தினுடைய ஆட்சியில் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து குழப்பத்தை விளைவிக்கக் கூடாது என்ற முறையிலேதான் அவர்கள் அன்றைய தினம் இப்படிப்பட்ட சட்டத்தை, இன்னும் சொல்லப்போனால்,

(ıetrospective effects)

கொடுக்கக்கூடிய சட்டத்தை அவர்கள் விரும்பியிருந்தால் கொண்டு வந்திருப்பார்கள். ஒன்றே முக்கால் ஆண்டுக்காலம் நிறைய மெஜாரிட்டியுடன்தான் அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள். ஆனால், அவர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. ஆனால், கலைஞர் அவர்களிடத்திலே அண்ணா அவர்கள் சொல்லியதெல்லாம், பேசியதெல்லாம், 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருப்பதை வைத்துக்கொண்டு நிலச்சுவான்தார்கள் பல பேர்களுக்கு, பேமிலி என்று சொல்லி மேஜர் ஆனவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஏழைகளுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. எனவே, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதைக் குறைக்கலாம் என்றுதான் எங்கள் தலைவரிடத்தில் சொல்லி விட்டுப் போனார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — தலைமை.)

அதைத்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே செய்தார்கள். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்தார்கள் அண்ணா அவர்களின் ஆலோசனையின் பேரில்.



1980 ஆகஸ்ட் 8] [திரு வி. கிருஷ்ணமூர்த்தி]

ஆனால், இன்றையதினம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், அது வாஸ்தவம்தான். இது உச்சவரம்பு அல்ல, மிச்ச வரம்பு என்று சொன்னார்கள். ஆனால் அது தவிர்க்க முடியாத காரியம். அன்றைக்கிருந்த முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், இந்த நிலச் சட்டத்தை நாங்கள் கொண்டுவந்தாலும் ஏழைகளுக்கு அது பயன்படவில்லை என்று சொன்னார்கள். அது வாஸ்தவம்தான்.

இரண்டு முறையிலே சாதிக்க வேண்டிய காரியங்கள் இதற்கு உண்டு. ஒன்று, இந்த நிலங்களெல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தம், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தம் அல்ல என்று சொல்ல வேண்டும். திரு. இளையபெருமாள் அவர்கள் சொல்வதைப்போல யார் உழுகிறார்களோ அவர்களுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லிவிடுகிற நிலைமைகளில், இரத்தப் புரட்சி அல்லது சோவியத் கம்யூனிஸ்ட் நாடுகளிலே உள்ள அந்த முறை. இது ஒன்று. இவைகளையெல்லாம் இரத்தப் புரட்சி இல்லாமலேயே ஒரு சட்டத்தின் மூலமாகச் செய்ய வேண்டும். சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சிப்பது இந்திய அரசாங்கத்தினுடைய அரசியல் சட்டமாக இன்றையதினம் இருக்கிறது.

காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது சொன்னார்கள், சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்பதற்காக ஆவடி காங்கிரஸில், Socialistic Pattern of Sccie:ie) என்று சொன்னார்கள். அதை ஆவடி சோஷலிசம் என்று அப்பொழுதெல்லாம் நாங்கள் சொல்வோம். என்னவென்றால், ஒருவனிடத்திலே நிறைய நிலம் இருக்கிறது, 300 எக்கர், 400 ஏக்கர் இருக்கிறது. அவன் நிறைய வைத்திருக்கிறான். ஆனால், இல்லாதவர்கள் கூலிக்காரர்களாக, பஞ்சைகளாக, பராரிகளாக, அரிசனங்களாக, அல்லது உழைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான சமூக நீதி கிடைக்கவில்லை. இதை எப்படிச் செய்ய வேண்டுமென்று சிந்தித்துப் பார்க்கத்தான் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள். ஒன்று, அந்த நிலத்தையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டு இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாம். ஒரு குறிப்பிட்ட, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரோ, 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரோ, 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரோ வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயித்துவிட்டு, மற்ற எல்லாவற்றையும் எடுத்து, நிலம் இல்லாதவர்களுக்கு, ஏழைகளுக்கு, 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று கொடுக்கலாம். அதற்கு அரசாங்கத்திற்கு நிறையப் பணம் வேண்டும், பெரிய நிர்வாக இயந்திரம் வேண்டும், அதிலே பல லூப்ஹோல்ஸ் வரும். ஆகவேதான் காமராஜர்

அந்தக் காலத்திலே கூறினார், '' ஆமாம் ஐயா, ஒருவன் 100 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறான். சட்டத்தைக் கொண்டு வர வேண்டியதுதான். சட்டத்தைக் கொண்டு வருகிறேன் என்று மிரட்டினாலே, அவனே விட்டுவிட்டுப் போய் விடுவான் '' என்று. ஒரு ஏக்கர், ரூ. 2,000 விற்கக்கூடிய, தஞ்சையிலே இருக்கக் கூடிய நிலங்கள், சிதம்பரத்திலே இருக்கக்கூடிய நிலங்கள், அன்றைய தினத்திலே சொல்கிறேன், ரூபாய் 2,000 பெறக் கூடிய நிலங்கள், இவற்றையெல்லாம் அந்த மிராசுதாரர்கள் ரூ. 1,000-க்கு விற்றார்கள், '' டிஸ்டிரெஸ் சேல் '' என்று. அது ஏற்பாடு செய்யப்பட்டது அல்ல. அவனிடத்திலே பண்ணையாளாக இருக்கக்கூடியவர்களுக்கு, அரிசனங்களுக்கு, அதே போல், உழைக்கக்கூடியவர்கள், இவர்களுக்கெல்லாம், ரூபாய் 1,000க்கு விற்று விடுகிறேன், ரூபாய் 1,500க்கு விற்றுவிடப் போகிறேன், வேண்டுமென்றால் 4 ஏக்கரோ, 3 ஏக்கரோ நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று அவனாகவே, அவனுடைய பகுதியைச் சேர்ந்த, அந்தப் பக்கத்திலே இருக்கிற கிராமத்தவர்களுக்கு விட்டுக் கொடுக்கிறான் என்றால் என்ன தவறு ?

ஒருவனுக்கு, ஏக்கர் ரூபாய் 2,000 என்ற வீதத்தில், 4 ஏக்கர் சிதம்பரம் தாலூகாவிலே புத்தூர் கிராமத்திலே அல்லது காட்டு மன்னார்குடியிலே கிடைக்கிறது, வாங்கியிருக்கிறான் என்றால், ஒரு அரிசன் ரூபாய் 2,000 வீதத்தில் வாங்கியிருக்கிறான் என்றால், 5 ஏக்கருக்கு ரூபாய் 10,000 கொடுக்க அந்த நேரத்திலே அவனிடம் பணம் இருந்திருக்காது. அப்படி இல்லாத நேரத்தில், கையிலே இருக்கக்கூடிய ரூபாய் 2,000ஐக் கொடுத்துவிட்டு, 10 வருஷத்திற்கு ரூபாய் 8,000க்கு அடமானம் வைக்கிறான். அடமானம் வைத்துவிட்டு, 10 வருஷத்திற்குப் பயிரிட்டு, வட்டியும் முதலும் கொடுத்து, கடனை அடைத்து விட்டு, இன்றைக்கு நிலத்திற்குச் சொந்தக்காரனாக அவன் ஆகியிருக்கிறான் அப்படிச் சொந்தக்காரர்களாக ஆகியிருக்கிறார்களே, அந்த அரிசனங்கள், சொந்தக்காரர்களாக ஆகியிருக்கிறார்களே அந்தச் சிறு விவசாயிகள், சொந்தக்காரர்களாக ஆகியிருக்கிறார்களே, திரு. இளையபெருமாளுடைய உற்றார்கள், உறவினர்கள் (குறுக்கீடு) உதாரணத்திற்காகச் சொல்கிறேன் -- அவர்களையெல்லாம் பாதிப்பதற்குத்தான் இந்தச் சட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வருகிறார்களா ? அன்றைய தினம், ரூபாய் 2,000க்கு வாங்கியிருக்கலாம். ஆனால், அதே நிலம், இன்றைய தினம் ரூபாய் 10,000 பெறும். ஆனால், 5 ஏக்கர் வாங்கி, அன்றைய தினம் ரூபாய் 2,000ஐக் கொடுத்துவிட்டு, ரூபாய் 8,000க்கு அடமானம் வைத்துவிட்டு 10 வருஷமாக, 15 வருஷமாக, அந்த நிலத்திலே பாடுபட்டு, பாடுபட்டு, கஷ்டப்பட்டு, வட்டியும் அசலும் கொடுத்து, கொடுத்து, இன்றைய தினம் உரிமையாளனாக, பொசஷன் வைத்துக்கொண்டு, பட்டா



அவன் பேரிலே மாறி, கரண்ட் வாங்கி, அவனும் அவனுடைய மனைவியும், குழந்தைகளும் பயிரிடுகிறார்களே, அவர்களைத்தூக்கி வெளியே போட வேண்டுமென்று சொல்வது தான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அண்ணாவினுடைய ஆலோசனைகள் அப்படி இருந்திருக்காது. அப்படி இருந்திருக்குமானால், அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலே, இவைகளைச் செய்வதிலே யாருமே குறுக்கே நிற்கின்ற நிலைமை இல்லாதபோது, அவர் செய்யாமல் இருந்திருக்க மாட்டார் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் இப்பொழுது பதில் சொல்லமாட்டார். அவர் எங்கோ உறங்கிக்கொண்டிருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் சொல்லுவதுதான் அண்ணாயிசம், அண்ணா எங்களிடத்தில் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ரிபெட்டர் இருக்காது. அவர் வந்து சொல்லப்போவது கிடையாது. இவர்கள் சொல்வதெல்லாம் அவர் சொன்னது, என்று தங்கள் இஷ்டப்படி சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் இதைச்சொல்ல விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் என்று சொல்லியிருக்கிறார்கள், 1958-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாள்—என்ன புனிதமான நாள் ? பிரகாசம் சொல்லி இருக்கிறார், என்று சொல்கிறீர்களே, 1955 என்று, அந்தத் தேதியையே வையுங்களேன். 1955 என்று ஏன் வைக்கக் கூடாது? 1—1—1958 என்று வைக்கிறீர்களே என்ன நியாயம் ? இன்னொன்றும் சொல்கிறேன், இந்தச் சட்டமன்றங்களுக்கோ, பாராளுமன்றத்திற்கோ, லெஜிஸ்லேட்டிவ் காம்பிட்டன்ஸ் இருக்கிறது, அதை ரெட்ராஸ் பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது. But there is a limit அந்த லிமிட்டுக்கு எக்சீட் ஆனால், இந்தச் சட்டம் சரியாக அமுல்படுத்த முடியாத நிலைமையிலே இருக்கும் என்று இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை மெஜாரிட்டி வைத்துக் கொண்டு இங்கே நிறைவேற்றி விடலாம். இந்த அமென்ட்மென்ட்டை நிறைவேற்றினால், அது, ஹைகோர்ட்டிலோ, சுப்ரீம் கோர்ட்டிலோ, 'லாஃபிங் ஸ்டாக்'காக, அல்லது சிரிப்புக்கு இடம் அளிக்கும் விதத்திலே, இப்படியெல்லாம் சட்டம் போடுகிறார்களே என்று நினைக்கக்கூடிய விதத்திலே, நாம் சட்டங்களை இயற்றக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 8

ஆகவேதான் இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் என்று கொடுக்கக்கூடிய முறை இருக்கிறதே அது சரியானதல்ல. காரணம் பிரின்சிப்பல் ஆக்ட் எப்பொழுது வந்தது? அது எஃபெக்டுக்கு வந்தது, 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாள். இப்பொழுது நீங்கள் பிரின்சிப்பல் ஆக்டினுடைய ஆரம்ப காலத்தையே, இந்த அமென்ட்மென்ட் மூலமாக, 1958-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளுக்கு அல்லவா கொண்டு போகிறீர்கள்? இது அமென்ட்மென்ட்டா, அல்லது பிரின்சிப்பல் ஆக்டுக்கு வேறு சட்டமா? இந்தச் சட்டத்தைச் சுத்தமாக ரத்து செய்து விட்டு, வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள்—அது வேறு விஷயம். ஆனால், ஒரு பிரின்சிப்பல் ஆக்டை வைத்து, அந்த principal Act comes into force from the appointed date என்று 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளை வைத்து விட்டு, ஒரு அமென்ட்மென்ட் மூலமாக, 1958-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளிலிருந்து இந்த ஆக்ட் அமுலுக்கு வரும் என்று சொல்வதைப்போல், நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்திலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கிளாஸ் பை கிளாஸ் கன்சிடரேஷன் வருகிறபோது மற்றவைகளைப் பேசிக் கொள்ளலாம் என்ற காரணத்தினால் நான் முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலிலே, நோட்டிஸ் கொடுக்க வேண்டும். ஏன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்றால், நேச்சுரல் ஜஸ்டிஸ் முதலிலே சிட்டிசன்களுக்கு இருக்க வேண்டும். நான் இந்த சட்டத்தைக் கொண்டு வரப் போகிறேன். ஏன் கெசட்டில் நோட்டிபை பண்ணுகிறோம். இந்தச் சட்டம் இன்றிலிருந்து வரும் என்று நோட்டிபிகேஷன் தருகிறோம். இந்தச் சட்டம் என்றிலிருந்து வந்தது 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளில் இருந்து. 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளிலிருந்துதான் நோட்டிபிகேஷன் கெசட்டிலே வந்தது. அன்றையதினம் கவர்னர் அனுமதியோடு இந்த சட்ட மன்றத்திலே அதை நாம் இன்ட்ரடூஸ் செய்தோம். ஏன் 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாள் என்று நாம் கெசட்டிலே பண்ணுகிறோம். ஜனங்களுக்கு நாம் சொல்லியாக வேண்டும். That is the fundamental pillar of jurisprudence. நோட்டீஸ் இருக்க வேண்டும். ஒரு சிட்டிசனுக்கு, நான் உன்னுடைய உரிமையை எடுக்கப் போகிறேன். நான் உன்னுடைய



1980 ஆகஸ்ட் 8] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

நிலத்தை எடுக்கப் போகிறேன். நீ பயிரிடக்கூடிய நிலத்தை அரசாங்கம் எடுக்கப் போகிறது, என்று நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அப்படி நோட்டீஸ் கொடுக்கவில்லை என்றால் அந்த சட்டம் செல்லாது. ஆகையினாலேதான் இன்றையதினம் நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் 1958-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் என்று சொல்லக்கூடிய அந்தத் தேதி இருக்கிறதே அதை இன்றைக்குச் சொல்லுகிறீர்கள், அதாவது 1958ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் வரையில் ஏற்பட்டிருக்கிற டிரான்சாக்ஷன் செல்லாது என்று 1980-ல் சொல்லுகிறீர்கள். நீங்கள் இன்றைக்குப் போடுகிற சட்டத்தை இன்னும் 10 வருடம் கழித்து நம்முடைய பிள்ளைகள் வந்து மாண்புமிகு சோமசுந்தரம் போட்ட சட்டம் செல்லாது, நான் ஒன்றைக் கொண்டு வருகிறேன் என்றால், சட்டத்தினுடைய ஆட்சி எங்கே இருக்கிறது. ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் என்று கேட்கிறபோது 'தேர் ஸ் லிமிட்' நமது சட்டமன்றம் கூடுகிற சமயத்தில் அதனுடைய ஆயுட் காலத்திற்குள்ளாகவே வைத்துக் கொள்ளலாமே தவிர, வேறல்ல. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பாராளுமன்றத்திலே உ.பி. சம்பந்தமாக ஒரு சட்டம் வந்தது. 1950ஆம் வருடம் ஜனவரி மாதம் 26ஆம் தேதிக்கு முன்னால் ஏற்பட்ட செலவை வேலிடேட் செய்ய வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். சுப்ரீம் கோர்ட்டு அதை ரத்து செய்து விட்டது. பாராளுமன்றத்தில் அந்த அரசியல் சட்டம் வருவதற்குள் நீங்கள் கொண்டு வந்தால் அது செல்லாது என்று, ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுப்பதற்குக் கூட சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் பிரகாரம்தான் செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு வழக்கு மன்றத்திலே முடிவாகி இருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீண்ட நேரம் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். பினாமி நிலங்களை எடுப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை. பினாமி நிலங்களை எடுங்கள். எங்கே பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று பார்த்து எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சேர்ந்தது. ஆனால் நான் ஏற்கெனவே சொன்னேன். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், கூலி வேலை செய்யக் கூடியவர்கள், சாதாரணமாக ஏழையாக இருக்கக் கூடியவர்கள், தன்னுடைய மனைவியின் கழுத்திலே இருக்கக் கூடிய நகையை வைத்து, அதை வைத்து நிலத்தை வாங்கி, அதற்குப் பிறகு இந்தக் கடனை அடைத்துவிட்டு இன்றையதினம் சொந்தக்காரர்களாக ஆகி இருக்கிறார்களே அவர்களை நடுத் தெருவில் விடுவதற்கு சட்டம் கொண்டு வந்தால்,

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஆகஸ்ட் 8

அந்த சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்காது என்று சொன்னேனே தவிர, பினாமி நிலங்களை 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று யார் யார் பேரிலோ வைத்திருக்கிற நிலங்களை எடுப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே எதிர்க்க வில்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற சமயத்தில் சிலதை நான் பார்த்தேன் எப்படி இதைக் கொண்டு வந்தீர்கள் என்று. இந்த இன்ஜீனியஸ் பிரெயின், நம்முடைய சட்டத் துறைக்கு நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு எப்படி வந்தது என்று நான் பார்த்த சமயத்தில், அண்மையிலே சென்னை உயர் நீதி மன்றத்திலே ஒரு டெசிஷன் வெளியானது. அந்த டெசிஷன் என்னவென்றால் இதைப்போல நாங்கள் 1972இலே நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த 30 ஸ்டான்டர்டு ஏக்கராவை 15 ஏக்கராகக் கொண்டு வரவேண்டும் என்று முயற்சி எடுத்த சமயத்தில் அந்தக் குறிப்பிட்ட சில தேதிகளில் இரண்டு கிப்ட் டீட்களை (Gift Deed) எழுதி வைத்துவிட்டான் ஒருவன், 15 ஏக்கராவுக்கும் மேலே. அதிலே 1.6 ஏக்கர் எக்சஸ்ஸாக இருக்கிறது. இந்த கிப்ட் டீட் இருக்கிறதே அது இந்தச் சட்டத்தை டிபீட் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று செக்ஷன் 22 ஆப் தி லான்ட் சீலிங் ஆக்ட் படி (58/61) ஆதரைசுடு ஆபீசர் சரியல்ல என்று சொன்னார். லேன்ட் டிரிபியூனலும் அதைச் சரி என்று சொன்னது. உயர்நீதி மன்றத்திற்கு வந்த சமயத்தில் அங்கே ஒரு தீர்ப்பை வழங்குகிற நேரத்தில் ஜஸ்டிஸ் இராமானுஜம் அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள்.

"Justice Ramanujam said :

As regards the main reason given for voiding the gift deeds under section 22, the authorities below had clearly proceeded on an erroneous basis. The mere fact that the transactions are likely to impinge on the provisions of the Act is by itself not sufficient to hold that the documents are void. If that were the intention, then section 22 need not be entrusted the question of deciding the bonafides to be decided by the Authorised Officer under that section, and it can straightaway say that all documents executed between the date of the the Commencement of the Act and notified date which will naturally infringe the provisions of the Act will automatically be void".

அவர் தன்னுடைய ஜட்ஜ்மென்ட்டை எழுதுகிறபோது தர்க்கம் செய்கிற சமயத்தில் இப்படி 'இன்டென்ஷன் ஆப் தி லெஜிஸ்லேச்சர் இருந்து இருந்தால், இப்படி செய்து இருப்பார்கள்' என்று லாஜிகலாகச் சொல்கிறார். செக்ஷன் 22-ன்படி ஆதரைசுடு ஆபீசருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பற்றிச்



1980 ஆகஸ்ட் 8] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

சொல்கிறபோது இப்படி சொல்கிறார்கள். அதை வைத்துத்தான் இந்த அரசாங்கம் ஓஹோ, இப்படி வைத்துக் கொண்டால், 1958ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாளில் இருந்து 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் வரையில் இருக்கிற எல்லாவற்றையும் நாம் ரத்து செய்து விடலாமோ என்ற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறார்கள். இதுவரைக்கும், இந்த சட்டம் நிறைவேறுகிற வரைக்கும் 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாள் வரையில், 30 ஸ்டான்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்து இருப்பது சட்டப்படி சரி. 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளுக்குப் பிறகு 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் வரை வைத்து இருப்பது சட்டப்படி சரி. அதற்குப் பிறகு கலைஞர் ஆட்சி காலத்தில் 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சட்டம் வருகிற வரையில் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் வைத்து இருப்பது சரி. அதற்குப் பிறகு 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் வைத்து இருப்பது சரி. அவைகள் அந்தந்த கால கட்டத்தில் நியாயம். 1958-ம் ஆண்டில் இருக்கும் நியாயம், 1980ஆம் ஆண்டில் அநியாயமாகப் படுகிறது. 1960-ம் ஆண்டுக்கும் 1971ஆம் ஆண்டுக்கும் இடையே உள்ள நியாயம், 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு 15 ஸ்டான்டர்ட் ஏக்கரா என்று மாற்றப்படுவது நியாயமாகிறது.

நான் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற சமயத்தில், இதே மன்றத்தில் நம்முடைய செக்ஷன் 23 (ஏ)-ல் என்ன கொடுத்து இருக்கிறார்கள் என்றால், எல்லாம் செல்லாது. என்ன செல்லாது,

"Section 23-A Certain transfers made on or after 1st January 1978 but before the 6th April 1960 to be void—(1) where, on or after the 1st January 1958 and before the 6th April 1960, any land held by any person referred to in sub-section (3) has been transferred by way of sale, gift, surrender settlement or in any other manner whatsoever to any person (including a trust), such transfer shall be, and shall be deemed always to have been void".

என்று சொல்லிவிட்டு, அந்தப் பார்ட்டிஷன் இருக்கிறதே, அது ட்ரான்ஸ்பர் இல்லை என்று வியாக்யானம் கொடுத்து விட்டார்கள். பார்ட்டிஷனுக்கு மட்டும் ஏன் கொடுத்தீர்கள். ஒரு வீட்டில் 5 பிள்ளைகள் இருக்கிறார்கள். கடைசி பையன் மைனர். 4 பிள்ளைகள் 21 வயது, 30 வயது என்று இருக்கிறார்கள். அவன் 150 அல்லது 200 ஏக்கர் நிலம் வைத்து இருக்கிறான் என்று சொன்னால், ஒரு மகனுக்கு அனுக்கு 30

ஏக்கர் என்று பிரித்து வைத்து விடலாம். 4 மகன்கள், ஒரு தகப்பனார், ஒரு மைனர் சன், டாட்டர் என்ற வகையில் 5 பாகமாகப் பிரித்து விடலாம். அதற்கு எக்சம்ஷன் கொடுத்து இருக்கிறீர்கள்? காரணம் என்ன? பார்ட்டிஷனை நீங்கள் கேள்வி கேட்க முடியாது. இந்து லா சட்டத்தின்படி, பார்ட்டிஷன் ஈஸ் லீகல் என்டிடி. பார்ட்டிஷன் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. 18 வயது அடைந்து இருந்தாலும் சரி, அல்லது 1 வயது குழந்தையாக இருந்தாலும் சரி, இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே பார்ட்டிஷன் செய்து இருந்தால் அதற்குப் பாதுகாப்பு தரப்பட்டு இருக்கிறது. செக்ஷன் 22 படி அது வேலிட். இதுவரைக்கும் இருந்தது. நீங்கள் சொல்வது:

"Section 23 (2) (ii): Where any person referred to in sub-section (3) has transferred any land to any other person during the period referred to in sub-section (1) and where the said other person—

(a) has effected a partition of such land: or
(b) has died and the land has been inherited by his legal heirs or
(c) has bequeathed such land to any other person; or
(d) has transferred such land to any other person by way of gift or settlement:

the provision of sub-section (1) shall apply to the land held by the person by virtue of the partition, inheritance bequest, gift or settlement as the case may be".

செக்ஷன் 1-ன் பிரகாரம், இந்த கிப்ட் கொடுத்து இருந்தாலும், அல்லது செட்டில்மென்ட் செய்து இருந்தாலும் அல்லது பார்ட்டிஷன் செய்து இருந்தாலும் செல்லாது என்று இந்தச் சட்டத்தில் சொல்லி இருக்கிறீர்கள்.

(பிற்பகல் 12-40)

செக்ஷன் 21-ஏ, எது எது 'வாலிட்'? யாரானாலும், ரெஜிஸ்டர்டு இன்ஸ்ட்ருமென்ட் மூலம் பார்டிசன் செய்திருந்தாலும்

Section 21 (A): Certain partitions and transactions to be valid:

Any person has effected by means of a registered instrument a partition of holding or a part thereof; or

(b) any parent or grand parent has voluntarily transferred and land on account of natural love and affection to any minor son, unmarried daughter and minor grand son or unmarried grand daughter in the male line or........

such partition or transfer shall be valid".



1972-ல் எல்லாம் 'வாலிட்'. ஆனால் 1958-லிருந்து 1960 வரை செய்திருப்பது 'இன்வாலிட்'. இது எப்படி வந்தது? ஒரு சட்டத்தை நீங்கள் இயற்றும்போது 1960-லிருந்து 1970 வரை பார்ட்டிஷன் செய்திருந்தால் செல்லும், கிப்ட் செய்திருந்தால் செல்லும், 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஏக்கர், 10 ஏக்கர் என்று பிரித்து யாருக்காவது தானமாகக் கொடுத்திருந்தால் செல்லும்; ஆனால் 1958-லிருந்து 1960 வரையில் கிப்டாக கொடுத்தாலும் செல்லாது, தானமாகக் கொடுத்தாலும் செல்லாது என்று சொல்லியிருப்பது சரியல்ல. ஆகையால் இந்தச் சட்டத்திலே பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதினால் ஏழைகளுக்கு நிலம் கிடைக்குமானால் நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் ஒரு ஏழையிடம் இருப்பதைப் பிடுங்கி இன்னொரு ஏழைக்கு கொடுப்பது நல்லதல்ல; ஒரு பிச்சைக்காரனிடமிருந்து பிடுங்கி இன்னொரு பிச்சைக்காரனுக்குக் கொடுப்பது பிச்சை அல்ல; அந்தமாதிரி வேலை தேவையில்லை.

பணக்காரர்கள் இருக்கிறார்கள். 100 ஏக்கர், 200 ஏக்கர் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்று நான் வாதாடவில்லை. ஆனால் 5 ஏக்கர், 4 ஏக்கர், 3 ஏக்கர் என்று தன்னுடைய வியர்வையைச் சிந்தி, விலைக்கு வாங்கி வைத்திருக்கிற நிலத்தை எடுப்பது என்பது ஒரு நல்ல பிரின்சிப்பிள் அல்ல. 1,500 ரூபாய், 2,000 ரூபாய், 2,500 ரூபாய்க்கு அப்போது வாங்கியிருந்தால் இப்போது அதன் விலை 10,000 ரூபாய் அளவுக்கு இருக்கும். இவ்வளவு நாளும் அந்த நிலத்தில் எவ்வளவோ கஷ்டப்பட்டிருப்பார்கள். செலவு செய்திருப்பார்கள். அந்த நிலத்தை அந்த ஏழை விவசாயிகளிடமிருந்து பறிப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வருவது சரியல்ல. ஆகையால் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன். இதில் எக்சம்ஷன் கொடுப்பதாக இருந்தால் வரவேற்கிறோம். இந்த அவையிலே இந்த விவரங்களைச் சொல்கிறேன். ஆனால் நண்பர்கள் என்ற முறையிலே நாங்கள் பேசும்போது இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசாங்கத் தரப்பிலே ஏதாவது திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்; அது வேறு. ஆனால் உண்மையிலேயே கிரயம் கொடுத்து வாங்கியவர்களுக்கு, செட்டில்மெண்ட் செய்து வாங்கியவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும்.

சிலருக்கு சாகும்போதுதான் புத்திவரும். சாகும்போதுதான் நல்லவர்களாக மாறுவார்கள். உயிரோடு இருக்கும்போது எச்சிக் கையால் காக்காய் விரட்டமாட்டார்கள். ஆனால் சாகும்போது மனம் மாறி, இந்தச் சொத்தை எல்லாம் யார்

அனுபவிக்கப்போகிறார்கள் என்று நினைத்து, மாமன் பிள்ளைக்கு 2 ஏக்கர், மச்சான் பிள்ளைக்கு 2 ஏக்கர், அதைப்போல வேண்டியவர்களுக்கு நிலத்தைப் பிரித்து எழுதி வைத்திருப்பார்கள்; வில் எழுதி வைத்திருப்பார்கள்; செட்டில்மெண்ட் செய்து வைத்திருப்பார்கள். போனாபைடாக இருந்தால் அதையெல்லாம் ஏன் அனுமதிக்கக்கூடாது ?

இன்னொன்று, செக்ஷன் 22 இருக்கிறது. அது அப்படியே இருக்கிறது; அதற்கு அமென்ட்மென்ட் இல்லை. இந்த ட்ரான்ஸ்பர், கிப்ட், சேல்ஸ் எதுவாக இருந்தாலும் இவை எல்லாம் போனாபைடா இல்லையா என்று பார்ப்பதற்கு செக்ஷன் 22 இருக்கிறது. அந்த செக்ஷன் இருக்கும்போது 1—1—58 முதல் 6—4—60 வரையில் ட்ரான்ஸ்பர் செய்திருந்தால், செல்லாது, கிப்ட் கொடுத்திருந்தால் செல்லாது, சேல்ஸ் பண்ணியிருந்தால் செல்லாது என்று சொல்வது 22-வது செக்ஷனுக்கு முரணாக இருக்கிறது.

இந்த மசோதாவிலே இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துக் காட்டுவது தான் எங்களுடைய நோக்கம். நீங்கள் உறுதிமொழிகளைக் கொடுத்துவிட்டு ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். பல உறுதிமொழிகள் நிறைவேற்றாத உறுதிமொழிகளாக இருக்கின்றன. அதைப்போலதான் இதுவும் இருக்குமோ என்று நினைக்கிறோம். ஏழை எளிய விவசாயிகளைக் காப்பாற்றக் கூடிய வகையிலே சட்டத்தைக் கொண்டுவருவதாக இருந்தால் அதை ஆதரிக்கிறோம். இப்போது கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத்தை நாங்கள் ஆதரிக்க முடியாது என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நேற்று முன்தினம் சற்றேறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் ஆங்கில ஏகாதிபத்தியத்தினர் விட்டுச் சென்ற ரெவின்யூ போர்டை எடுத்து, இந்தியாவின் இணையற்ற இராஜதந்திரியான இராஜகோபாலாச்சாரியார் அவர்களே இரண்டு தடவை முயற்சி செய்தும் முடியாத காரியத்தை செய்து, அதற்கான சட்டத்தை அ. இ. அண்ணா தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்து நிறைவேற்றிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி நடக்கின்ற பொற்காலத்தில், ஏற்கெனவே இதே சட்ட மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்ற வேண்டு என்ற கனவு கண்டு, அந்தக் கனவை நனவாக்குகின்ற வகையிலேயும், திரு. பி. இராமமூர்த்தி போன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும், திரு. கல்யாணசுந்தரம்



போன்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும், இன்றையதினம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் அன்றையதினம் தமிழ் தேசிய கட்சியின் தலைவராகவும் இருந்த எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் நிறைவேற்ற வேண்டும் என்று இதே மாமன்றத்தில் ஒலித்த கருத்தை நிறைவேற்றுகின்ற வகையிலேயும் இன்றையதினம் அணிக்கு அணி சேர்ப்பது போல் இந்தச் சட்டத்தின் பிரிவை இங்கே கொண்டுவந்திருக்கின்றார்கள்.

1980 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கொண்டுவரப்படுகின்ற 68ஆவது நில உச்சவரம்பு பற்றிய 2-வது திருத்த சட்டம் வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது இதிலே குழப்பங்கள் ஏற்படும் என்றும், இது சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் சொன்னார்கள். நமது நாட்டில் சமதர்மத்தைப் பாதுகாப்பதற்காக, ஒரு சிலரிடம் செல்வம் குவிந்திருக்கின்ற நிலையை மாற்றுவதற்காக, உற்பத்தி செய்கின்ற நிலத்தைப் பகிர்ந்து பலரும் அனுபவிக்கும் விதத்தில் நாட்டு மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற உன்னதமான திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் ஜமீன் ஒழிக்கப்பட்டது, சமஸ்தானங்கள் ஒழிக்கப்பட்டன, இனாம்கள் ஒழிக்கப்பட்டன, 14 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன, மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது, அப்போதெல்லாம் ஏற்படாத சிக்கல் இந்த சட்டத்தினால் எப்படி வரும் என்று எனக்குத் தெரியவில்லை. 1962ஆவது வருஷம் கொண்டுவரப்பட்ட 61-வது நிலச்சீர் திருத்த உச்சவரம்பு சட்டத்தினால் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் உபரியாகக் கிடைக்கும் என்று அப்போது ஆண்டுகொண்டிருந்த மாநில அமைச்சரவர்களிடம் கேட்டபோது சுமார் 5 அல்லது 6 இலட்சம் ஏக்கர் கிடைக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய தினம் அந்தச் சட்டத்தினால் கிடைத்த உபரி நிலங்கள் ஒரு இலட்சத்து சொச்சம்தான் என்கிறபோது அந்தச் சிக்கல் ஏற்கெனவே இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே, சிக்கல் ஏற்படும் என்பதாலேயே மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த சட்டமன்றம் நீதிமன்றம் அல்ல. ஒரு சட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது அந்த சட்டத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல குறைகள் இருந்தால் அது குறித்து செயல்பட வேண்டியது வழக்கு மன்றம்தானே தவிர சட்டமன்றம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சட்டத்தை நாம் நிறைவேற்றுகின்றபோதே அந்தச் சட்டம் செல்லாது என்று தெரிந்த பிறகும் நாம் நிறைவேற்றக்கூடிய வகையில் அந்தக் குற்றத்தை இந்த மன்றம் செய்யக்கூடாது. மேலும் இதை வழக்கறிஞராக இருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர் சொல்லக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். சட்டத்தை நிறைவேற்றுகின்றபோது சங்தேகங்கள் ஏற்பட்டால் அட்வகேட் ஜெனரலைக் கூப்பிட்டு இது சம்பந்தமாக உறுப்பினர்கள் கேள்வி கேட்பார்கள். இப்படி இப்படி இருக்கலாமா என்று கேட்பார்கள். அவ்வாறு கேட்கக்கூடிய கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்வார்கள். இந்த மாதிரி நடைமுறை நாடாளுமன்றத்திலேயும் உண்டு, சட்டமன்றத்திலேயும் உண்டு. ஆனால், இப்போது அந்தமாதிரி எதுவும் நடைபெறவில்லை. அட்வகேட் ஜெனரல் அவர்கள் அந்த சட்டம் செல்லாமல்போகும் என்று சொன்னால் அதற்குப் பிறகு அதை நிறைவேற்றக் கூடாது. ஆகவே, அந்த வகையிலே நன்றாகப் பரிசீலித்து செய்யவேண்டும் என்று . . . . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா): அதை விளக்குவதற்காகத்தான் வருகிறார், ஆகவே, உறுப்பினர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சரவை இந்தச்சட்டம் தோற்கும், கோர்ட்டிலே செல்லாது என்று நினைத்து கொண்டுவரவில்லை. கோர்ட்டிலே செல்லும் என்று மனதார எண்ணிக் கொண்டுதான் கொண்டுவந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மத்திய அரசாலோ அல்லது மாநில அரசாலோ ஒரு சட்டம் கொண்டுவரப்படுகின்றபோது அது ஹைகோர்ட்டிலே செல்லாது, சுப்ரீம் கோர்ட்டிலே செல்லாது, நாம் கேலிக்குரியவர்களாக ஆவோம் என்று நாமே விமர்சிப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

61-வது நிலச்சீர்திருத்த உச்சவரம்பு சட்டம் சம்பந்தமாக 20 ஆண்டுகள் கழிந்து சுப்ரீம் கோர்ட்டிலே சில மாதங்களுக்கு முன்பு மினர்வா மில்ஸ் என்ற பிரபல வழக்கில் பிரபல வழக்கறிஞர் பால்கிவாலா அவர்கள் வழக்காடியதையும், அதன்பிறகு நில உச்சவரம்பு சட்டங்கள் செல்லும் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும் நன்றாகத் தெரியும். ஆகவே, சட்டம் கொண்டுவரப்படுகின்றபோது வழக்கு மன்றங்களைப்பற்றி யோசிக்காமல் தேர்தல்நேரத்தில் புரட்சித் தலைவரவர்கள் சொன்ன வாக்குறுதிகளையும்,





சட்டமன்றத்தில் சொன்ன சொற்களையும் நாம் நிறைவேற்ற முன்வரவேண்டும் என்ற அந்த முயற்சியில்தான் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதைப் பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50)

சிக்கல் இருக்கிறது குழப்பம் வரும் என்று பல பேர் சொன்னார்கள். ஆனால் ஒரு பழமொழி சொல்வார்கள். 'கார்டியன் நாட்' என்று சொல்லி அந்த முடிச்சை யாராலும் அவிழ்க்க முடியவில்லை என்று சொன்னபோது, கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாண்டர் சொன்னானாம். 'அந்த முடிச்சை இங்கே கொண்டு வா, என் வாளையும் எடுத்து வா, அந்த முடிச்சை நான் அவிழ்க்கிறேன்' என்று சொன்னானாம். வாளால் ஒரே வீச்சில் வெட்டி அந்த முடிச்சை அழிவித்தான் என்று சொல்வார்கள்.

இன்றைய தினம் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு புதிய திருத்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அதில் பல்வேறு செக்ஷன்கள் இல்லை. 20 செக்ஷன்கள்,30 செக்ஷன்கள் என்றில்லாமல் அதில் ஒரே செக்ஷன் 23(ஏ) என்ற ஒரே ஒரு செக்ஷனை திறமையாகக் கொண்டு வந்ததற்கும் அந்த செக்ஷனைக் கொண்டு வந்து பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை நினைவாக்கியமைக்காகவும் வருவாய்த் துறை அமைச்சரை நான் பாராட்டுகிறேன்.

இப்படி 23(ஏ) செக்ஷனைப் பாராட்டுவதற்குக் காரணம் என்னவென்றால், செக்ஷன்கள் 22, 23ன் கீழ் 6—4—60-க்குமுன் இருந்த நிலங்கள் பினாமி பெயர்களில் இருந்தால், அந்த அவற்றை பினாமி என்று சொல்லி, அவற்றைப் பெறுவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது, அப்படிச் சொல்வது செல்லாது,அவருக்கு அதிகாரம் இல்லை என்று இருந்ததை மாற்றி 23 (ஏ) செக்ஷனில் அவருக்கு அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

அதிலே இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜனநாயகம் என்பதற்கு உதாரணமாக, மக்களால், மக்களுக்காக, மக்கள் ஆட்சி செய்ய வேண்டும் என்கிற அந்த ஜனநாயகம் முழுமணம் கமழும் விதத்தில் இதிலே புகுத்தி இருக்கிறார்கள். இதிலே ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு உபசெக்ஷனை சேர்த்திருக்கிறார்கள். மக்கள் குழுவான அதிலே மாவட்ட துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்திற்கு குறையாத வருவாய்த்துறை அதிகாரி ஒருவர்; பாடுபடும் விவசாய தொழிலாளர்கள் இருவர்—

இவர்களில் ஒருவர் அரிசன வகுப்பை அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்திருப்பார்—சமூகத் தொண்டர்கள் மூவர்; மற்ற நபர்கள் யாரை சேர்த்தால் நலம் என்று கருதப்படுகிறதோ அவர்கள் இந்த குழுவில் சேர்க்கப்படவேண்டும் என்று அந்த உப செக்ஷனில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் குழுவில் உள்ளவர்கள் வெறும் வெற்று ஆலோசனை அளிக்காமல், அலங்கார குழுவாக இல்லாமல் எங்கெங்கே பினாமி நிலங்கள் இருக்கின்றன; நிலமாற்றங்கள் எங்கெங்கே செய்யப்பெற்றிருக்கின்றன போன்ற விவரங்களை சேகரித்து ஆலோசனை கூறும் அதிகாரம் பெற்ற குழுவாக இயங்கும் விதத்தில் ஷெல் (S..all) இதற்கு 'செல்' என்ற ஒரு வார்த்தையைப் போட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மனமார பாராட்டுகிறேன். மக்கள் குழு பரிந்துரைகளை ஆதரைஸ்டு ஆபீசர் கண்டிப்பாக கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்தபட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

1961-ம் ஆண்டில் இந்தச் சட்டம் வந்தபோது, சென்ற தடவை காங்கிரஸ் கட்சியினுடைய சட்டசபை தலைவராக இருந்த ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் செலக்ட் கமிட்டியின் டிசெண்டிங் நோட்டில் (Diss n ing Not ) பேசினார்கள் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ''1952ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தல் காலத்திலேயே பேசப்பட்டது. அந் நாளிலிருந்தே நிலச் சொந்தக்காரர்கள் விழிப்புடனிருந்து சட்டம் வரப்போவதை அனுசரித்து பலவித பினாமி சாசனப் பத்திரங்கள், இன்னும் பலவிதத் தந்திரங்கள் செய்து தங்களது உபரி நிலங்களை பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கிவிட்டார்கள். எனவே, மசோதாவை 1952 ஆம் ஆண்டிலிருந்தே அமுலுக்கு வரும்படி செய்ய வேண்டும்'' என்று ஏ. ஆர். மாரித்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு அன்று முதலமைச்சராக இருந்த திரு. பக்தவச்சலம் அவர்கள் கூறியதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், ''எனக்குத் தெரியும், தஞ்சையில் பல நிலங்களை மாற்றியிருக்கிறார்கள். பினாமியாக ஆக்கியிருக்கிறார்கள். நான் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கவில்லை, கொர்டுக்கமாட்டேன் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்'' என்று கூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.





அந்தக் காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ''தேம்ஸ் நதிக்கரையில், நைல் நதிக்கரையில் உள்ள பிற நாடுகளெல்லாம் தமிழகத்தில், அல்லது சென்னை ராஜ்யத்தில் நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பாராட்டி அவர்களுடைய பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். ஆனால், கடைசியில் அது 600 சொச்சம் மிராசுதாரர்களுக்குதான் உச்சவரம்பு என்று சொல்லும்படியாக வந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால், தலைமகளுக்கு வளைகாப்பு செய்து வைத்து பாலன் பிறக்கப் போகிறான், பிறக்கப் போகிறான் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்து, பத்து மாதமும் கழிந்து மேலும் ஒரு பத்து மாதமும் கழிந்து கடைசியில் ஸ்டில் பார்ன் பேபி என்ற வகையில் இறந்து பிறந்தது என்று சொன்னால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது, புலி வருகிறது புலி வருகிறது என்று சொல்லி, உண்மையாகவே புலி வரப்போகிறது என்று எதிர்பார்த்த நேரத்தில் கடைசியில் பேப்பர் டைகர் என்று சொல்வார்களே, அது மாதிரி பஞ்சடைத்த புலியாகத்தான் அது வந்து இருக்கிறது. ஆகவேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், இது உச்சவரம்பு சட்டம் இல்லை, மிச்ச வரம்பு சட்டம் என்று.

இரண்டு உதாரணங்களை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், அரசாங்கமே இறைச்சிக் கடை வைக்கலாம் என்று சொன்னபோது அந்தக் காலத்தில் ஒரு அமைச்சர் சொன்னார்; இறைச்சிக் கடைகள் வைப்பதற்கு மாடுகளை வளர்க்க வேண்டுமானால் அந்த மாடுகளை வளர்க்க மேய்ச்சல் நிலம் அண்ணாதுரை தோட்டத்திலா இருக்கிறது என்று கேட்டார்கள். பாவம். 1961ம் ஆண்டு 6–4–1960-ல் இருந்து அமலுக்கு வரவேண்டும் என்று கொண்டு வரப்பட்ட சட்டம் கூட சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறது. ஷுகர் பாக்டரிகளுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். அதேபோல் மேய்ச்சல் நிலங்களுக்கு எவ்வளவு ஏக்கர் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம் என்று பிரபல மிராசுதாரர்களுக்கு 1958-ம் ஆண்டில் எப்படித் தெரிந்தது? அண்ணா அவர்களின் தோட்டத்தில் வேண்டுமானால் மேய்ச்சல் நிலம் வேண்டாம். ஆனால் 1960–61-ல் வருகிற சட்டத்தில் எவ்வளவு நிலங்கள் வேண்டுமானாலும் மேய்ச்சல் நிலங்களுக்காக, சர்க்கரை ஆலைகளுக்காக நிலங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று யார்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1980 ஆகஸ்ட் 8

சொன்னார்கள்? 1956ல் தஞ்சையில் ஒரு பிரபல மிராசுதார் மூவாயிரம் ஏக்கர் நிலங்கள் சர்க்கரை ஆலைக்காக லைசென்ஸ் வாங்கி எழுதி வைத்தார், அந்த பிரபல மிராசுதார் 23 லட்சம் ரூபாய் மதிப்புள்ள உபகரணங்களை, இயந்திரங்களை எப்படி வரவழைத்தார்? இவைகளைப் பார்க்கும்போது நிச்சயமாக 6—4—1960-க்கு முன்பே சந்தேகத்திற்குரிய நிலம் எழுதி வைப்பது நடந்திருக்கின்றன என்பது நன்றாகத் தெரிகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

நான் முதலில் சொன்னதுபோல் ஏற்கனவே சட்டம் கொண்டு வரப்படுகிறபோது ஐந்து லட்சம், ஆறு லட்சம் ஏக்கர் உபரி நிலங்கள் கிடைக்கும் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு லட்சத்து சொச்சம் ஏக்கர் நிலங்கள்தான் கிடைத்திருக்கிறது என்றால் அப்படி குறைவதற்குக் காரணம் பினாமி டிரான்ஸாக்ஷன் நடந்திருக்கிறது என்பது நிரூபணமாகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை, ஆனால் சிறு விவசாயிகள் கஷ்டப்படக் கூடாது, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காக அவர்கள் வக்காலத்து வாங்குவதுபோல் பேசினார்கள்.

ஆதி திராவிட மக்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதில் எந்தக் கட்சிக்கும் பின்வாங்கியதில்லை ஆளுங் கட்சி. அவர்களுக்காக அக்கறை காட்டுவதில் எங்கள் முதல்வர் புரட்சித் தலைவர் யாருக்கும் பின்வாங்கியவர்கள் அல்ல. ஆகவே, அதற்காக அவர்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை.

நெல்லிக்குப்பம் தொகுதியில் பகண்டை, கோழிப்பாக்கம், எய்தனூர் எனும் நெசனூர் பாப்பம்மாள் எஸ்டேட் என்று பல எஸ்டேட்கள் இருக்கின்றன. நான் சார்ந்திருக்கிற சிதம்பரம் தாலூகாவில், தஞ்சை ஜில்லா மாயூரத்தில் கடலங்குடி ஜமீனுக்குச் சொந்தமான நிலங்கள் ஓமாங்குலி, குணவாசல் கிராமங்களில் அதிகப்படியான உபரி நிலங்கள் கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகிறார், நாங்கள் இதை எதிர்க்கவில்லை என்று, நாங்கள் இராமாயணத்தை ஆதரிக்கிறோம் ஆனால் பெருமாள் கோவிலை இடிப்போம் என்று சொல்வது போலிருக்கிறது. நாங்கள் மாநில சுயாட்சியை ஆதரிக்கிறோம், ஆனால் அதிக அதிகாரங்களைக் கேட்காதீர்கள் என்று சொல்வதுபோல் இருக்கிறது. இந்த பினாமி நிலங்களை எடுத்துக் கொள்வதை எதிர்க்கவில்லை, ஆனால் அதை ஆட்சேபிக்கிறோம் என்று சொல்கிறார்கள்.



1980 ஆகஸ்ட் 8]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில ஊர்களை சொன்னார்கள். அந்த பாப்பம்மாள் எஸ்டேட்டில் இருக்கிற நிலத்தை எடுத்து ஹரிஜனங்களுக்குக் கொடுத்தாகி விட்டது. நாங்கள் கொடுப்பதற்கு எவ்வளவு பாடுபட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த பாப்பம்மாள் எஸ்டேட் நிலங்களை எடுக்கக் கூடாது என்று அவர்கள் வந்தார்களோ என்னவோ தெரியாது. நாங்கள் அதை எடுத்துக் கொடுக்க எவ்வளவோ பாடுபட்டோம்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : பாப்பம்மாள் எஸ்டேட் நிலத்தை எடுக்கக்கூடாது என்று முயற்சி செய்தார்கள் என்று நான் குற்றஞ்சாட்டவில்லை. மாறாக நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாப்பம்மாள் எஸ்டேட் நிலத்தை 19, 20 ஹரிஜனங்களுக்குச் கொடுத்து பட்டா கொடுக்காமல் இருந்ததை இந்த அரசிடம் வி. வி. எஸ். தான் வாதாடி பத்து பேர்களுக்கு பட்டா வாங்கி கொடுத்திருக்கிறான் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் இதை எதிர்க்கவில்லை என்று சொல்லி இதில் சிக்கல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

1961ம் ஆண்டில் இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். ''மேல் வகுப்பைச் சார்ந்தவர்கள் தாங்களே பங்கிட்டுக் கொள்ளக் கூடிய வகையில் உறவினர்களுக்கிடையே பங்கிட்டு அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தை 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலுக்குக் கொண்டுவருவதன்மூலம் இடமளித்துவிட்டார்கள் என்பதை நான் வலியுறுத்தி இதைக் கண்டிக்கிறேன்'' என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 1—00)

இந்த 10 ஆண்டுக் காலத்தில் காங்கிரசை எச்சரிக்கின்ற முறையில் நடத்திய பிரசாரத்தில் மிராசுதாரர்கள் விழிப்புணர்ச்சி பெற்று தங்கள் நிலங்களையெல்லாம் பிரித்து, பக்குவமாகத் தங்களுடைய உற்றார் உறவினர்கள் பெயர்களிலே எழுதிவிட்டார்கள். இந்தச் சட்டம் உண்மையாகவே 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி முதல் அமுலுக்கு வராமல், 1955-ஆம் ஆண்டிலிருந்து அல்லது சற்றேறக்குறைய 1956 ஆம் ஆண்டிற்குள்ளாக ஒரு நாளை குறிப்பிட்டு, அந்தத் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வரவேண்டும் என்று சொன்னால்தான், இந்தச் சட்டம் நில உச்ச வரம்புச் சட்டமாகும் என்றார்கள். ஆனால், இன்றைய தினம் இதை பொறுக்குக் குழுவிற்குக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். இன்னும் பல திருத்தங்கள் செய்யவேண்டும் என்று, பல திருத்தங்களைச்

சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டம் 1961-ல் கொண்டுவரப்பட்டபோது, அன்றைய தினம் எதிர்க கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தங்கள் என்னவென்று சொன்னால், 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வரவேண்டும் என்ற ஒரு திருத்தமும், அதைப் போலவே 6—4—1960 -லிருந்து அமுலுக்கு வர வேண்டுமென்று இல்லாமல், 1955-ல் இருந்தே அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்றும், இரண்டு திருத்தங்களைக் கொண்டுவந்து, இந்த இரண்டு திருத்தங்களிலே ஏதாவது ஒரு திருத்தத்தையாவது ஏற்றுக்கொண்டால்தான் இருப்போம் என்றும், அன்றிருந்த சர்க்கார் இந்த இரண்டு திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ளாததால், வெளி நடப்புச் செய்தார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, 1961 ஆம் வருஷமே பினாமி டிரான்ஸாக்ஷன் நடந்திருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால், அதை எப்படி ரீக்குவது அல்லது 20 ஆண்டுக் காலமாக அனுபவித்தவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்படுகிறார்களா ? நான் சொல்கிறேன், உண்மையிலேயே பினாமி டிரான்ஸாக்ஷன் நடந்திருக்குமானால், 1—1—1955-லிருந்து 4—6—1960 வரை இந்த இடைக்காலத்திலே நடந்திருந்தால், நிலங்கள் பரவலாக்கப்பட வேண்டும், ஒரு சிலரிடம் குவிந்திருக்கக்கூடாது என்ற லட்சியமே அமுல்படுத்தப்படாமல், தோற்கடிக்கப்பட வேண்டுமென்கிற முறையிலே பல பேர்கள் பலவிதமான பினாமி டிரான்ஸாக்ஷன்களைச் செய்ததால், அதனால் பலனடையக்கூடிய பல்லாயிரக்கணக்கான உழைக்கின்ற தொழிலாளர்கள், ஏழை எளிய விவசாயிகள், 20 வருடமாக பலனை பெறமுடியாமல் செய்திருப்பது கொடுமையல்லவா என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு பணிவன்புடன் கொண்டுவர விரும்புகிறேன். இதைத்தான் பேராசிரியர் அவர்கள் அந்தக் காலத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஏழைகளுக்கு உண்மையிலேயே சேரவேண்டிய நிலம் சேராமல், தனக்கும், தன்னுடைய சொந்தக்காரர்களுக்கு எழுதி வைக்கப்பட்டது என்று அந்தக் காலத்திலேயே பேராசிரியர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இது ஒரு புது வகை வழிப்பறி கொள்ளையாகும் என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் ஒரு அருமையான சட்டம், முற்போக்கான சட்டம், எந்த விதமான சிக்கலும் இல்லாத ஒரு தெளிவான, ஒரே ஒரு செக்ஷனில் மாத்திரம் சொல்லுகின்ற ஒரு சட்டமாகும்.

இந்தச் சட்ட நோக்கத்தின் காரணத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய ஆர்டிகிள்





39 பி. சி. பிரகாரம், செல்வம் ஒருசிலரிடம் குவிந்திருக்கக் கூடாது. உற்பத்திக்கு உபயோகப்படும் நிலம் ஒருவரிடத்திலே சிக்கிக் கொள்ளக்கூடாது, அது பலரும் அனுபவிக்கும் வண்ணம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று சொன்னதோடு, சட்ட முன்வடிவின் காரணங்கள் விளக்கத்திலே 1961-ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா நில உச்ச வரம்பு சட்டத்தின் மூலம் அதிக உபரி நிலம் கிடைக்காமல் குறைக்கும் நோக்கத்தில் 1—1—1958 முதல் 6—4—1960 அதாவது 2 வருடம், 3 மாதம், சொச்ச நாட்களில் நிலங்கள் கைமாறி கிடைக்க வேண்டிய உபரி நிலம் குறைந்துவிட்டது என்பதையெல்லாம் தெளிவாக எடுத்துக் கூறி அந்தக் குறையை போக்க இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது என்று சொல்லியும் இன்று இந்தச் சட்டத்தை எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பது என்பது நியாயமில்லை என்பதை நான் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு தெரியாதா, அவர்கள் விரும்பி இருந்திருந்தால் கொண்டு வந்திருக்க மாட்டாரா என்றார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் பேரறிஞர், அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் நில உச்சவரம்பை 15 ஏக்கர் என்று கொண்டுவருவதை விரும்பாமலா இருந்திருப்பார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருக்கிறபோது, நோய்வாய்ப்பட்டு இருக்கிறபோது 15 ஏக்கர் உச்ச வரம்பு சட்டம் ஒன்று கொண்டுவராததால் அவருக்கு இஷ்டமில்லை என்று சொல்லிவிட முடியுமா, அவர் காலத்தில் கொண்டுவராத இந்தச் சட்டத்தை அவர் விரும்பவில்லை என்று வாதிடுவது இன்றைக்கு வங்கக் கடற்கரையில் பேசாத நிலையிலே தூங்கிக் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி இந்த சட்ட மன்றத்திலே பேசுவது அவருக்கு மாசு கற்பிப்பதாகும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் அப்படி சொல்லவில்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்றுதான் சொன்னேன். ....

திரு வி.வி. சுவாமிநாதன் : ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்டைப் பற்றிச் சொன்னார்கள். ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டத்தை நிறைவேற்ற இந்த சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா, என்பதுதான் பிரச்னை. உரிமை இருக்கிறது இதை எதிர்கட்சி உறுப்பினர் நண்பர் கிருஷ்ணமூர்த்தியும் ஒத்துக்கொண்டிருக்கிறார். எனவே, அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோம். ஆகவே கோர்ட்டுக்குப் பயந்துகொண்டு சரியில்லை என்று சொல்லிவிட முடியாது.

[திரு. வீ. வி. சுவாமிநாதன்] [1980 ஆகஸ்ட் 8

14 வங்கிகளை தேசியமயமாக்குவோம் என்று பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் செய்ததை சுப்ரீம் கோர்ட் ஸ்ட்ரக் டவுன் (Struck down) செய்தது வழக்கு மன்றத்திலே, அப்படி ஒரு தீர்ப்பு கொடுக்கிறார்கள் என்பதற்காக வங்கிகளை தேசியமயமாக்கும் சட்டத்தை கொண்டுவராமலா இருந்தது? மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், மக்களுக்கு நாம் மனமார நன்மை செய்ய வேண்டுமென்ற நம்பியதை சட்டமாக செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

குறிப்பாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த சட்டம் வருகின்ற போது, இரண்டைச் சொன்னார்கள். ஒன்று நில உச்சவரம்பு 15 ஏக்கராக இருக்கவேண்டும். அந்த உச்சவரம்பு சட்டமும் 6—1—1960-க்கு முன்பிருந்து அமுலுக்கு வரவேண்டும்.

கடந்த காலத்தில் அந்த இரண்டில் ஒரு பகுதியான 15 ஏக்கர் உச்ச வரம்பு சட்டத்தை அதாவது காங்கிரஸ் கட்சியினர் செய்யாததில் பாதியை திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றியது. காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் செய்யாததை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவர் அரசு செய்ய முன்வந்திருக்கிறது. 1—1—1958-க்குப் பிறகு பினாமி டிரான்சாக்ஷன் நடந்திருந்தால் அது செல்லாது என்று அறிவிக்க ஆதரைஸ்டு ஆபீசருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அப்போது நியாயமான டிரான்சாக்ஷன்களும் நடந்திருக்கும் என்று சொன்னார்கள். ஆதரைஸ்டு ஆபீசர் நிலம் செல்லாது என்று சொல்லுவதற்கு முன் அதைப் பற்றிய விசாரணை நடத்த வேண்டும். மனமார நம்ப வேண்டும். அவர் தீர்ப்பு இறுதியானதும் அல்ல. மேல் முறையீடுகள் இருக்கின்றன. ஆகவே, பல்வேறு பாதுகாப்புகள் இருக்கின்றன என்று கூறி ரத்தம் இல்லாமல் கொண்டுவந்த இந்த புரட்சிகரமான சட்டத்தை வரவேற்கிறேன். அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*<u>திரு எல். இளையபெருமாள்:</u> தலைவர் அவர்களே, இன்று இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். 1908ஆம் ஆண்டே, அந்நியர்கள் இருந்த காலத்திலேயே மக்களுக்கு நியாயம் செய்ய இதுபோன்ற ஒரு சட்டம் தேவை என்று உணர்ந்திருந்தார்கள். நிலத்தின் விளைபொருள்கள் ஒருசிலரிடத்தில் குவியக் கூடாது என்ற நோக்கத்தில் 1936 ஆம் ஆண்டு 1947 ஆம் ஆண்டு, 1948 ஆம் ஆண்டு என்று பல நிலைகளில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

1980 ஆகஸ்டு 8] [திரு. எல். இளைய பெருமாள்]

இந்தச் சட்டம் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது. இந்தச் சட்டத்தினால் விளைபொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். உண்மையாக, நிலத்திலே பயிரிடும் மகனுக்கு நிலம் இருந்தால்தான் வஞ்சனையற்றுப் பணிபுரிவான். இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே சட்டத்தைக் காட்டி, கோர்ட்டுகளைச் சொல்லி அல்லது நீதிபதிகளைச் சொல்லி பயமுறுத்துவது மக்களுக்குச் செய்ய வேண்டிய நியாய உணர்வு களை மறைக்கிறோமோ என்று எண்ணுகிற நிலைமையை உருவாக்குகிறது.

பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று நான் சொல்லியிருக்கிறேன். அருமைச் சகோதரர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அதே சமயத்தில் சொன்னார்—எனக்கும் அவருக்கும் தெரிந்த விஷயத்தை மாமன்றத்தில் சொல்லிவிட்டதால்—பதில் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என்னுடைய சொந்தக்காரர்கள் அப்புடி நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார், அதை நான் ஆதரிக்கவில்லை, தைரியமாக எதிர்க்கிறேன், அவர்களிடமிருந்து அந்த நிலத்தைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று கூறுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர், எங்கள் நகரைச் சேர்ந்த திரு. வி. வி. சாமிநாதன் அவர்கள் காங்கிரஸ் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்ற வகையிலே கருத்தைச் சொன்னார்கள். 1935 ஆம் ஆண்டிலேயே நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்று சொன்னது க்ாங்கிரஸ் கட்சி. 1958 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சிதான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. 1948 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற ஓராண்டில் காங்கிரஸ் கட்சிதான் மிராசுதார்கள், மிட்டாதார்கள், ஜமீன்தார்கள் இருக்கக்கூடாது என்ற வகையிலே சட்டத்தைக் கொண்டு வந்தது. பாரதி 'உண்டு கொழுத்து வேலை செய்யாத மனிதனுக்கு நீதி வழங்க மாட்டேன்' என்று சொன்னது போல் அந்தக் காரியங்களை அன்று தைரியமாகச் செய்தது காங்கிரஸ் அரசு, காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் தலைவர்கள் என்பதை வழக்கறிஞர் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று கருதுகிறேன்.

சகோதரர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவரும் பாட்டாளி சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று நம்புகிறேன். இரண்டு தடவை நீதிக்காகப் போராடி, சமுதாய சீர்திருத்தத்திற்காகப் போராடி பாதிக்கப்பட்டவர் சொந்த முறையில். அவருக்கும் எனக்கும் மட்டுமே அந்த ரகசியம் தெரிந்திருக்கட்டும். என்னுடைய சொந்தக்காரர்கள்

அவர் சொன்னபடி நிலத்தை வைத்திருந்தாலும், ஏமாற்றி வைத்திருந்தாலும், அதைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–10.)

அல்லது நீ கொஞ்சம் எடுத்துக்கொள், எனக்குக் கொஞ்சம் கொடு என்று சொல்லிக்கொண்டு முதலாளியும் தொழிலாளியும் உறவு வைத்து இருந்தாலும், நடக்கிற நிலைமைகள். இதற்கு என்ன காரணம்? இந்தச் சட்டத்தால் ஏற்படுகிற நன்மைகளை கொலைசெய்யக்கூடிய கொலை குற்றத்தை செய்தவர்கள், வாங்கியவர்களும் விற்றவர்களும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே துணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டத்தை அரசு கொண்டுவரும் என்று தெரிந்து அது காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும்சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, சட்டம் வருவதை புத்திசாலித்தனமாக தன்னுடைய கூர்மையான அறிவைப் பயன்படுத்தி, பூஷ்வா கூட்டத்துடன் சேருவதைப் பயன்படுத்திக்கொண்டு செய்துவிட்டார்கள், ஆகவே இந்த அரசு, இந்த மாமன்றம், மக்களுடைய பிரதிநிதிகள் அதைச் சட்டமாகக் கொண்டுவரமுடியாது என்று பயமுறுத்த வேண்டாம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போன்ற ஒரு சட்டம் முன்பு வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி என்று நினைக்கிறேன், அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட் என்று கொண்டுவந்து சிலர் சிறையில் வைக்கப்பட்டார்கள். காரணம் உண்மையாக இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம், இருந்தாலும் அதை சென்னையிலே உள்ள ஹைகோர்ட்டிற்கு ஒரு நண்பர் கொண்டுபோய் பண்டமன்டல் ரைட் பிரகாரம் நியாயம் அதிலே உண்டா இல்லையா என்று கேட்டு வெற்றி பெற்றார்கள். அது அரசுக்குத் தோல்வியாகத்தான் இருந்தது. அதனால் அரசுக்கு அவமானம் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. அரசு தேசத்திற்கு பாதுகாப்பு என்ற முறையிலே அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அமல் செய்கிற அதிகாரிகள், தெரிந்தோ தெரியாமலோ நம்பிக்கை கொண்டோ, நம்பாமலோ செய்துவிட்டார்கள். அந்த வழக்கை கொண்டுசென்று வெற்றிபெற்ற நண்பர் திரு. பி. வி. ராவ் என்பவர். அவர் வெற்றி பெற்றார், அரசு தோற்றுவிட்டது.

ஆனால் அரசு தோற்றுவிட்டது என்பதற்காக அதை பயமுறுத்தியோ அவமானப்படுத்தியோ சொல்ல வேண்டியதில்லை என்பதை நான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நீங்கள் நான் பேசியதை வைத்துச் சொல்கிறீர்கள், அதனால் தான் எழுந்திருக்கிறேன் இல்லாவிட்டால் எழுந்திருக்க வேண்டியதில்லை. நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது இந்த் அவையிலே 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதியில் தான் வந்தது. கெஜட்டில் பப்ளிஷ் ஆனது 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதி தான். 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதி வருவதை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக எப்படி 58, 59-இல் ஒருவன் செய்யமுடியும். அன்றைய தினம் யாரையும் ஏமாற்றவேண்டுமென்று செய்யப்படவில்லை.

திரு. எல். இளைய பெருமாள் : அந்த நோக்கம் இல்லை என்று சொல்கிறார்கள். நான் ஆழமாகச் செல்லவில்லை. இதை 1952-லிருந்தே கொண்டுவந்தால் கூட நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அனுமதி கொடுக்க மத்திய அரசுக்கு உரிமை இருக்கிறது. மத்திய அரசும் அதை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

பினாமி டிரான்ஸாக்ஷன்ஸ் என்ற முறையிலே நடந்திருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவிலே மேய்ச்சல் தரை என்ற பெயராலே பல இடங்களிலே இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவிலே கரும்புக்கு, பாடசாலைகளுக்கு, தேவார பாடசாலைகளுக்கு, பழத் தோட்டங்களுக்கு என்ற பெயரால் இருக்கிறது. இந்த நேரத்திலே நான் ஒரு சந்தோஷமான செய்தியைச் சொல்லவிரும்புகிறேன். அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட நான் திசை திருப்புகிறேன் என்று சொன்னார்கள். தஞ்சை ஜில்லாவிலே எங்கே யார் பினாமி நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை சர்வோதய தியாகத் தொண்டர்கள்மூலம் தயாரித்த ஒரு லிஸ்டை நம்முடைய ரெவின்யூ துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டை போன்ற இடங்களிலே இப்படி நடந்து இருக்கிறது. ஏன் சென்னையிலே கூட அரசாங்க நிலங்களை அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள், அன்றைக்கு

அதிகாரத்திலே இருந்தவர்கள், 99 வருஷ குத்தகை என்று சொல்லி, நல்ல விலை போகக்கூடிய நிலங்களை, சென்னை நகரம் 7 இலட்சத்திலிருந்து 37 இலட்சமாக மக்கள் தொகை கொண்டதாக வந்துவிட்ட பிறகும், வீடற்ற, நாதியற்ற மக்கள் இருக்கின்ற நிலையில் குடியிருப்பதற்கு ஏற்ற வசதி உள்ள உயர்ந்த ரகமான நிலங்களை, 99 ஆண்டுகளுக்கு என்ற நிலையில்கூடக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பினாமி என்று நான் சொல்லவில்லை, புத்தி சாலித்தனமாக இருந்தவர்கள், பலனை அடையக்கூடியவர்கள், அவர்கள் தங்களுக்கு உதவியவர்களுக்குப் பதில் உபகாரம் செய்யவேண்டுமே என்பதற்காக 99 ஆண்டு குத்தகை வாரம் என்ற முறையில் மாநில அரசாங்கமாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், இதையும் பினாமியாகக் கருத வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை—இவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டை ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும், சென்னை மாநகராட்சியிலும் இப்படி நடந்திருக்கிறது. சட்டத்தின் பெயரால் தவறுகள் நடத்திருக்கின்றன. இதனை அமைச்சரவர்கள் திருத்துவார்கள்; அதற்கான வாய்ப்புவருகிறது; நீதி வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

மக்கள் குழு அமைத்தல் என்பதை இங்கே பேசிய பலரும் ஒத்துக் கொண்டார்கள். அரசு சார்பிலே பேசியவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதை வரவேற்பதற்குச் சந்தோஷப்படுகிறேன், நன்றி சொல்கிறேன். அதேநேரத்தில் ஒருதலைப்பட்சமாக இல்லாமல் தீர்க்கமாக கவனித்து நல்லமுறையில் அமைச்சரவர்கள் செயவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

சோஷியல் ஒர்க்கர்ஸ் என்று சொல்வதில் பல பிரிவுகள் இருக்கும். என்ன டெஃபனிஷன் அதற்குக் கொடுக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. தம்முடைய பின்னுரையில் அமைச்சரவர்கள் சொல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சோஷியல் ஒர்க்கர்ஸ் என்பதில், உண்மையான சோஷியல் ஒர்க்கர்ஸ்-ஆக இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த வகையில், சர்வோதய சங்கத்தைச் சேர்ந்தவர்கள், தியாக உணர்வோடு இருப்பவர்கள், அவர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டால் அமைச்சரவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். அந்த வழியர்களெல்லாம் தியாகத்தில் புடம் போட்டவர்கள்; சர்வகட்சியையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்





பட்ட மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கோரிக்கையில் நிற்கிறார்கள். எனவே, அதிலே அவர்களையும் சேர்த்துக் கொள்வதிலே அமைச்சரவர்கள் கவனிப்பார்கள் என்றுநம்புகிறேன்.

அருமைச் சகோதரர்கள்—நான் பெயர்களைச் சொல்லவில்லை—சட்டமன்றத்திலே பேசிய சகோதரர்கள் எல்லோருமே பேசினார்கள், 5 ஏக்கரா நிலமாக இருந்தாலும், 1 ஏக்கரா நிலமாக இருந்தாலும், 2 ஏக்கரா நிலமாக இருந்தாலும் உண்மையிலேயே உழைத்து வாங்கியிருப்பானேயானால் அந்த நிலத்திற்கு அரசு பாதுகாப்பு அளிக்கத்தான் வேண்டுமென்பதை அவர்களைப் பின்பற்றி நானும் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

நியாயமான உணர்வோடு பெற்றவர்களை, பினாமி என்ற பெயரால் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. அதிகபட்சம் 5 ஏக்கராக்களுக்கு மேல் போகக்கூடாது. அதை வாங்கியவர் யார்? அதை விற்றவர் யார்? விற்றவர் இந்த அரசாங்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டு விற்றாரா இல்லையா? வாங்கியவரின் அன்றைய நிலைமை என்ன ? எப்படி வாங்கினார்? எவ்வளவு நாளைக்கு முன்னால் வாங்கினார்? என்றைக்கு ரிஜிஸ்தர் செய்யப்பட்டது என்ற விவரங்களிலே முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் இது உச்ச வரம்பு அல்ல, மிச்ச வரம்பு என்ற பெயருக்கு இடம் கொடுத்தது போல் ஆகிவிடக்கூடாது என்று அரசுக்கும், அமைச்சருக்கும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் 5 ஏக்கர் மட்டுமல்ல, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்தபொழுது எப்படிப் பிரித்தார்கள், அந்தக் குடும்பத்தில் என்று வந்தால் 60-க்கு மேல் போகக்கூடாது என்ற நிலையும், 15 ஏக்கரா என்று 72-ல் வந்தபொழுது எப்படி வந்தாலும் 30 ஏக்கராவுக்குமேல் போகக்கூடாது என்ற நிலைமையும், அதையே பின்பற்ற வேண்டுமென்ற நிலைமையையும் நம்முடைய அமைச்சரவர்களும் நினைக்காமல் அது 30 ஏக்கரா என்ற கொண்டு வந்த உச்ச வரம்பாக இருந்தாலும், அது 15 ஏக்கரா என்று கொண்டு வந்த உச்சவரம்பாக இருந்தாலும், அவர்கள் எப்படி பார்டிஷன் செய்திருக்கிறார்கள், உண்மையான சகோதரர்கள் தானா?

[திரு. எல். இளைய பெருமாள்] [1980 ஆகஸ்ட் 8

உண்மையான பேரன் பேத்திகள்தானா அல்லது வேலைக்காரப் பேத்தியா அல்லது வேலை செய்தவன் பேத்தியா என்பது திட்டவட்டமாகத் தெரியாத வரையிலும் அவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதானது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்கிறோம் என்ற பாவமான காரியத்திற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது. நம்முடைய அமைச்சரவர்கள் மிகத் திறமையானர்கள், அனுபவம் உள்ளவர்கள். ஆகவே அதிலும் தஞ்சை மண்ணிலே பிறந்தவர்கள். இவைகளிலே அதிகமான நிலத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு தஞ்சை ஜில்லாவிற்கும், எங்கள் ஜில்லாவாகிய சிதம்பரம் பகுதிக்கும் தான் இதில் மிக உரிமை உண்டு. (குறுக்கீடு) அமைச்சரவர்களே ஏற்றுக் கொண்டதால் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை.

[பிற்பகல் 1–20]

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் புத்தூர் கிராமத்து எஸ்டேட்டைப்பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே, இப்பொழுது நான் சொல்கிறேன், புத்தூர் கிராமத்திலே இருக்கிற நிலைமைகளைத் தீர்க்கமாகச் சந்தித்து, சிந்தித்து, அந்த அதிகாரிகளையும், வாங்கியவர்களையும் எண்ணி, நியாயமான நிலை இருக்குமானால், அப்படிப்படவர்களுக்குக் கொடுப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இன்று காணும்போது, குரு பூஜை என்ற பெயரால், பள்ளிக்கூடம் என்ற பெயரால், கரும்பாலை என்ற பெயரால், இன்னும் தர்மங்கள், அறக்கட்டளைகள் என்ற பெயரால் எழுதி வைத்துவிட்டு, நிலம் கிடைக்காத நிலைமைகள் இருக்கக்கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன், நான் சிதம்பரம் பகுதியைச் சேர்ந்தவன். சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு தமிழகத்திலே உள்ள எல்லா முதலாளிகளும் 60 ஏக்கர் லட்டு, வடை போடு, 20 ஏக்கர் பொங்கல் சாப்பாடு போடு, 3 ஏக்கர் பூ வாங்கிப் போடு என்றெல்லாம் ரெக்கார்டுகள் வைத்துவிட்டுள்ளார்கள். ஆனால், 60 ஏக்கரிலே விளையக்கூடியதற்குக் குறைந்த பட்சம் ரூபாய் 6,000 வரும். ரூபாய் 6,000-க்கு யாரும் லட்டு போடவில்லை, யாரும் போடப்போவதில்லை. ஆனால், ரூபாய் 6,000க்கு வருமானத்தை எழுதி வைத்துவிட்டு, யாரோ ஒருவர் எடுத்துக் கொண்டு, அதை அறக்கட்டளைகள் பெயரால், தெய்வத்தின் பெயரால் என்று சொல்வோமானால், அதற்கு நிச்சயமாக அரசு இடம் கொடுக்கக் கூடாது.



1980 ஆகஸ்ட் 8] [திரு. எல். இளைய பெருமாள்]

இந்த நாட்டிலே நடக்கிற அக்கிரமங்களுக்குக்கும் தெய்வத்திற்கும் சம்பந்தம் கிடையாது. தெய்வத்தை நம்பியவன் இந்தத் தவறைச் செய்ய மாட்டான். நீங்கள் எல்லோரும் நம்பவில்லையென்று நான் யாரையும் குறை கூறவில்லை. ஆனால், தெய்வத்திற்கும் இந்த உலகத்தில் நடக்கின்ற நிலைமைகளுக்கும் சம்பந்தமே கிடையாது. என்று மனிதனுக்கு 6 அறிவு கிடைத்ததோ, என்று மனிதனுக்குப் பகுத்தறிவு என்று சொல்லுகின்ற திறன் வந்ததோ, அன்றிலிருந்து நடக்கின்ற அக்கிரமங்கள் அத்தனைக்கும், அநியாயங்கள் அத்தனைக்கும் நாமே பொறுப்பாளிகளே தவிர, ஆண்டவன் பொறுப்பாளி அல்ல ; ஆண்டவன் பொறுப்பாளி என்று 4 வேதங்களிலே எந்த வேதத்திலும் சொல்லவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டுவேன், நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே.

அருமை சகோதரர் திரு. உமாநாத் கூட, அன்று சொல்கின்ற பொழுது, அவரிடத்திலே நான் தனியாகக் கேட்ட பொழுது, சொன்னதைத்தான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். அவர் கோபிக்க மாட்டார். ஏனென்றால், நாங்கள் இரண்டு பேரும் ஒரு நிலைமைக்குப் போராடுகின்ற நண்பர்கள் என்ற வகையிலே சொல்கிறேன். அவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்—துளு பிராமணத்தைச் சேர்ந்தவர். ஆனால், அதில் நம்பிக்கையற்று வாழ்கிறார் என்பதுதான், அந்தப் பிராமணீயமே இல்லையென்று அவர் சொல்லிக்கொள்வாரானால், அது மிகவும் பாவமான காரியம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அவரிடம், எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், அவர் கொள்கையிலே எனக்கு நம்பிக்கை உண்டு ; ஆனால், அவர் இருப்பது உண்மைதான், ஆகவே, ஆண்டவன் பெயரால்..............

திரு. ரா. உமாநாத் : எனக்குப் பிராமணீயமே இல்லை. சின்ன வயதிலே எனக்குத் தெரியாமல் பேரன்ட்ஸ் நூல் போட்டார்கள். அதையும் நான் தூக்கி எறிந்து விட்டேன், சின்ன வயதிலேயே. நான்,

Marxist ; I am a dialectical materialist.

திரு. எல். இளைய பெருமாள் : நண்பர் அவர்களைப் பற்றி நானே சொல்லி விட்டேன், அவருக்கு நம்பிக்கை இல்லை என்று. அவர் எனக்கு விளக்கம் கொடுத்ததற்காக நன்றியைச் சொல்கிறேன். உண்மையைச் சொல்வதற்காகச் சொல்கிறேனே தவிர, அவருக்கு அந்தக் கொள்கை இல்லையென்பதை நானே சொல்லி விட்டேன்.

[திரு. எல். இளைய பெருமாள்] [1980 ஆகஸ்ட் 8

இதை ஏன் சொல்கிறேன் என்றால், இது போன்ற நிலங்களை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது, பிறகு, இருவார இனாம், மைனர் இனாம், இனாம் எஸ்டேட், இவைகளுக்கு 1963 ஆம் ஆண்டு, காங்கிரஸ் ஆட்சி செய்தபொழுது, வழி வகுத்தது என்பதையும் இந்த மன்றத்திலே சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஆக, காங்கிரஸ் செய்யாதது என்று சொன்ன வார்த்தைகள் மிக பாதகமானது, பாவமானது என்று நான் இங்கு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இதிலே, சட்டத்தைக் காட்டி பயமுறுத்துகின்ற நிலைமை வேண்டாம். ஒரு சமயத்திலே, இங்கே சட்டத்தைக் கொண்டு வந்தோம். நிலச்சீர்திருத்தச் சட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது. அது சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அப்பொழுதுதான் பீகாரிலும், கேரள மாநிலத்திலும் சட்டங்கள் வந்தன. அந்தச் சட்டங்களை ரத்து செய்தார்கள். ஆனால், சென்னை மாநில அரசு சட்டத்தை உறுதி செய்தார்கள். காரணம், நாம் காம்பன்சேஷன் கொடுத்து செய்கிறோம் என்று காங்கிரஸ் ஆட்சி அன்று அவர்களுக்கும் வழி செய்தது. ஆகவே, நம்முடைய சட்டம் உறுதிபெற்றது, ஏனைய சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன. ஆகவே, சட்டத்தைக்காட்டி நீங்கள் பயமுறுத்தத் தேவையில்லை.

இந்தச் சட்டத்தை நிச்சயமாக நான் வரவேற்பது மட்டுமல்ல, கோர்ட்டைக் காட்டி பயமுறுத்துவதும் நல்லதல்ல. கோர்ட்டுக்கு அதிகாரம் இருந்தாலும்கூட, மாமன்றம், மக்கள் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நாம், நியாயமான தீர்ப்பை, நாணயமாக மக்களுக்கு வழங்கவேண்டுமென்று எண்ணிவிட்டால், கோர்ட் தீர்ப்பு வருமானாலும், அந்தத் தீர்ப்பை மாற்றக்கூடிய திறமை, இந்த மாமன்றத்திற்குச் சட்டத்தின் மூலமே, கொண்டு வருகிற வாய்ப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே, நாம் அஞ்சத் தேவையில்லை. ஏழை, எளிய மக்கள் வாங்கிய நிலங்களுக்கு, அவர்களுக்குப் பாதுகாப்பான நிலைமைகளைச் செய்வதிலே, எனக்கு ஆட்சேபணை கிடையாது என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்,

இந்தப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்னதனால், நான் இதை சொல்ல வேண்டியிருக்கிறது. பண்ணையாள் யார் என்பதனை நிர்வகிக்கின்ற பொறுப்பு ஆதரைஸ்டு ஆபீசருக்கு இல்லை. தாசில்தாருக்குக் கொடுக்கப்பட்டது. தஞ்சை ஜில்லாவில் ஒரு பகுதியைத் தவிர, தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் தன்னைப் பண்ணையாள் என்று ரிஜிஸ்டர் செய்யப்



1980 ஆகஸ்ட் 8] [திரு. எல். இளையபெருமாள்]

போனால், தாசில்தாருக்கும் இந்தச் சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை, என்று சொல்லுகிறார்கள். நான் விவசாயத் தோழர்கள் வாழ்கின்ற பகுதியிலே இருக்கின்றவன். எனவே, தாசில்தார்களுக்கு இதுபோல் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று ஒன்றிருக்கிறது. குத்தகைச் சட்டம் என்று ஒன்றிருக்கிறது, வார இனாம் சட்டம் இருக்கிறது, இப்போது 60-க்கு 40 என்பதிலிருந்து 75/25 ஆக்கியிருப்பது ஆகியவைப்பற்றி எல்லாம் உடனடியாக தாசில்தார்களுக்கு தகவல் கொடுப்பது மட்டுமல்லாமல், இதைச் செய்யவேண்டுமானால் தனி ஒரு அதிகாரியிடம் அல்லது வேலை குறைவாக இருக்கிற அதிகாரிகளிடம் கொடுக்க வேண்டும். இதற்கு அதிக பணம் செலவாகும் என்று நினைத்தாலும் நமது ஜில்லாக்களிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு, படித்தவர்களுக்கு, சட்டத்தைப் புரிந்தவர்களுக்கு, இளைஞர்களுக்கு இந்த வேலைவாய்ப்பைக் கொடுத்து, பண்ணையாள் உரிமையைக் காப்பாற்ற, குத்தகை வாரத்தை உறுதிப்படுத்த, இந்த நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சபாநாயகர் அவர்கள் எப்போது நான் முடிப்பேன் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும், அவர் எனக்கு இணக்கமாகவே சொல்லுவார்கள். அவர் மனது புண்படும்படி அதிக நாழி எடுக்க நான் விரும்பவில்லை. ஆகவே, இந்த சட்டத்தை வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது குறித்து, நான் முன்பே சொன்னதைப் போல, ஆஸ்த்துமா நோயாளிக்கு தினம் தினம் மருந்து கொடுத்து நீ சாக மாட்டாய் என்று சொன்னால், அவன் மப்பும், மந்தாரமும் வரும்போது இழுத்துக்கொண்டு அவதிப்படுவான். அதைப் போல எனக்கு முன்பு சிதம்பரம் சகோதரர் பேசியதைப்போல புலி வருகிறது, புலி வருகிறது என்ற நிலைமைக்குப் போகாமல், இது புலி அல்ல இது மனித உரிமைக்கு, மனிதனுக்குச் செய்யக் கூடியது. இந்த மாமன்றத்தில் மக்கள் மதிக்கின்ற பிரதிநிதிகளாக இருப்பதால் நாம் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பத் தேவையில்லை. இங்கேயே அந்த சட்டம் முற்றுப் பெறுவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று எல்லா சகோதரர்களையும் நான் வேண்டிக் கொண்டு; இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு அவையின் நேரத்தைச் சிறிது நீட்டிக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

[1980 ஆகஸ்ட் 8

## 3 அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி).

(ஆ) திருப்பத்தூர் காவல் நிலையத்தருகில் வெடிகுண்டினால் தாக்கப்பெற்று காவல் ஊர்தியில் இருந்தவர்கள் இறந்துள்ளது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூருக்குச் சென்று வந்து, இந்தப் பேரவையில் அறிக்கை ஒன்றைத் தருவதாகத் தெரிவித்தார்கள். அந்த அறிக்கையை நான் இப்போது இந்த அவைக்கு அளிக்கிறேன்.

கதிராம்பட்டியைச் சார்ந்த நடேச நயினார் என்பவர் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாள் அன்று இரவு சமூக விரோத சக்தியால் கொலை செய்யப்பட்டார். இது குறித்து திருப்பத்தூர் தாலுக்கா குற்ற எண் 589/80 குற்றப் பிரிவு இ.பி.கோ. 302, 379 பிரிவில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு தீவிர விசாரணையில் இருந்து வருகின்றது.

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாள் அன்று அதிகாலையில் மேற்சொல்லப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய எதிரியாக கருதப்படுகின்ற பெருமாள் என்பவர் ஏலகிரி மலை அருகே ஒளிந்திருப்பதாக போலீசாருக்கு புலன் கிடைத்தது. ஜோலார்ப்பேட்டை ஆய்வாளர் பழனிச்சாமி தலைமையில் ஒரு காவலர் குழு ஒரு சி.ஐ.டி. அம்பாசிட்டர் காரில் இவரைப் பிடிப்பதற்குச் சென்றது.

இக்காவலர் குழுவில் ஆய்வாளரைத் தவிர, கீழ்க்கண்டோர் இருந்தனர் :—

டி.எஸ்.பி. நான்காம் பட்டாலியனைச் சார்ந்தது.

1. லான்சு நாயக் முருகேசன்.
2. காவலர் 614 ஜேசுதாஸ்.
3. காவலர் 1883 உன்னிகிருட்டிணன்.
4. காவலர் 1825 மாசிலாமணி.

சி.ஐ.டி.—யைச் சார்ந்த ஊர்தி ஓட்டுனர் (காவலர்) பி.சி. 1700, ஏ. முத்துசாமி.



1980 ஆகஸ்ட் 8] (திரு. ச. இராமச்சந்திரன்)

[பிற்பகல் 1-30]

அக்காவலர்குழு ஏலகிரி அடிவாரத்தில் மேற்சொன்ன இவ்வழக்கின் முக்கிய எதிரியான பெருமாளை தேடிச் சென்றபோது பெருமாளையும் வேறுபல குற்றங்களில் ஈடுபட்ட காவலர்களால் தேடப்பட்ட கீழ்க்கண்ட நால்வரையும் கைது செய்தது:—

1. சிவலிங்கம்.
2. இராசப்பா.
3. செல்வம்.
4. சின்னத்தம்பி.

இந்த எதிரிகள் ஐவரையும் போலீசார் சோதனையிட்டு அவர்களிடமிருந்த கத்தி போன்ற ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஆனால் சிவலிங்கம் என்பவர், பின்னால் தெரியவந்தவாறு தனது மறைவிட உள்ளாடையில் (கோவணம்) வெடிகுண்டை ஒளித்து வைத்திருக்கின்றார். அந்த இடத்தில் விரிவாகச் சோதனையிட அச்சூழ்நிலை இடந்தரவில்லை. போலீசார் அங்கெல்லாம் சோதிக்காததால் அங்கே இதைக் கண்டுபிடிக்கவில்லை.

இருட்டு நேரமும் பிடித்து வைத்திருந்த சமூக விரோதிகளை உடனடியாக காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் அவசர உணர்வும் மேலும் தாமதிக்காமல் எதிர்பாராத விளைவுகள் எழலாம் என்ற எண்ணத்தாலும் எதிரிகளை உடனடியாக காரில் ஏற்றி திருப்பத்தூரை நோக்கி புறப்பட்டு வந்து இருக்கின்றனர்.

திருப்பத்தூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு காவலர்கள் எதிரிகளைக் கொண்டு வருகையில் எதிரிகளில் ஒருவரான சிவலிங்கம் தனது மறைவிடத்தில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை எடுத்து காரின் உள்ளே வீசியுள்ளார். வெடிகுண்டு திடீரென வெடித்து புகைமண்டலத்தை எழுப்பியுள்ளது. காரில் ஓட்டுனர் காவலர் முத்துசாமி உடனே வண்டியை நிறுத்தியுள்ளார். இருந்த குழப்பமான நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு சிவலிங்கம் தப்பி ஓடிவிட்டார். ஓட்டுநருக்கு ஓரளவும், மற்றவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு இருக்கின்றது. லான்சு நாயக் முருகேசனும், பி.சி. 614 ஜேசுதாசும், எதிரிகளில் ஒருவரான செல்வமும் இறந்தனர். இந்த நிலையிலும் கூட ஓட்டுநர் முத்துசாமியும், காவலர் 1883 மாசிலாமணியும் தப்பி ஓடிய மற்ற எதிரிகளை தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து விரட்டிப் பிடித்துள்ளனர்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 8

பின்னர் எதிரியைக் காவலர்கள் திருப்பத்தூர் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். காயம்பட்ட ஆய்வாளருக்கு திருப்பத்தூரில் மருத்துவ உதவி அளித்து பின்னர் வேலூருக்கு மேல் மருத்துவ சிகிச்சைக்கு அவர் உடனடியாக அனுப்பப்பட்டார். வேலூருக்கு வரும் வழியிலேயே அவர் இறந்து விட்டார்.

காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட எதிரிகள் காவல் நிலையத்தில் உள்ள நிலையைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் தப்பி ஓடியுள்ளனர். பெருமாள், இராசப்பா, சின்னத்தம்பி ஆகிய மூவரும் இவ்வாறு தப்பி ஓடிய போதிலும் பெருமாளையும் இராசப்பாவையும் மற்றுமொரு காவலர் குழு திருப்பத்தூரின் அருகிலேயே ஒரு இருகல் தொலைவில் நண்பகலில் இரத்தம் ஒழுகிக்கொண்டுள்ள நிலையில் கண்டுள்ளனர். அவர்கள் இருவரையும் மருத்துவ மனைக்கு எடுத்து வந்துள்ளனர். மருத்துவ மனையில் பெருமாள் இறந்திருப்பதாக அறிவிக்கப் பட்டது. இராசப்பா, மருத்துவமனைக்கு வந்த ஏறத்தாழ அரைமணி நேரத்திற்குள் இறந்துபோனார்.

தப்பி ஓடிய சிவலிங்கத்தையும், சின்னத்தம்பியையும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றது. வெடிகுண்டு வெடித்து உயிர்ச்சேதம் ஏற்படுத்தியதற்காக திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண் 572/80-ல் 302, 286, 224, 307, 34 இ.பி.கோ. பிரிவுகளில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல் நிலையத்தில் இருந்து தப்பி ஓடியதற்காக திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 573/80, 224 இ.பி.கோ. பிரிவின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மறைந்த ஆய்வாளர் பழனிச்சாமியின் இறுதிச் சடங்குகள் வேலூரிலும், மறைந்த லான்சு நாய்க் முருகேசனின் இறுதிச் சடங்கு மூலக்கரைப்பட்டியிலும், மறைந்த காவலர் ஏசுதாசின் இறுதிச்சடங்கு திருவட்டாரிலும் போலீஸ் மரியாதையுடன் நடந்தேறியது. உயர் போலீஸ் அதிகாரிகள் இச்சடங்குகளில் பங்கேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூரில் நடந்த ஆய்வாளர் பழனிச்சாமியின் இறுதிச் சடங்குகளில் பங்கு ஏற்றார்.

மறைந்த ஆய்வாளர் பழனிச்சாமிக்கு மனைவியும், இரு பெண் குழந்தைகளும் உள்ளனர். மறைந்த லான்சு நாய்க் முருகேசனுக்கு மனைவியும், மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு



1980 ஆகஸ்ட் 8] [திரு. ச. இராமச்சந்திரன்]

பெண் குழந்தையும் உள்ளனர். மறைந்த காவலர் ஏசுதாசுக்கு மனைவியும், இரண்டு பையன்களும், ஒரு பெண் குழந்தையும் உள்ளனர்.

வேலூரில் இறுதிச் சடங்குகளுக்குப் பின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவலர்களைச் சந்தித்து ஒரு உரையாற்றி, இறந்து பட்ட காவல் துறையினர் குடும்பத்திற்கு தலா ரூ. 50,000 அளித்து, இப்படிப்பட்ட தியாகம் செய்து பொதுமக்களின் நலனைப் பாதுகாக்க, சட்டத்தை அமுல்படுத்த, உயிரையும் மதிக்காது, தன் கடமையாற்றிட இப்படிப்பட்ட தியாகம் செய்த அவர்களின் குடும்பத்திற்கு உதவி செய்வதும், அவர்களின் குடும்ப நலனைப் பாதுகாப்பதும் அரசின் கடமை என்று அறிவித்துள்ளார்.

காயம்பட்டு தீவிர சிகிச்சையில் உள்ள காவலர் மாசிலாமணிக்கும், காவலர் உன்னிகிருஷ்ணனுக்கும், காவலர் ஓட்டுநர் முத்துசாமிக்கும் தலா ரூ. 10,000 அளிப்பதாக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (11—8—1980) காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் தேதியிடப்பெற்ற 143 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

83. தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கழகத்தின் தனி அதிகாரியாக 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ஆம் தேதி முதற்கொண்டு மேலும் ஓராண்டு காலத்திற்கு கால்நடை—

[1980 ஆகஸ்ட் 8

வளர்ப்புத் துறை இயக்குநரை நியமிப்பது குறித்து வேளாண் மைத் துறையின் 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 74 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1957) 16 (7) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

*84. நெருக்கடி நிலைமை அமுல்படுத்துவதற்கு முன்பு 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் தேதி முதல் 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் தேதி வரையிலான கால அளவி நடைபெற்ற அத்துமீறல்களை விசாரணை செய்வதற்கா அமைக்கப்பெற்ற தனிநபர் குழுவான நீதிபதி திரு. டபிள் எஸ். கிருஷ்ணசாமி நாயுடுவின் 5 ஆவது இடைக்கால அறிக் (தமிழ்). [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தி (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமு வைக்கப்பெற்றது.]

85. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1978—79 ஆம் ஆண்டிற்கான 14ஆவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண் நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619- பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

136. தனி நபர் குழுவின் மாவட்ட வருவாய் நிர்வா அறிக்கை திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ். (ஜன 1980).

* 7—8—1980 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.

R3094